நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

சரிநிகர்

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 183 | ஒக். 28 – நவ. 10 1999 | விலை ரூபா 10. 00.



## ஜனாதிபதித் தேர்தல்: படுகொலைக்கு அங்கீகாரம்?



## வீரவிதான: பாசிசத்தின் எழுச்சி!



## பாகிஸ்தான்: மீண்டும் இராணுவ ஆட்சி!



## வடக்கு முஸ்லிம்கள்: வெளியேற்றப்பட்டு 9 ஆண்டுகள்!

1990-1999



நன்றி - நூலகத்திட்டம்



# சர்வ வல்லமை படைத்த வைத்தியர்கள்!

வவுனியா ஆதார வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்ற போதிலும், அவற்றை நிவர்த்தி செய்வதற்கு, அதிகாரம் வாய்ந்த அதிகாரிகளும் சரி, அரசியல்வாதிகளும் சரி முன்வராமல் இருப்பது ஏன் என்பது மர்மமாகவே இருக்கின்றது.

வவுனியாவில் உள்ள அரச வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக இருக்கின்ற போதிலும், ஒரு பொது வைத்தியசாலைக்குரிய அளவையும் விட அதிகமான பொது மக்களுக்குச் சேவையாற்ற வேண்டிய கட்டாய நிலையில் அது இப்போது இருக்கின்றது என்பது என்னவோ உண்மை தான். அதேபோல, அங்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதும் ஒரு பெரிய குறைபாடாகத்தான் உள்ளது. ஆயினும் அங்கு இருக்கின்ற வசதிகள் உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றதா என்பதும், உரிய முறையில் நிர்வாகம் நடைபெறுகின்றதா என்பதும் கேள்விக்குரிய விடயங்களாகவே இருக்கின்றன.

இந்த வைத்தியசாலைக்கு ஒரு ஸ்கேனர் இயந்திரம் இருந்தாலேபோதும் என்ற நிலையில் அங்கு இரண்டு ஸ்கேனர் இயந்திரங்கள் இருக்கின்றன. ஆனால் அவை நோயாளிகளின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. அதற்கு மாறாக, அந்த தேவையை நிறைவேற்றுவதற்காக அங்கு கடமைபுரியும் வைத்திய நிபுணர் ஒருவர் நோயாளிகளைத் தனது தனியார் வைத்தியசாலைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தி வருவது ஒன்றும் இரகசியமல்ல. இந்த நடைமுறையைக் கட்டுப்படுத்துவதற்கு மாவட்ட வைத்திய அதிகாரிக்குப் போதிய அதிகார பலம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், வவுனியாவிலேயே, அலுவலகத்தை வைத்துச் செயற்பட்டு வருகின்ற பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்ன செய்கின்றார்?

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இதே வைத்தியசாலையில் கடமையாற்றியவர் என்பதும், இங்கு பின்னர் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியாகவும் கடமையாற்றியவர் என்பதனால், அவருக்கு இந்த வைத்தியசாலையின் வளங்கள் பற்றிய அறிவு தாராளமாகவே இருக்க வேண்டும் என்பதில் சந்தேகம் கிடையாது.

ஏனைய வைத்தியசாலைகளில் சிற்றூழியர்கள் தான், அரசியல் மற்றும் தொழிற்சங்க பலமுடையவர்களாக இருக்கின்றார்கள். சில இடங்களில், அவர்களுக்கே, வைத்தியர்கள் தொடக்கம் அனைவரும் கட்டுப்பட வேண்டியவர்களாக இருப்பதைக் காண முடிகின்றது. ஆனால், வவுனியா ஆதார வைத்தியசாலையிலோ நிலைமை தலைகீழாக இருக்கின்றது. இங்கு வைத்தியர்கள் தான் சர்வ வல்லமை படைத்தவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் வல்லமை உடையவர்களாக இருப்பதில் பொது மக்களுக்கோ, அல்லது வைத்தியசாலையின் ஏனைய ஊழியர்களுக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இருக்க வேண்டியதில்லை. ஆனால், இவர்களுடைய பலமானது, இங்குள்ள பொது மக்களுக்கு நன்மை கிடைக்கக் கூடிய வகையில் பயன்படாமலிருப்பது தான் கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது.

கடந்த 9 ஆம் திகதி வவுனியா பஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்கள் 11 பேரும், வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்ட அதேவேகத்தில் அனுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்கள் அனுராதபுரத்திற்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டதில் தவறேதும் கிடையாது. ஆனால், அவர்களில் எத்தனை பேருக்கு மேல் சிகிச்சை தேவையாக இருந்தது என்பது தான் கேள்வி.

ஓரிருவரைத் தவிர ஏனையவர்கள் அனைவருக்கும் சிறுகாயங்களே ஏற்பட்டிருந்தன.

அனுராதபுரத்திற்கு அனுப்பி, அங்கு அவர்களுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கவில்லை. ஏனெனில் அனுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களில் எட்டுப்பேர் மறுநாளே, அனுராதபுரத்தில் இருந்து மீண்டும் வவுனியாவுக்கே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்கள். அனுராதபுரத்தில் உள்ள வைத்தியர்களும், முக்கிய தாதிகளும் இவர்களை வவுனியா வைத்தியர்கள் ஏன் அங்கு அனுப்பி வைத்தார்கள் என்பது குறித்து கேள்வி எழுப்பியதுடன், அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டமைக்காக நோயாளிகளிடம் வவுனியா வைத்தியசாலையினரின் பொறுப்பற்ற செயலைக் கண்டித்துள்ளார்கள்.

குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டதும், அவர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டதும், உடனடியாக அம்புலன்ஸ் வண்டிகளில் ஏற்றி அனுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். இவ்வாறு அனுப்பி வைக்கப்படுவதற்கு முன்னர், பொறுப்பான வைத்திய அதிகாரி, அவர்களைப் பார்வையிட்டதாகத் தெரியவில்லை.

வவுனியாவில் இருந்து நோயாளிகள் அனுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதில் எந்தவிதமான சிரமங்களும் வைத்தியசாலையைச் சேர்ந்த அதிகாரிகளுக்குக் கிடையாது. ஆனால், அங்கு செல்கின்ற நோயாளிகள், பெரும்பாலான வேளைகளில், உரிய முறையில் வைத்திய கவனிப்பிற்கு உட்படுத்தப்படுவதில்லை. அதாவது, போர் முனைகளில் தாக்குதல்கள் நடைபெற்று அவசர அவசரமாகக் கொண்டு வரப்படுகின்ற இராணுவத்தினரைக் கவனிக்க நேரிடுகின்ற பல சந்தர்ப்பங்களில் இந்த நோயாளிகள் முற்றாகவே அலட்சியப்படுத்தப்படுவதாக அங்கு சிகிச்சைக்காகச் சென்று வந்தவர்கள் பலரும் தெரிவிக்கின்றார்கள்.

மறுபக்கத்தில், அனுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களைப் பார்ப்பதற்காக அவர்களுடைய பல உறவினர்கள் அங்கு செல்ல முடியாதவாறு, வவுனியாவில் நடைமுறையில் உள்ள பாஸ் நடைமுறைகள் தடையாக இருக்கின்றன. இந்தத் தடைகளைத் தாண்டி, கஷ்டங்கள் பலவற்றிற்கு உட்பட்ட நிலையிலேயே உறவினர்கள் தமது நோயாளிகளான உறவினர்களைச் சென்று பார்வையிட வேண்டியிருக்கின்றது. இந்த நிலையில், மேல் சிகிச்சை தேவையில்லாதவர்களை வவுனியா வைத்தியர்கள் என்ன காரணத்திற்காக அங்கு அனுப்பி வைக்கின்றார்கள் என்பது தெரியவில்லை.

வவுனியா வைத்தியசாலையில் உள்ள வார்டுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்ற அப்பாவிகளான நோயாளிகளிடம் வைத்தியர்கள் தொடக்கம், பரிசாரகர்கள் வரையில் பலர், நோயாளிகளைக் கவனிக்க வேண்டிய வகையில் இதமாகவோ, இங்கிதமாகவோ நடந்து கொள்வதில்லை என்பது குறித்து பெரும்பாலான நோயாளிகள் குறை கூறுகின்றார்கள்.

கடுஞ்சொற்களைப் பயன்படுத்துவது, உரிய வேளைகளில் நோயாளிகளுக்குத் தேவையான கவனிப்புகளை மேற்கொள்ளாதது போன்றவற்றை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

வவுனியா வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறையானது, வைத்தியர்கள் தொடக்கம், சிற்றூழியர்கள் வரையில் அதிகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும் இடம்பெயர்ந்த நிலையில் பல்வேறு தாக்கங்களினால், உடல் நலம் பாதிக்கப்பட்டு நோயாளிகளாகுபவர்களுக்கும், தாக்குதல்கள் குண்டுவெடிப்புகள் போன்ற அசம்பாவிதங்களில் காயமடைகின்றவர்களுக்கும் உரிய முறையில் வைத்திய சேவைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் மறுக்க மாட்டார்கள். அதற்கேற்ற வகையில் அவர்கள் நடந்துகொள்ள வேண்டும் என்பதே பொதுமக்களின் தேவையாக இருக்கின்றது.

-துரை

# பொலிஸ் அரணுக்குள் குண்டு!

ஒக்டோபர் 24ம் திகதி காலை 8 மணிக்கு திருகோணமலை மூன்றாம் கட்டைச் சந்தியிலுள்ள காவலரணில் இரு கிரனைட்டுக் கள் திடீரென வெடித்தன. இரு ஆண் பொலிசாரும் ஒரு பெண் பொலிசும் காயமடைந்தனர். ஆண் பொலிசார் இருவரும் உடனடியாகக் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இக் குண்டுவெடிப்பு வழக்கம் போல விடுதலைப் புலிகளின் நடவடிக்கை என முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. அவ்வாறெனின் திருக்கோணமலை நகர எல்லையிலுள்ள இரண்டு காவலரண்கள் இம்மாதம் விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்டிருக்கின்றன எனக் கூறலாம்.

கண்டி அநுராதபுர நெடுஞ்சாலைகளின் நகர நுழைவாயிலான அநுராதபுரச் சந்திக் காவலரண் இம்மாத ஆரம்ப தினத்தில் தாக்கப்பட்டது. இப்போது வடபுறக் கிராமங்களின் நகர நுழைவாயிலான மூன்றாம் கட்டைக் காவலரண் தாக்கப்பட்டிருக்கிறது.

இத்தாக்குதலையடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டன. காவலரண்கள் மாற்றியமைக்கப்பட்டன. சில இடங்களில் புதிதாக முளைத்தன. போதாக்குறைக்கு ஊர்காவல் படையினரும் "ஸ்டைலாகக்" கடமை புரிகின்றனர். சோதனைச் சாவடிகளிலும் "கடுமை" காட்டப்படுகின்றது.

இவ்வளவையும் மீறி பொலிசாரின் அரணுக்குள் குண்டுகளை விடுதலைப்புலிகள் புதைத்து வைத்திருக்கிறார்கள் எனில் இது பாதுகாப்புத் தரப்பாரின் பலவீனத்தைத் தான் காட்டுகின்றது என்பதை தவிர வேறெதுவும் கூற முடியவில்லை.

# தண்டனை அவர்களுக்கு மட்டுமே!

சமாதான நகரப் பிரஜைகளுக்கு இராணுவம் மீண்டுமொரு முறை அடையாள அட்டைகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

வெளியூரிலிருந்து சமாதான விரோதிகள் யாராவது நுழைந்து அமைதித் தென்றல் வீசிக் கொண்டிருக்கும் சமாதான நகரில் குழப்பம் விளைவித்துவிடாமல் பாதுகாப்பதற்கே இந்த அடையாள அட்டைகள்.

இரண்டு வருடங்களுக்குள்ளாகத் தான் இங்கு இரண்டாவது தடவையாக இராணுவ அடையாள அட்டைகள் புதுப்பிக்கப்பட்டிருந்தன.

பதினைந்து வயதிற்கு மேற்பட்ட எல்லாப் பிரஜைகளுக்கும் இது வழங்கப்பட்டதால் புகைப்படச் செலவு, அடையாள அட்டைக்கான செலவு, நேர அலைச்சல் என்று குடும்பத் தலைவர்கள் படாதபாடுபட்டுப் போனார்கள். இப்போது வழங்கப்படவிருப்பது மூன்றாவது வெற்றிகரமான அடையாள அட்டைகள்.

எல்லோரும் சமாதானமாக இருக்க வேண்டுமென்பதால் இம்முறை அடையாள அட்டை பெறுவோரின் வயது பன்னிரண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரிடம் சென்று விண்ணப்பப்படிவம் பெறுதல், ஆளொருவருக்கு 35 ரூபா தொடக்கம் 50 ரூபா வரை கொடுத்து புகைப்படம் எடுத்தல், கிராம சேவகரிடம் சென்று வருதல், ஒவ்வொரு அடையாள அட்டைக்கும் ரூபா 15 செலுத்துதல் எனக் குடும்பத் தலைவர்கள் இப்போது சமாதானத்தைக்காக்க ஓடுபட்டுத் திரிவது சமாதான நகரின் சாதாரணக் காட்சிகளாகவுள்ளன.

எவர் வந்து சமாதானத்தைக் குழப்பினாலும் அதற்கான தண்டனைகள் - அடையாள அட்டைகள் பெற்றிருந்தாலும் கூட - சமாதான நாட்டுத் தமிழ்ப்பிரஜைகளுக்கு மட்டும் தான சொந்தம் என்பதை மறந்து விடக்கூடாது.

# பொலிஸ் நடவடிக்கை எடுக்குமா?

மீண்டும் அமைச்சர் ரத்வத்தையாரின் மகன் கொலைப் பயமுறுத்தலில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் தலதா மாளிகையின் நிலமேக்கும் பாதுகாப்பு அமைச்சரின் சகோதரரான டெனிஸ் ரத்வத்தேக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் போது அங்கிருந்த பிரதிபாதுகாப்பு அமைச்சரின் மகன் லோஹான் ரத்வத்தை நிலமேயை கொலை செய்யப் போவதாக பயமுறுத்தியதாகக் கண்டி கட்டுகஸ்தோட்ட பொலிஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன.

தலதா மாளிகையின் நிலமே பதவியில் இருக்கும் டெனிஸ் ரத்தவத்தை மீண்டும் அப்பதவியில் இருப்பதற்கு ஆசைப்பட்டார். ஆனால், மாளிகாவை சட்டப்படி ஒருவர் 70வயதை அடைந்து விட்டால் மீண்டும் அப்பதவிக்கு போட்டியிட முடியாதென்பதே விதி. இவரது இந்த விருப்பத்தை ஆதரித்துப் பேசுமாறு கொலைப்பயமுறுத்தலுக்குள்ளான வலிசுந்தர நிலமே கேட்கப்பட்டார்.

ஆனால், வலிசுந்தர நிலமே மாளிகாவை விதிமுறையை எடுத்துக்கூறி, தான் இதற்கு ஆதரவு அளிக்கப்போவதில்லை என்று கூறியபோது, டெனிஸ் ரத்வத்தேக்கும் நிலமேக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இந்த வாய்த் தர்க்கத்தின் போது "நீ பெரிய வாய்க்காரன் உன்னை மீனைக் கொல்வதுபோல் கொன்றுவிடுவேன்" என்று டெனிஸ் அவரில் பாய்ந்து விழுந்தார்.

அவ்வேளை அங்கு இருந்த லோஹான் ரத்வத்தை தனது மாமனுக்குச் சார்பாக கையில் இருந்த பிஸ்ரல் மாதிரி ஒன்றை உயர்த்திக் காட்டி "உன்னைச் சுட்டுக் கொன்று போடுவேன்" என்று வலிசுந்தர நிலமேயை மிரட்டினார்.

இச்சம்பவம் கட்டுக்கஸ்தோட்டயில் உள்ள மகாவலி ஹோட்டலில் ஏற்பாடாகியிருந்த இரவு விருந்தின்போது இடம்பெற்றது. இவ்விருந்துக்கு முன்னர் நடைபெற்ற கூட்டத்திற்கு டெனிஸ் ரத்வத்தை தலைமை தாங்கினார்.

இச்சம்பவத்தின் பின்னர் தனது உயிருக்கு அஞ்சிய வலிசுந்தர நிலமே அவ்விடத்தை விட்டுச் சென்று பொலிசுக்கு முறைப்பாடு செய்துள்ளார். மேற்படி குற்றஞ்சாட்டப்பட்ட லோஹான் ரத்வத்தை ஏற்கெனவே சிலகாலங்களுக்கு முன்னர் கொழும்பு, கசினோ களரி ஒன்றில் றகர் விளையாட்டு பயிற்றுனராக பிறநாட்டில் இருந்து வந்திருந்த ஜோல் பெரா (Joel Pera) என்பவரைக் கொலை செய்த குற்றஞ்சாட்டில் இருந்து அண்மையிலேயே மீண்டு வந்தவராவார். இது பற்றி வலிசுந்தர நிலமே 'சண்டே லீடருக்கு'த் தெரிவித்த போது "இது தொடர்பாக பொலிஸ் எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டாது என்று எனக்குத் தெரியும். காரணம் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரின் மகனாக அவர் இருக்கும்போது இது நடைபெறமாட்டாது" என்று சொன்னார்.

நன்றி:சண்டே லீடர்

நன்றி - நூலகத்திட்டம்



## ஜனாதிபதித் தேர்தல்:
# வேட்டுக்களை பரிசாகத் தந்தவர் வோட்டுக் கேட்டு வருகிறார்!

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் நிகழ்கின்றன. ஜனவரி மூன்றாம் வாரத்துக்கு முன்னர் புதிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டு விடுவார்.

இலங்கையில் எந்தப் பிரச்சினை நடந்தாலும் அரசியல்வாதிகள் தங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதில் பின்னிற்க மாட்டார்கள் என்பதற்கு ஜனாதிபதித் தேர்தல் ஒரு சாட்சி. அனுதாபச் சூழலையும் பலத்த வாக்குறுதிகளையும் மூலதனமாக வைத்து கறைபடியாத நிலையில் ஜனாதிப்திப் பதவியை- மற்றெல்லா ஜனாதிபதிகளைக் காட்டிலும்- அதிக வாக்குகளுடன் கைப்பற்றிக் கொண்ட சந்திரிகா, நாட்டை அழிவுப் பாதைக்கு மேலும் இழுத்து விட்டு தமிழ் மக்களுக்கு முதுகில் குத்திய பெருமையுடன் உரிய காலத்துக்கு ஒரு வருடத்திற்கு முன்னதாகவே தேர்தலுக்குத் தயாராகியுள்ளார்.

ஒரு வருடத்திற்குள் ஜனாதிபதிப் பதவியை ஒழிப்பேன் என்ற பரபரப்பான வாக்குறுதியுடன் வந்து பதவி சுகத்தில் கட்டுண்டு ஐந்து வருடங்களாக நாட்டைக் குட்டிச் சுவராக்கிய சந்திரிகா மீண்டும் ஒரு ஆறு வருடங்கள் தருமாறு மக்களிடம் பவ்வியமாக ஆணை கேட்டு நிற்கிறார். தமிழர் தரப்பிலோ சிங்களவர் தரப்பிலோ எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றாமலேயே சாதுரியமாக ஐந்து வருடங்களைக் கழித்தவர் இன்றைய ஜனாதிபதி.

சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சி வேறுபாடுகளை மறந்து கைகட்டி வாய் புதைத்து துணை நிற்கும் அளவுக்கு அரசியல் சாணக்கியம் கொண்டவர் சந்திரிகா. புலிகளுடன் பேச்சுவார்த்தை என்று ஆரம்ப நாட்களில் எந்தவித உள்நோக்கமுமின்றி நாடகமாடி இன்று வரை தமிழ் தலைவர்களைத் தனக்கெதிராக வாய் திறக்க முடியாத வகையில் கட்டிப் போட்ட பெருமை ஜனாதிபதிக்குண்டு.

கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் சந்திரிகாவுக்கு தங்களாகவே மனமுவந்து வாக்குப் போட்டதற்கு பல காரணங்கள் உள. மனித நேயங்கொண்ட விஜயகுமாரதுங்கவின் மனைவி, இளந்தலைமுறை அரசியல்வாதி,



கறைபடியாதவர், கணவன் சிறையில் இருந்த போது வெலிக்கடை வாசலில் பல மணி நேரம் தவமிருந்து கணவனைப் பார்த்த அனுபவம் உண்டெனக் கூறியதால் பெண்களின் துயருணர்ந்தவர், தந்தையையும் கணவனையும் வன்செயலுக்குப் பலி கொடுத்தமையால் வன்முறையில் இயல்பாகவே வெறுப்புற்றவர் என்பவை போன்ற பல தகைமைகள் அவரை மற்றைய வேட்பாளரை விட ஒரு படிமேல் தமிழ் மக்கள் மத்தியில் இடம்பிடிக்க வைத்தது. இதனால் தான் அவர் 62 சதவீதத்திற்கும் கூடுதலான வாக்குகளுடன் ஜனாதிபதியானார்.

ஆனால் மக்கள் எதிர்பார்ப்புகள் எவையும் இவர் காலத்தில் நிறைவேற்றப்படவில்லை. மாறாக தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் அதிக வெறுப்பைச் சம்பாதித்துள்ள இன்றைய அரசியல்வாதி சந்திரிகாவே எனில் மிகையன்று. தமிழ் மக்கள் விடயத்தில் கொடுங்கோலர்களாக நடந்த இவரது பெற்றோரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாக்களித்த மக்களுக்கு வேட்டுக்களைப் பரிசாகக் கொடுத்திருக்கின்றார். தமிழ் மக்கள் மீது எவ்வித தயவு தாட்சண்யமும் இல்லாத ஒரு சிங்கள ஜனாதிபதியாகவே இவர் திகழ்ந்துள்ளார்.

பாதுகாப்புப் பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் கோமாளித் தனங்களுக்கெல்லாம் ஆமாம் சாமி போட்டிருக்கிறார். யாழ்ப்பாண வெற்றிச் செய்தியை ஓலை மூலம் கையளிக்க அதைப் பெற்று அந்நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் ஒளிபரப்பி சாதாரண சிங்கள மக்களுக்கு கற்பனைத்தனமான வெறியை ஊட்டி அரசியல் ஆதாயம் காணத் துடித்திருக்கிறார். தமிழ் மக்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்ட ஒரு ஆட்சிக் காலம் இவருடையது.

ஆனால் அதிர்ஷ்டகரமான விஷயம் என்னவென்றால், எந்தவொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரும் இவரை எந்தக் கட்டத்திலும் பிழையானவர் என்று சொல்லாமல் இருந்தது தான். இவரது கபடத்தனங்களும் இயலாமைகளும் அரசியல் அநாகரிகங்களும் ஒத்துழைப்பு இன்மை என்ற பழியாகி புலிகள் மேலும் எதிர்கட்சி மேலும் விழுவதற்கு எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சி வேறுபாடுகளை மறந்து துணை நிற்கின்றார்கள்.

-திரிபுரன்

அதிகாரமும் வல்லமையும் இருந்தாற் கூட தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்த ஜனாதிபதியுமே விரும்பமாட்டார்



என்பதற்கு ஜே.ஆரும், பிரேமதாசாவும் நல்ல சாட்சிகள். ஆனால் சந்திரிகா போதிய வல்லமை இல்லாத நிலையிலும் வல்லமை இருப்பதாகக் காட்டித் தமிழ் மக்களை நன்றாகவே ஏமாற்றியிருக்கிறார். இந்த ஏமாற்று விளையாட்டுக்குத் தமிழ் தலைவர்களும் துணை போயிருக்கின்றனர்.

'அதிகாரத்தைத் தாருங்கள் மூன்று மாதங்களில் தமிழ் பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறேன். இல்லையேல் பதவி விலகுகிறேன்' என்று புதிய கோஷத்தை முன்வைத்து இப்போது வாக்குக்காக நிற்கிறார் சந்திரிகா. உண்மையில் இவரிடம் நேர்மை இருந்திருந்தால் ஆரம்ப நாட்களிலேயே விடுதலைப்புலிகளையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் வழிக்குக் கொண்டு வந்திருக்க முடியும். நாட்டின் விடிவில் உண்மையான அக்கறை இருந்திருப்பின் ஐ.தே.க.வை சாடுவதையும் தங்களை பரமாத்மாக்களாகக் காட்டிக் கொள்வதையும் தவிர்த்திருக்கலாம். ஆனால் எதுவும் இதய சுத்தியுடன் நடைபெறவில்லை. போரைத் தொடர்ந்து நடத்தி நாட்டைப் பதற்ற நிலையில் வைத்திருந்து அரசியல் ஆதாயம் காண்பதற்கான முயற்சிகளாக இவரது ஒவ்வொரு நடவடிக்கையும் அமைந்திருக்கின்றது.

அப்பாவிச் சிங்கள இளைஞர்களை யுத்தத்திற்குப் பலி கொடுத்து விட்டு போரில் வெற்றியை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற பிரமையை சிங்கள வாக்காளர்களிடையே ஏற்படுத்தி வாக்குகளைக் கவருவது தான் இப்போதைய இவரது திட்டமாகும். இந்தத் திட்டத்திலும் அவர் சிங்கள மக்கள் மத்தியில் ஓரளவுக்கு வெற்றியும் பெறக் கூடும்.

ஆனால் இத்தகைய அநியாயங்களுக்குப் பிறகும் சந்திரிகாவை அடுத்த ஜனாதிபதியாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கி உழைக்க இரண்டு தமிழ் பேசுந் தரப்புக் கட்சிகள் முன் வந்தமை அவர்களது நேர்மையைக் காட்டுகின்றது. ''எவர் ஆட்சிக்கு வந்தாலும் எனக்கு அமைச்சர் பதவி'' என்பதே இவ்விரண்டு கட்சித் தலைவர்களினதும் ஒரே நோக்கம். எனவே அந்த வகையில் அது சரி.

ஏனைய தமிழ் தலைமைகளோ திண்டாடிக் கொண்டிருக்கின்றன. சந்திரிகாவை நேரடியாக ஆதரித்தால் மானங்கெட்டவர்கள் என்ற பட்டம் தமிழ் மக்களால் சூட்டப்பட்டுவிடும் என்ற பயம் ஒருபுறம், சந்திரிகாவை ஆதரிக்க மாட்டோம் எனச் சொன்னால் அவரது கோபத்துக்குள்ளாக வேண்டி நேரிடுமே என்ற கவலை ஒரு புறமாக இவர்களை ஆட்டிக் கொண்டிருக்கின்றது. தமிழ் மக்கள் மத்தியில் வீரர்கள் போல் பேசிக் கொண்டாலும் எவர் ஜனாதிபதியாகிறாரோ அவரிடம் சலுகை பெறலாம் என்ற நப்பாசை தமிழ்த் தலைமைகளிடம் இல்லாமல் இல்லை.

இந்தவகையில் தமிழ்க்கட்சித் தலைமைகள் எந்த முடிவையும் எடுக்கப் போவதில்லை. மாறாக தமிழ் மக்களுக்கு ஜனநாயக சுதந்திரத்தை வழங்கி ''நீங்கள் விரும்பி வாக்களியுங்கள்'' என்று மதில் மேல்

-17

## ஜனாதிபதித் தேர்தல்:
# சந்திரிகா போட்ட புதிய குண்டு!

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா, ஜனாதிபதித் தேர்தலை வைக்கப் போவதாக திடுதிடுப்பென அறிவித்ததன் மூலம் ஓர் அதிர்ச்சிக் குண்டொன்றைத் தூக்கிப் போட்டுள்ளார்.

தனது ஆட்சிக்காலம் முடிவடைய இன்னும் ஒரு வருட காலம் இருந்தும், திடீரென இவ்வருட முடிவுக்குள் ஜனாதிபதித் தேர்தலை வைக்கப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அறிவித்தது அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதோடு, அதற்கான காரணங்களும் பலவகையாகப் பேசப்படுகின்றன.

ஏன் இந்தத் திடீர் அறிவித்தல்

எதிர்க்கட்சியினரோடு ஒப்பிடும்போது ஜனாதிபதியின் செல்வாக்கு இன்னும் பெரிய அளவு சரிவுக்குள்ளாகவில்லை என்றே சொல்ல வேண்டும். அதனால் அவர் ஜனாதிபதித் தேர்தல் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளாதவராகவே இருந்தார். மாமன் காட்டிய வழியில் புலிகளின் முதுகெலும்பை முறித்து, தமது அரைகுறைத் தீர்வை தமிழ் மக்கள் மத்தியில் திணித்து விடுவதையே இவர் அண்மைக்காலம் வரை நம்பியிருந்தார் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. அந்தக் கனவில் தான் இந்துப் பத்திரிகைக்கு பேட்டியளித்த போது புலிகளுடன் தான் பேசப் போவதில்லை என்றும், பிற நாடுகளின் மத்தியஸ்தம் தேவையில்லை என்றும் அழுத்தம் திருத்தமாக அறிவித்திருந்தார். இன்னும் மகியங்கன, மொனராகலை பிரதேசத்து மட்டங்களோடு செய்மதியூடான பேட்டியின் போது, பொதுத் தேர்தல்கள் பற்றித் தான் பிரஸ்தாபித்திருந்தார். அதற்காகத் தனது பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு தேவைப்படுவது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலமே என்றும் இதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை ஏற்படுத்த முடியும் என்றும் கூறியிருந்தார். இந்தப் பொதுத் தேர்தலுக்கு வாய்ப்பாக மக்களைத் தம் பக்கம் திரட்டச் செய்யும் நோக்கோடு அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசிகளைக் குறைக்கும் வரவு செலவு திட்டம் ஒன்றையும் அடுத்த மாதம் சமர்ப்பிக்கப் போவதாகவும் அறிவித்திருந்தார்.



ஆனால் சமர்ப்பிக்கப்படவிருந்த வரவு செலவுத் திட்டம் ஒத்திப் போடப்பட்டது. கூடவே ஜனாதிபதித் தேர்தலும் திடீரென அறிவிக்கப்பட்டது. ஏன் இந்தத் திடீர் மாற்றம்?

சி.பி.டி சில்வா, புத்தரக்கித்த வழியில் உள் சதி

ஜனாதிபதியின் போக்கோடு

எம்.பி.எம்.

அண்மைக் காலத்தில் முரண்டுபட்டு வந்த சில அமைச்சர்கள் கட்சி உறுப்பினர்கள் மேற்படி வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிப்பதன் மூலம் அரசாங்கத்தைத் தோற்கடிக்கும் நோக்கோடு செயல்படுவது ஜனாதிபதிக்கு அவரது அந்தரங்க சகாக்களால் எடுத்துக் கூறப்பட்டது. அவ்வளவு தான். அவர் தான் முன்னறிவித்த வீரப்பிரதாபப் பேச்சுக்களையெல்லாம் கைவிட்டு ஜனாதிபதித் தேர்தலை நடாத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானார். இதனால் தான் அலரி மாளிகையில் அமைச்சரவை கூடிய போது, "சி.பி.டி. சில்வா, புத்தரக்கித்த போன்றவர்கள் சென்ற வழியில் எமக்கு எதிராகச் செல்லும் சக்திகளை நான் அறிவேன்'' என்று அங்கிருந்தவர்களை எச்சரிப்பது போல் தனது பேச்சின் போது கூறினார்.

கூடவே இந்துப் பத்திரிகைக்கு கொடுத்த பேட்டிக்கு மாறாக "புலிகளுடன் பேசாது நிரந்தரமான சமாதானம் ஏற்படாது" என்று தனது பேச்சையும் மாற்றிக் கொண்டுள்ளார்!

இது ஜனாதிபதித் தேர்தலுக்கு சிறுபான்மை மக்களின் வாக்குகளை கவர்ந்திழுப்பதற்கான தந்திரோபாயப்



பேச்சு என்பதை அரசியல் அவதானிகள் கணித்துள்ளனர். உண்மையாகவே சிறுபான்மையினரில் இவர் அக்கறை கொண்டுள்ளவராகவே இருந்திருந்தால் சமவாய்ப்புச் சட்ட மூலத்தை வாபஸ் பெற்றிருக்க மாட்டார் என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். எவரும் சந்தர்ப்பவாத அரசியலில் இருந்து தப்புவதில்லை என்பதற்கு ஜனாதிபதியின் போக்கு நல்ல உதாரணம்.

தேர்தலை முன்வைத்த வியூகம்

ஜனாதிபதி அம்மையார் ஜனாதிபதித் தேர்தலை அறிவித்தாரோ இல்லையோ, அவ்வளவு அமைச்சர்மாரும் ஓரணியில் திரண்டு அவருக்கு மலர்ச்செண்டு அன்பளித்துள்ளனர். சதித்திட்டங்கள், குரோதங்கள் யாவும் மலர்ச்செண்டுக்குள் பதுக்கப்பட்டுவிட்டன.

ஜனாதிபதி தன் நிலையை சுத்தப்படுத்தி, சுதாகரித்துக் கொண்டதும் அடுத்த தனது தேர்தலுக்கு வெற்றி வாய்ப்பை வழங்கும் அணிகளையும் அவர் உள்வாங்கி வியூகம் அமைக்கத் தொடங்கி விட்டார். இதில் முக்கியமாக மலையக மக்களின் வாக்கு வங்கியைத் திறந்து விடும் தொண்டமான், வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் வாக்குகளை ஒன்று திரட்டும் அஷ்ரஃப், தமிழ் மக்களின் வாக்குகளை ஓரளவு திரட்டிவிட முனையும் டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் எல்லாம் அம்மையாரின் குற்றேவல் புரிவதற்காய் இப்பொழுதிருந்தே ஒத்தாசை வழங்கியுள்ளனர்.

ஏனைய கட்சிகள்

ஏனைய தமிழ்க் கட்சிகளான ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகியவை

-17

நன்றி - நூலகத்திட்டம்



# பாகிஸ்தானின் அவலம்:
# மூன்றாவது தடவையாகவும் இராணுவ ஆட்சி!

பாகிஸ்தான் மீண்டும் ஒருமுறை பெரும் நெருக்கடிக்குள்ளாகி விட்டுள்ளது. அது இப்போது இராணுவச் சட்டத்தின் கீழ் ஆளப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட பிரதமரான நவாஷ் ஷெரிப், அவரது சகோதரர் ஷாபாஷ், உளவுத்துறைத் தலைவர் ஜெனரல் ஷயாவுதீன் ஆகியோர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 1947இல் அது உருவாக்கப்பட்ட காலம் முதலாக பாகிஸ்தான் அரசு உறுதியான ஜனநாயக நிறுவன அமைப்பை உருவாக்க முடியாத நிலையிலேயே இருந்து வந்திருக்கிறது. இதற்கான காரணம் மிகவும் இலகுவானது. 1951இல் இருந்து, நடந்து வந்த பனிப்போரில் பாகிஸ்தான் ஒரு அமெரிக்கப் பகடையாக செயற்பட்டு வந்திருக்கிறது. வாஷிங்டனைப் பொறுத்தவரை, அப்பிராந்தியத்தில் தனது நலன்களைப் பேணிப்பாதுகாக்க இராணுவமே சிறந்த ஒரு சக்தி என்று கருதியது. ஜெனரல் அயூப்கானின் (1958-1969) சர்வாதிகாரம் இறுதி மூன்று மாதகால ஜனரஞ்சக கிளர்ச்சியினால் தூக்கியெறியப்படும்வரை அமெரிக்காவினால் வெளிப்படையாகவே ஆதரிக்கப்பட்டு வந்தது. ஜெனரல் ஷியா உல் ஹக்கின் அரக்கத்தனமான அணியின் (1977-1989) ஆட்சியானது பென்ரகனாலும் பாதுகாப்பு உளவுத்துறையினாலும், ஆப்கானிஸ்தானில் இருந்த ருஷியர்களுக்கு எதிராகச் செயற்படுவதற்கு ஒரு தரகராகப் பயன்படுத்தப்படுவதற்காக ஆதரவளிக்கப்பட்டு வந்தது.

மூன்றாவது தடவையாக, வேதனையூட்டும் அதன் வரலாற்றில், பாகிஸ்தான் இப்போது திரும்பவும் இராணுவ ஆட்சிக்கு உள்ளாகியிருக்கிறது. இந்தத் தடவை சற்று மாறுபாடாக அமெரிக்க ஆலோசனைகளுக்கு எதிராக இந்தச் செயல் நடந்திருப்பதாகக் கருதப்படுகிறது. மக்களைப் பொறுத்தவரை, தமது பிழைப்புவாத அரசியல் தலைவர்களது தலைவிதி குறித்து நம்பிக்கையற்றவர்களாக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில், எந்த வேறுபாடும் அற்றவர்களாக இருக்கிறார்கள். தொடர்ச்சியாக இருந்து வந்த அரசாங்கங்களால் அங்கு நிலவிய ஊழல் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் போனது குறித்துப் பரவலான அதிருப்தி நிலவுகிறது. பல ஆண்டுகளாக அரச நிர்வாகத்தில் நிலவி வரும் அழுகல் நிலை இன்று தேசிய அளவில் பேசப்படும் ஆபாசமாக மாறியுள்ளது. அரசியல்வாதிகள் தமது பணப்பைகளை நிரப்பிக் கொள்வதில் மிக்வும் வேகமாக செயற்படுவதால் அவர்களுக்கு நாட்டினதும், மக்களதும் நலன்கள் பற்றிச் சிந்திக்கக் கொஞ்சம் கூட நேரம் இருப்பதில்லை.

1977இல், தன்னால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதியினாலேயே தான் தூக்கியெறியப்படும் ஒரு நிலைக்கு பிரதமர் பெனாசிர் பூட்டோ உள்ளாகிய அரண்மனைச்சதி ஒன்று நடைபெற்றது.. பிரதமரும் அவரது கணவர் செனட்டர் அசிவ் ஷாடரியுமாக சேர்ந்து பிரதமரின் இல்லத்தை தனிப்பட்ட ரீதியில் கிட்டத்தட்ட ஒரு கோடி டொலர் அளவான பெரும் நிதியைச் சேர்க்கப் பயன்படுத்தினார்கள் என்று அப்போது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இதன்பின் நடந்த தேர்தலில், அவரது நீண்டநாள் எதிராளியான நவாஷ் ஷெரிப் ஒரு மிகப் பிரமாண்டமான வெற்றியை-80 வீதமான பாராளுமன்ற ஆசனங்களுடன் பெற்றுக் கொண்டார். ஆனால் இந்த வெற்றியானது ஒரு விதிவிலக்கு என்று கூறக் கூடிய அளவுக்கு மிகக் குறைவான கிட்டத்தட்ட 25 வீதமான தொகுதிகள் மட்டுமே வாக்களிப்பில் கலந்து கொண்ட தேர்தல் மூலம் நடைபெற்றது. பெனாசிர் பூட்டோவின் ஆதரவாளர்கள் வாக்களிக்காமல் தமது வீடுகளில் இருந்ததன் மூலமாக அவரை தண்டித்தார்கள். புதிய அரசாங்கம் பல வாக்குறுதிகளை வழங்கியது. ஆனால் எந்த மாற்றங்களும் நடக்கவில்லை.

நாடு தொடர்ந்தும் மோசமடைந்தது. பாகிஸ்தான் அதன் மக்களுக்கு ஒரு போதும் இலவசக் கல்வியையோ, சுகாதார வசதியையோ வழங்கக்கூடியதாக இருக்கவில்லை. ஆயினும் கடந்த காலங்களில் அது ஏழைகட்கு மானிய விலையில் உணவு வழங்கவும் அப்பாவிகள் அநியாயமாகக் கொல்லப்படுவதிலிருந்து பாதுகாப்பளிக்கவும் செய்தது. அதிகாலம் எடுக்கவில்லை. எல்லாம் சரிந்து விழத் தொடங்கின. கோடிக்கணக்கான பணத்தை அணு ஆயுத உற்பத்திக்காக செலவழிக்கும் ஒரு நாடு, தனது மக்களைப் புல்லைத்தின்னுமாறு நிர்ப்பந்தித்தது. கடந்த தசாப்தத்தில் ஏழைகள் மத்தியிலான தற்கொலை வீதமும், வறுமை காரணமாக மனநோயாளர்களாவோர் வீதமும் மிகவும் வேகமாக அதிகரித்தது. கடந்த ஜனவரி மாதத்தில், ஹைதராபாத்தைச் சேர்ந்த ஒரு போக்குவரத்து ஊழியர் தனக்கு இரண்டாண்டுகளாக ஊதியம் வழங்கப்படவில்லை என்பதற்காக பத்திரிகையாளர் விடுதி (press Club)க்கு முன்பாக தன்மீது பெற்றோல் ஊற்றிக் கொழுத்தித் தற்கொலை செய்து கொண்டார். அவர் தற்கொலை செய்யுமுன் ஒரு கடிதத்தை எழுதியிருந்தார். "நான் அமைதியை இழந்துவிட்டேன் நீண்ட காலமாக எனக்கும் எனது சக தொழிலாளர்களுக்கும் ஊதியம் வழங்கப்படாததற்காக எமது எதிர்ப்பைத் தெரிவித்து வந்திருக்கிறோம். ஆனால் யாரும் எந்தவிதமான கவனத்தையும் செலுத்துவதாகத் தெரியவில்லை. எனது மனைவியும் தாயாரும் மிகவும் கடுமையான சுகவீனமுற்று இருக்கிறார்கள். அவர்களுக்கு வைத்தியம் செய்ய என்னிடம் எந்தப் பணமும் இல்லை. எனது குடும்பம் பட்டினி கிடக்கிறது. சண்டைகளால் நான் விரக்தி அடைந்து விட்டேன். எனக்கு உயிர் வாழ்வதற்கான உரிமை இல்லை. எனது உடலில் எரியும் தீயின் சுவாலைகள் ஒரு நாள் பணக்காரர்களின் வீடுகளுக்கும் பரவும் என்று நான் நம்புகிறேன்..."


நவாஷ் ஷெரிப்


முஷாரப்

ஷெரிப் சகோதரர்களும் அவர்களது தகப்பனாரும், உலகமயமாதல், புதிய லிபரல் பொருளாதாரம் போன்ற கோட்பாடுகளை தீவிரமாக நம்புபவர்கள். அவர்களைப் பொறுத்தவரை அரசியல்வாதிகள் உட்பட எல்லாமே விற்பனைக்கு உரியவை தான் என்பதை அவர்கள் உண்மையாகவே நம்புகிறார்கள். சிவில் சேவையாளர்கள் இராணுவ ஜெனரல்கள் கூட இதற்கு விதிவிலக்கல்ல. இராணுவ ஜெனரல்களுக்கு சாக்குச் சாக்காக டொலர்களைக் கொடுத்து தமக்கு செல்வாக்கை ஏற்படுத்துவதற்காக தீவிரமாக முயன்றார்கள் என்றும் ஒரு வதந்தி மக்கள் மத்தியில் பரவலாக நிலவுகிறது. உயர்மட்ட இராணுவ தலைமையின் ஒரு பிரிவு மக்களின் இந்தத் தலையீடு காரணமாக மிகவும் ஆத்திரமடைந்துள்ளது.

இறுதியாக நடந்த சதிக்கான உடனடிக் காரணம் இராணுவ தளபதியான ஜெனரல் முஷாரப் அவர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த போது அவரை விலக்கிவிட்டு ஜெனரல் ஷயாவுதீனை அவரின் இடத்திற்கு நியமிக்கும் முடிவை ஷெரிப் எடுத்தது தான். பாகிஸ்தானிய தொலைக்காட்சி, ஷெரிப் புதிய இராணுவ தளபதியை நியமிப்பதையும் வாழ்த்துவதையும் காட்டிக் கொண்டிருக்கும் போது அதன் மின்சார வயரைப் பிடுங்கி விட்டதைப் போல நாட்டின் தொலைக்காட்சி சேவை இருண்டு போனது. ஷியா்வுதீன் உள்ளக உளவுத்துறை தலைவர் என்ற முறையில் ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபானிய இராணுவத்திற்கு பிரதான வழங்குனராக இருந்தவர். அவர் அடிப்படைவாதத்தின் அனுதாபியாகவும் மதசார்பற்ற இராணுவத்தை விரும்பும் அதிகாரிகளின் வெறுப்புக்குள்ளானவராகவும் இருந்தார்.

முஷாரப்பின் ஆதரவாளர்கள் இராணுவத்துள் மிகவும் விரைவாக இயங்கினார்கள். நவாஷ் ஷெரிப்பினால் ஜெனரல் திரும்பி வரும் விமானம் வேறொரு நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்று வழங்கப்பட்டிருந்த உத்தரவு உதாசீனம் செய்யப்பட்டு இராணுவத்தின் பாதுகாப்புடன் அது கராச்சியிலேயே தரையிறக்கப்படப் போகிறது என்பது தெளிவாகத் தெரிந்தது. பென்ரகனின் கெடுக்கப்பட்ட ஆசியக் குழந்தைகளில் ஒன்றான பாகிஸ்தானின் வீங்கிப் பெருத்த இராணுவம், பனிப்போரின் அனாதையாக தான் மாறி விடுவதை வெறுத்தது. "ஆப்கானிஸ்தானுக்குள் புகுவதற்கு அமெரிக்கருக்குப் பாகிஸ்தான் ஒரு ஆணுறையாக இருந்தது." என்று ஒரு இளைப்பாறிய ஜெனரல் ஒருவர் சென்ற ஆண்டு என்னிடம் கூறினார். "நாம் எமது நோக்கத்திற்காக உழைத்தோம். அவர்கள் எங்களை மலக்குழிக்குள் வீசிவிடலாம் என்று நினைக்கிறார்கள்..."

கடந்த வருடம் இந்தியாவுடனான நல்லிணக்கத்துக்கான நெருக்கடி பாகிஸ்தானுக்கு உருவாகியிருந்தது. தன்னுடைய இருப்புக்கும் அதிகாரத்துவத்துக்கும் ஆபத்தாகக் கூடும் என்றும் வரவு செலவுத் திட்டத்தில் தனக்கு ஒதுக்கக்கூடிய தொகை குறையக் கூடும் என்றும் பயந்த பாகிஸ்தானிய இராணுவம் அணுவாயுத துருப்புச் சீட்டை வீசியது. இதைத் தொடர்ந்து இந்தியாவுடனான காஷ்மீர் எல்லைப்புறச் சாகசம் ஒன்றில் இறங்கியது. இந்தச் சண்டையில் இந்தியாவிடம் அது பலத்த அடி வாங்க வேண்டியிருந்தது. இந் நிகழ்வு இந்த யுத்த நடவடிக்கையின் தோல்விக்கான முழுப் பழியையும் இராணுவத்தின் மீதே போட்டுவிட முயன்ற அரசாங்கத்துடன் இராணுவம் முறுகல் நிலைக்கு வர காரணமாகவிருந்தது. இப்போது ஜெனரல் முஷாரப் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளார். ஆனால் மாறுபட்ட நிலைமைகளின் கீழ்.

> "ஆப்கானிஸ்தானுக்குள் புகுவ'தற்கு அமெரிக்கருக்குப் பாகிஸ்தான் ஒரு ஆணுறையாக இருந்தது."

இராணுவம் ஒரு ஐக்கியப்பட்ட அமைப்பாக இல்லை. மிகவும் நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்ட இஸ்லாமிய கடும் போக்காளர்கள் இராணுவத்தின் முக்கியமான கருப்பகுதிக்குள் ஊடுருவியுள்ளார்கள். முன்பிருந்த பழைய பாரம்பரிய மத கட்சிகளைப் போலல்லாது, முதல் நான்கு கலீபாக்களது வீரர்கள், முகமத்தின் வீரர்கள், மதீனாவின் வீரர்கள், தொண்டர்கள், மற்றும் அதிகாரப் பசி பிடித்தவர்கள். அவர்கள் தலிபான் மாதிரியான ஒரு அமைப்பையே விரும்புகிறார்கள். இவ்வாண்டின் ஆரம்பத்தில் இதன் ஒரு பகுதியினர் வடமேற்கு மாகாணத்திலுள்ள பல கிராமங்களை முற்றுகையிட்டு அவற்றை "இஸ்லாமிய சட்டத்தின்" கீழ் இருக்கின்றன என்று பிரகடனம் செய்தார்கள். ஷாகரி என்ற கிராமத்தில் பகிரங்கமாக தொலைக்காட்சிப் பெட்டிகளையும் டிஸ் அன்ரனாக்களையும் உடைத்தெறியும் நிகழ்வு ஒன்று நடாத்தப்பட்டது. இது போன்ற



ஒரு பிரிவு பாகிஸ்தானிய இராணுவத்தை பொறுப்பேற்குமாக இருந்தால்-அதற்கான வாய்ப்பு ஒரு சில ஆண்டுகளுக்கு முன் இருந்தது போல ஒன்றும் இல்லை என்று சொல்லிவிட முடியாது- அணு ஆயுதங்களை அவர்கள் வைத்திருப்பது என்பது புதிய பயங்கரமான முக்கியத்துவமுடைய ஒன்றாக மாறிவிடும்.

வாஷிங்டன் ஒரு புதிய சர்வாதிகாரியுடன் ஊகித்துப் போக மறுக்குமானால், அடுத்ததாக நடக்கக்கூடியது சர்வதேச நாணய நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சிக் கோட்பாட்டளர்களின் காபந்து அரசாங்கம் ஒன்று உள்நாட்டுக் கொந்தளிப்புக்கு உள்ள ஒரேயொரு காத்திரமானதும் தர்க்கபூர்வமானதுமான மாற்று இந்தியாவுடனான நீண்டகால நட்பு உடன்பாடு ஒன்றை உருவாக்குவதுதான். தெற்காசிய நாடுகளுக்கிடையிலான ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) சாயலிலான ஒரு பெரிய கூட்டமைப்பினை உருவாக்குவதற்கான அடிப்படைகளை தரக்கூடிய ஒரு புதிய நிரந்தரத்தீர்வாக இது அமைய வேண்டும். கடந்த 50 ஆண்டுகாலமாக பாகிஸ்தான, வளைகுடா நாடுகளுடனும் சவூதி அரேபியாவுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி விடுவதன் மூலம் தன்னைப் பிரதியீடு செய்துவிடும் என்று நினைத்து இந்தியாவுக்கு, தனது முதுகைக் காட்டிக் கொண்டிருக்கிறது. இந்த மூலோபாயம் அரசியல் பொருளாதார ரீதியில் தோல்வியையும் செயற்திறன்மிக்க தொழிலாளர் சக்தி பயனற்றுப் போகவும் தன் சொந்த அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையைக் கூட உருவாக்கவுமே வழி செய்துள்ளது.

சமீபகாலமாக பிரதான மதச்சார்பற்ற அரசியல் கட்சிகளின் அரசியல்வாதிகள் இந்தியாவுடன் புதிய பொருளாதார உறவுகளை ஏற்படுத்திகொள்வது பற்றிய முயற்சிகளில் ஈடுபடுவது குறித்த சமிக்ஞைகள் சில தோன்றியுள்ளன. ஆனால் அடிப்படைவாதிகளதும் இராணுவத்தினதும் அழுத்தங்கள் காரணமாக அவர்கள் உடனேயே தமது தலைகளை உள்ளே இழுத்து விடுகிறார்கள். இருந்தும் இது ஒன்று மட்டுமே ஒரு தர்க்கபூர்வமான இடைக்கால அளவிலான தீர்வாக இருக்க முடியும். உள்ளக உளவுத்துறையால் ஆயுதபாணிகளாக்கப்பட்ட அடிப்படைவாதிகள், பறப்பதற்கு தயாராகக் காத்திருக்கிறார்கள். ஒருகால் அவர்கள் இராணுவத்தை உடைப்பார்களானால் அது இப்பிராந்தியத்துக்கே பல பின்விளைவுகளைத் தரக்கூடிய மாபெரும் இரத்தம் சிந்தும் சிவில் யுத்தமாக வெடிக்கும். உபகண்டத்தில் வாழும் அரசியல்வாதிகள் ஒன்றாக வாழ்வதற்கான அவசியத்தை உணரத் தவறுவார்களேயானால் அவர்கள் ஒன்றாக இறந்து போவதில் தான் போய் முடிவார்கள்.

**–தாரீக் அலி**

ஒக்டோபர் 14 1999இல் British Observer/Guardian இல் வெளியான கட்டுரை
www.lol.shareworld.com/ZSustainers/ZDaily/1999-10/16ali.htm

நன்றி - நூலகத்திட்டம்



# சிங்கள இனவாதத்திற்கு தலைகுனியும் சந்திரிகா அரசாங்கம்!

பேராசிரியர் பீரிஸ் அவர்களால் வெகு படாடோபமாக அறிவிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்த சமவாய்ப்புச் சட்டமூலம், சமவாய்ப்பை அல்லமாறாக சிங்கள பௌத்தத்தை கருவறுக்கவும், இந்நாட்டில் பழைய நிலமான்ய சாதி அமைப்பு முறையை மீளக்கொண்டு வரவும், நாட்டுக்கும் மக்களுக்கும் அவமானத்தைத் தரவுமே பயன்படப்போகிறது என்று சிங்கள இனவாதிகளால் பிரச்சாரம் செய்யப்பட்டது. இந்தப் பிரச்சாரம் மிகப் பிரமாண்டமான அளவில் பத்திரிகைகளில் முழுப்பக்க விளம்பரங்கள் மூலமாகவும், பொதுக்கூட்டங்கள், துண்டுப்பிரசுரங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்பவற்றின் மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சட்டத்தின் சில பகுதிகள் அடிப்படை அரசியலமைப்பிற்கு விரோதமாக அமைந்துள்ளன என்று காரணம் காட்டி பல அமைப்புக்கள் அதைப் பாராளுமன்றத்தில் சட்டமாக்க விடக் கூடாது என்று கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தன. இச்சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்த திகதியன்று அதைச் சமர்ப்பிக்க வேண்டிய அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் அவர்கள் வெளிநாடு சென்றிருந்ததால் அன்று சமர்ப்பிக்கப்படவில்லை. நாடு பூராவும் எழுந்த இனவாதிகளது எதிர்ப்பின் காரணமாக அரசாங்கம் பயந்துவிட்டது என்று எதிர்க்கட்சியினர் கிண்டல் செய்தனர். ஆனால், தான் நாட்டுக்கு வந்ததும் அச்சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அங்கிருந்தபடியே பத்திரிகைகட்கு வீராவேசமாக அறிக்கை விடுத்தார் அமைச்சர் பீரிஸ்.

இந்தச் சட்டம் கொண்டுவரப்படப்போவதாக அறிவிக்கப்பட்டு பத்திரிகைகளில் தகவல் வெளியிடப்பட்ட போது அதையிட்டு வியப்படையாதவர்கள் யாரும் இருந்திருக்க முடியாது. நாட்டில் எத்தனையோ முக்கியமான உடன் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் இருக்க இதை இத்தனை அவசரமாக அரசாங்கம் கொண்டுவர நினைப்பது ஏன் என்று பலரும் ஆச்சரியப்பட்டார்கள். அரச தரப்பின் பெரும் பகுதியினர், தமிழ் கட்சிகள், சிங்கள இனவாதிகள் என்று சகல பிரிவினரும் தத்தமக்கு உரிய காரணங்களுக்காக இதனை எதிர்க்கின்ற ஒரு நிலையில் இதனை ஏன் அரசாங்கம் கொண்டுவர முயன்றது என்று புரியவில்லை.

நாட்டின் யதார்த்த நிலைமைகளுக்கு சற்றும் அவசரமில்லாத ஒரு சட்டமான இதைச் சட்ட வல்லுனர்கள் கூட விமர்சித்தார்கள். ஆனாலும் அரசாங்கம் அதைக் கொண்டுவருவதில் பிடிவாதமாக இருந்தது.

பரவாயில்லையே, கொஞ்சமாவது எதிர்ப்புகளை அதுவும் இனவாதிகளது எதிர்ப்புகளை பொருட்படுத்தாமல் துணிவுடன் செயற்பட அரசாங்கம் முயல்கிறதே என்று நாம் யோசித்தால், அந்தோ பரிதாபம், உயர்நீதிமன்றத்தில் அதை தாம் கொண்டு வர மாட்டோம் என்று சட்டமா அதிபர் மூலம் அறிவித்து அது பின்வாங்கி விட்டது.

உண்மையில் இந்தச் சட்டத்தை உயர் நீதிமன்றத்தில் விவாதத்திற்கு அனுமதித்து விட்டு அங்கே அரசாங்கம் தான் இதைக் கொண்டு வருவதற்கான தன் தரப்பு நியாயங்களைத் தெளிவாக விளக்கியிருக்க முடியும். ஆனால் அந்த வாய்ப்பைப் பயன்படுத்த அரசாங்கம் முயலவில்லை. பதிலாக தாம் அதைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதில்லை என்று பின்வாங்கிவிட்டது. அப்படியானால் அதைத் தயாரிக்க எடுத்த காலம், உழைப்பு எல்லாவற்றிற்கும் என்ன அர்த்தம்? இப்படி, அம்போ என்று கைவிடுகிற ஒரு சட்டமூலத்தை காலத்தையும், உழைப்பையும், பணத்தையும் விரயமாக்கி தயாரித்திருக்கத் தான் வேண்டுமா? இப்படித்தான் ஒரு நாள் தீர்வுப் பொதியும் கைவிடப்படப் போகிறதா?

இந்தச் சட்டம் பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்பட மாட்டாது என்று அறிவிப்பதற்கு காரணமாக இருந்தது அதன் யதார்த்தமற்ற நிலையோ, இன்றைய இனப்பிரச்சினைக்கு அது ஏற்படுத்தப் போகிற ஊறு என்று தமிழ் தரப்பில் சொல்லப்பட்ட காரணங்களோ அல்ல, மாறாக சிங்கள இனவாதிகளால் முன்வைக்கப்பட்ட காரணங்களே என்பது தான் உண்மை.

ஆனால், இந்த சிங்கள இனவாதிகளது காரணங்களோ, சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கான ஆவேசமே என்பதைத் தவிர வேறல்ல. சிங்கள மேலாதிக்க வெறிக்காக முன்பு பண்டாரநாயக்க அவர்கள் செல்வநாயகத்துடன் தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தை கிழித் தெறிந்தார் என்றால், மகள் அதற்காக சட்டத்தை வாபஸ் வாங்கியிருக்கிறார்.

அப்படி இந்த இனவாதிகள் இச்சட்டமூலம் பற்றி என்ன தான் சொல்கிறார்கள்?

சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு வராது என்று அறிவிக்கப்பட்டதுடன் கதை முடிந்து விட்டது என்று நாம் விட்டுவிடலாம். ஆனால், இனவாதத்துக்கு தலைகுனியும் ஒரு அரசாங்கம் இது என்பதை தெளிவாக உறுதிப்படுத்துகிற ஒரு சம்பவம் இது என்பதால், இப்படி அரசாங்கம் பயப்படக் காரணமாக இருந்த இனவாதிகள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கவனிப்பது மிகவும் அவசியமாகும்.

சண்டே டைம்ஸ் இதழில் "கும்பகர்ண" என்ற புனைபெயரில் எழுதப்பட்டு வரும் பத்தி சிங்கள இனவாதத்தின் போக்கினை நாடி பிடித்தறிய மிகவும் பொருத்தமான பத்தியாகும். பயங்கரவாத ஒழிப்பு இயக்கம், வீரவிதான போன்ற அமைப்புகளின் முக்கிய பிரமுகரான சம்பிக்க ரணவக்க அவர்களால் எழுதப்படுவதாக கூறப்படும் இந்தப் பத்தியில் கடந்த வாரம் எழுதப்பட்ட கட்டுரையின் சுருங்கிய வடிவத்தைக் கீழே தருகிறேன். அது தெளிவாக, சிங்கள இனவாதிகளது நிலையை விளக்கப் போதுமான ஒரு பத்தியாகும்.

"சர்ச்சைக்குரிய சமவாய்ப்புச் சட்டத்தில் உள்ள மிகவும் முக்கியமான ஒரு விடயம் காணி சம்பந்தப்பட்டதாகும். ஆனால் நீதிமன்றத்தில் கேள்விக்குள்ளாக்கப்பட்டதோ வெறுமனே பௌத்த பாடசாலைகளில் உள்ள கல்விச் சுதந்திரத்தை ஆபத்துக்குள்ளாக்குவதாக அமைந்த பகுதி மட்டுமே.

சுதந்திர தமிழீழத்தைக் காண்பதென்ற வட்டுக் கோட்டைத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு 25 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட அந்தக் கனவுகள் இன்னமும் எச்சங்களாக இருக்கவே செய்கின்றன.

சுதந்திர ஈழப் பிரகடனம் செய்யப்பட்ட காலத்தில் அதற்கான முதுகெலும்பை வழங்கிய தமிழ் சட்டத்தரணிகள், வைத்தியர்கள் மற்றும் அரசியற் சாசனத்துறை நிபுணர்கள் எல்லோரும் இப்போது அப்பிரகடனத்திற்கான மையமாக இருந்த யாழ்ப்பாணத்தை கைவிட்டு வெளியேறி விட்டார்கள். அவர்கள் இப்போது கொழும்பு, மெல்போர்ன், ரொறன்ரோ, லண்டன் மற்றும் இந்திய நகரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்போது கொழும்பில் குடியேறியுள்ள தமிழர்கள் தலைநகரில் விரைவில் பாடசாலைகள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் மீதும் தமது ஆதிக்கத்தைக் கொண்டு வந்து விடுவார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் தங்களது



நிறுவனங்களை உருவாக்குவதற்கு ஒரு பத்தாண்டுகளாவது எடுக்கும் என்பதால், இந்த நிறுவனங்களை தமது கைக்குள் போட்டுக் கொண்டுவிடுவது அவர்களது திட்டமாகும். இந்தப் போக்கில் அவர்கள் பல்வேறு அரசியல் அபிலாசைகளையும் வெளிப்படுத்துவார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

சமவாய்ப்புச் சட்டத்தில் உள்ள காணி உரிமை தொடர்பான பிரிவு மிகவும் இலேசாக கவனிக்கப்படாமல் விடப்பட்டு விட்டது. ஆயினும் அதுபற்றிச் சொல்வது அவசியமாகும்.

இப்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தில் நடைமுறையில் உள்ள காணி உரிமையைக் கட்டுப்படுத்தும் தேசவழமைச் சட்டம் மிகவும் மோசமாக பாதிக்கப்படும் என்று கருதப்பட்டது. இன்றுள்ள யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்திருக்குமானால் இந்தச் சட்டத்தில் நில உரிமை தொடர்பான சரத்து சேர்க்கப்பட்டிருக்க வாய்ப்பு உண்டு என்று நாம் கருதுகிறோம். இதன்மூலம் அவர்கள் தமது இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தை நியாயப்படுத்துவதுடன் கொழும்பிலுள்ள நிறுவனங்கள் மீது தமது ஆதிக்கத்தை நிறுவி தம் "அபிலாஷையை"யும் நிறைவேற்றியிருப்பார்கள். கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகியோருக்குச் சொந்தமான கல்வி நிறுவனங்கள் மிகவும் கெட்டித்தனமான முறையில் இந்தச் சட்டத்தில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. இந்த மத சமூகங்களிலிருந்து வரக் கூடிய எதிர்ப்புகளை வெளிப்படையான நடைமுறை மூலமாக சோதித்து விட்டுத் தான் இச்சட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. காணி உரிமை பற்றிய சரத்து கைவிடப்பட்டதும், வெறுமனே பௌத்த பாடசாலைகளை மட்டும் குறிவைத்ததும் காரணமாக இந்தச் சட்டமூலம் ஒரு பௌத்த எதிர்ப்பு சட்டமூலமாகவே வெளிப்படுகிறது. பாலியல் துன்புறுத்தல், சில ஊழியர்களது உரிமைகள் போன்ற சில விடயங்களால் மூடிமறைக்கப்பட்ட இந்தச் சட்டமூலத்தின் பிரதான நோக்கம் சிங்கள பௌத்த நிறுவனங்களை முடக்குவதேயாகும்.

பிரிவினைவாதமும், இனரீதியாக சுத்திகரிக்கப்பட்ட தமிழ் தாயகப் பிரதேசமும் தொடர்ந்து இருக்கவும், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ பாடசாலைகள் தொடர்ந்து இயங்கவும் இச்சட்டத்தில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதேவேளை பௌத்த பாடசாலைகளை மட்டும் அரசாங்கம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறது. இது அரசாங்கத்தின் சிங்கள பௌத்தத்தை பலவீனமாக்கும் நோக்கம் என மிகத் தெளிவாகத் தெரிகிறது.

இது வெறுமனே ஒரு நீதியற்ற சட்டம் மட்டுமல்ல. கூடவே, எதிர்காலத்தில் பௌத்தர்களை தமது துன்ப துயரங்களிலிருந்து விடுபட அரச எதிர்ப்பு அமைப்புகளூடாக செயற்பட வேண்டிய நிலைக்குத் தள்ளுகின்ற ஒரு சட்ட மூலமாகும். மறுபுறத்தில் இந்தச் சட்டம் நாட்டின் சகல பகுதிக்ளிலும் நடைமுறையில் இருக்குமா? இதை எப்படி வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் நடைமுறைப்படுத்த முடியும்? என்ற கேள்விகளும் எழவே செய்கின்றன.

சட்டத்தின் அடிப்படையில் "பர்தா" அணிவதற்கு உரித்தளிக்கப்பட்டுள்ள முஸ்லிம் ஆசிரியைகளுக்கு பதுளை தமிழ் மகா வித்தியாலயத்தில் அதை அணிய அனுமதிக்க திரும்பத் திரும்ப தமிழ் இனவாதிகள் மறுத்து வரவில்லையா?

இந்த நாட்டில், சட்ட ரீதியாக இனச்சுத்திரிப்பு செய்யப்பட்ட தமிழ் தாயகப் பிரதேசம் குறித்து கேள்வி எழுப்ப முடியாது என்றால் இங்கே எப்படி ஒரு சம உரிமை பற்றிப் பேச முடியும்? ஆயுதமேந்திய பயங்கரவாதமும், ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் அதிகாரமும், நாட்டின் சட்டத்தை கேலிக்கூத்தாக்கிக் கொண்டிருக்கையில் எப்படி சமவாய்ப்பைப் பற்றிப் பேச முடியும்?

கொழும்பு நோக்கிய தமிழர் குடியேற்றத்தின் அடுத்த கட்டம் என்னவென்றால், இந்தக் குடியேறிய தமிழர்கள் மத்தியில் இந்திய இந்துத்துவ கோட்பாட்டை பிரபல்யப்படுத்துவதாகும். சமாதானச் செய்திகளைத் தாங்கி ஊர்வலம் போகும் ஊர்திகள் யுத்தம் நடந்து கொண்டிருக்கும் முல்லைத்தீவுக்கு அந்தச் செய்தியை எடுத்துச் செல்வதில்லை. ஆனால் தெற்கிலும், தலைநகரிலும் தான் அவை காணப்படுகின்றன.

அவர்களின் அடுத்த நகர்வு கொழும்பில் குடியேறியுள்ள தமிழர்களின் வாக்குரிமையைக் கோருவதாகும். மேல்மாகாண சபையில் 15 ஆசனங்களையும் பாராளுமன்றத்தில் 5 ஆசனங்களையும் கைப்பற்றுவதே அவர்களது நோக்கம். காலஞ்சென்ற நீலன் உயிருடன் இருந்திருந்தால் அவர் அடுத்ததாக வரைந்திருக்கக் கூடிய சட்டவரைபு இதுவாகத் தான் இருந்திருக்கும். இந்த எல்லா நடவடிக்கைகளினதும் நோக்கம் சிங்களவர்களைத் தாக்குவது தான். அமெரிக்கா, உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் பெரும் ஆதரவை சமவாய்ப்புச் சட்டமூலம் பெற்றிருந்தது. இந்த சட்டத்தின் நோக்கமே இன்னும் அதிக வெளிநாட்டு நிதியைப் பெற்றுக் கொள்வது தான் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது"

- இவ்வாறு அந்தப் பத்தியில் எழுதிச் செல்கிறார் "கும்பகர்ண". சிங்கள இனவாதிகளான இவர்களது தீவிரப் பிரச்சாரம் சிங்கள அரசாங்கத்தை - இன்றைய அரசாங்கம் போன்ற ஒரு தீவிர பௌத்த பேரினவாதத்திற்கு முண்டு கொடுக்கின்ற அரசாங்கத்தை - சிங்கள பௌத்தர்களுக்கு எதிரானதாகக் காட்டுகிறது. அடுத்த ஒரு சில மாதங்களுக்குள் ஜனாதிபதி தேர்தல் நடக்கவிருப்பதாலும், அரசாங்கம் அத் தேர்தலில் சிங்கள இனவாதத்தையும், சிங்கள பௌத்தத்தையும் காக்கப் போவதாகவும் சூளுரைக்க உள்ளதாலும், இந்தச் சட்டமூலத்தை தானாகவே வாபஸ் வாங்கி விட்டது.

சிங்கள பௌத்த இனவாதத்திற்கு வளைந்து கொடுக்கிற அதற்கும் தாமே காவலர்கள் என்று சொல்ல விரும்புகிற எந்த அரசாங்கத்தாலும் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டு கொள்ள முடியாது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்த அரசாங்கம் தன்னை மிகத் தெளிவாக எப்படியான ஒரு அரசாங்கம் என்று காட்டி விட்டது. ஆனால் தான் இனப்பிரச்சினையை தீர்க்கத் தான் போகிறேன் என்று ஜனாதிபதி, தேர்தல் பிரகடனம் அறிவித்த கையோடு தெரிவித்திருக்கிறார்.

இந்த வார்த்தைகளை நம்பிக் கொண்டிருக்க இந்த நாட்டில் இன்னமும் தமிழ் முஸ்லிம் மக்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள் அவர்களின் தலைவர்கள் - அஷ்ரஃப் முதல் டக்ளஸ் வரை.

நம்பிக் கெட்டுப் போகிற தலைவிதிக்குத் தலையைக் கொடுக்க இன்னொரு தடவையும் நாம் தயாரா?

**சமவாய்ப்புச் சட்டம் கைவிடப்பட்டதற்கு இந்த சிங்கள இனவாதிகளது காரணங்களும், சிங்கள பௌத்த மேலாதிக்க ஆவேசமுமே காரணம் என்பதைத் தவிர வேறல்ல. சிங்கள மேலாதிக்க வெறிக்காக முன்பு பண்டாரநாயக்க அவர்கள் செல்வநாயகத்துடன் தான் செய்து கொண்ட ஒப்பந்தத்தை கிழித் தெறிந்தார் என்றால், மகள் அதற்காக சட்டத்தை வாபஸ் வாங்கியிருக்கிறார்.**

நன்றி - நூலகத்திட்டம்



# நுணலும் தன் வாயால் கெடும்!

"இலங்கை உள்விவகாரங்களில் தலையிடுவதை விடுத்து ஐக்கிய நாடுகள் சபை தனது நடவடிக்கைகளை 'மலேரியா மற்றும் நுளம்பு' குறித்த விடயங்களில் கவனம் செலுத்தும் விதத்தில் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். இது பற்றிக் கவலைப்பட இவர்கள் யார்? இதனை எப்போதும் நான் சகித்துக் கொள்ள மாட்டேன்..."

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கடந்த செப்டம்பர் மாதம் சென்றிருந்த போது நியூயோர்க்கில் வைத்து தெரிவித்த கருத்து அது. செப்டம்பரில் புதுக்குடியிருப்பு மற்றும் கோணகலை சம்பவங்கள் குறித்து ஐ.நா. அதிகாரி கொழும்பில் ஆழ்ந்த கவலை தெரிவித்ததற்குப் பதிலாகவே இதனை அவர் தெரிவித்திருந்தார்.

"...எதிர்வரும் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைத் தந்தால் ஒரு மாதத்தில் நிரந்தரத் தீர்வு! இல்லையேல் பதவி துறந்து வீடு செல்வேன்..."

(15-10-99இல் இரத்தினபுரியில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க)

"...புலிகளுடன் பேச்சுக்கும் இடமில்லை. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கும் இடமில்லை..."

(இந்தியாவிலிருந்து வெளிவரும் "இந்து" தினசரிக்கு ஜனாதிபதி சந்திரிகா அளித்த விசேட பேட்டியில்)


சந்திரிகா


கதிர்காமர்


பிரேமதாச


ஜோன் கொத்தலாவல


என்.எம்.பெரேரா


கொல்வின் ஆர்.டி.சில்வா


கிங்ஸ்லி விக்கிரமரத்ன


ஜே.ஆர்


சிறிமாவோ

தனது அந்திம காலத்தை வந்தடைந்திருக்கும் அரசாங்கம், எந்தளவுக்கு தனது எதிர்காலம் குறித்த சந்தேகத்தில் புலம்பத் தொடங்கியிருக்கிறது என்பதற்கும், பிதற்றத் தொடங்கியிருக்கிறது என்பதற்கும் சில உதாரணங்கள் இவை. தாம் எதைப் பேசுகிறோம் என்பதைத் தம்மாலேயே உணரமுடியாத அளவுக்கு இந்தப் பிதற்றல்கள் முத்திப் போயிருப்பதையே இவை வெளிக்காட்டுகின்றன. அல்லது சரியாகத் தான் கூறுகிறார் என்று வைத்துக் கொண்டால் பின்வரும் முடிவுக்கு வரலாம். புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இல்லாமல் ஒருமாதத்தில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதாவது மாயமந்திரங்களையோ அல்லது ஒரு பாரிய இன அழிப்பையோ தான் செய்ய முடியும். பாதுகாப்பு அமைச்சருமான சந்திரிகா அம்மையார் இம்முறை பட்ஜட்டில் அடுத்த ஆண்டுக்கு 5300 கோடியை ஒதுக்கி யுத்த பட்ஜட்டைத் தயாரித்துள்ள நிலையில் "பிரச்சினையைத் தீர்ப்பதற்கு" நிச்சயம் மாயமந்திரங்களை அல்ல யுத்தத்தைத் தான் நம்பியிருக்கிறார் என்பதை உணர முடிகிறது.

இலங்கை, அரசியற் தலைவர்களின் வாய்ச் சவாடலுக்கும், பிதற்றுதல்களுக்கும் பஞ்சமுள்ள நாடு அல்ல. போரை முடிப்பதில் காலக்கெடு வைப்பதில் ஜே.ஆர் தொடங்கி, லலித் அத்துலத்முதலி, ரஞ்சன் விஜேரத்ன, பிரேமதாசா, சந்திரிகா, அனுருத்த ரத்வத்தை போன்றவர்களின் சளைக்காத பொய்களை இந் நாட்டு மக்களுக்கு கேட்டுப் புளித்துப் போய்விட்டது. அப்படியிருந்தும் வாக்குறுதிகள் அள்ளி வழங்குவதில் அவர்கள் சற்றும் தளராத விக்கிரமாதித்தர்கள் தான்.

வரலாற்றில் இப்படிப் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களைப் பார்க்கலாம். அவை சுவாரஷ்யம் மிகுந்தவையும் கூட. முன்னால் தொடர்பு சாதன அமைச்சர் ஏ.ஜே.ரணசிங்க ஒரு முறை பிரேமதாசாவுக்கு எவ்வளவு விசுவாசமானவர் என்பதைத் தெரிவிக்க "பிரேமதாசவின் செருப்பை சூப் செய்து குடிப்பேன்" என்றார்.

"நல்லது கெட்டது ரெண்டுக்கும் வாய் தான்" என சிங்களப் பழமொழி ஒன்று இருக்கிறது. தவளை தன் வாயால் கெடும் என்று தமிழிலும் ஒரு பழமொழி உண்டு. நாட்டில் அரசியற் தலைவர்கள் எவ்வளவு தந்திரோபாயமாக நடந்துகொண்டாலும் ஏதாவது இடங்களில் வந்து தடுக்கி அம்பலப்பட்டு விடுவார்கள். சில வேளைகளில் நல்ல கருத்துக்கள் கூட திரிபுபட்டோ அல்லது அதுவே சர்ச்சைகளுக்கும் உள்ளாகி விடுவதுண்டு. சந்திரிகா அம்மையார் 1998 ஆரம்பத்தில் பிரபாகரனுக்கு ஐந்தாண்டுகள் ஆட்சி புரிகின்ற வகையில் யோசனை முன்வைத்ததாகவும் அதற்கு பிரபாகரனிடமிருந்து பதிலில்லை என்றும் டைம்ஸ் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் முன்வைத்த கருத்து சிங்களத் தரப்பில் பலத்த கண்டனங்களுக்கும், சர்ச்சைகளுக்கும் உள்ளானது தெரிந்ததே.

இவ்வாறு வாயைக் கொடுத் தமாட்டிக் கொள்வதில் முன்னாள் பிரதம மந்திரி ஜோன் கொத்தலாவலவுக்கு முதல் இடமுண்டு. 1953 இலிருந்து 1956 வரை ஆட்சி புரிந்த அவரது காலத்தில் அவர் நிறையவே வாய் கொடுத்து மாட்டிக் கொண்டவர். இலங்கையின் இனப்பிரச்சினைக்குக் காரணங்களில் ஒன்றான மொழிப் பிரச்சினை குறித்து அவர் முன்வைத்த கருத்து முக்கியமானது. 1954இல் யாழ்ப்பாணத்தில் நெடுந்தீவில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றிய போது முதற்தடவையாக சிங்களத்தையும் தமிழையும் அரச மொழிகளாக ஆக்குவேன் என்று அவர் தெரிவித்த கருத்துக்கு சிங்களத்தரப்பில் இருந்து பெரும் எதிர்ப்புகள் கிளம்பின. ஜோன் கொத்தலாவல தென்னிலங்கையில் கலந்து கொண்ட பல கூட்டங்களில் கல்லெறிக்கு இலக்கானார். பிக்குமாரின் தொடர்ச்சியான எதிர்ப்புகளுக்கு அவர் இலக்கான போது தான், அவர் "பிக்குமார்களின் ஆடைகளைக் கழற்றி , மொட்டையில் தார் பூச வேண்டும்..." என உரையாற்றியிருந்தார். இது மேலும் சிங்கள பௌத்தர்கள் மத்தியில் பெரும் எதிர்ப்புகளை ஏற்படுத்தியிருந்தது. இந்த எதிர்ப்புகள் தான் பின்னர் 1955இல் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய களனி மாநாட்டில் சிங்கள மொழி மட்டும் அரச மொழியாக்கப்படும் என்று பேரினவாதத்திடம் சரணடையச் செய்ய வைத்தது. இதனால் தான் அவசர அவசரமாக பண்டாரநாயக்காவும் தான் ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் சிங்கள மொழியை அரச கரும மொழியாக ஆக்குவதாக போட்டிக்கு "சிங்கள மொழி முன்னுரிமை" பற்றிய வாக்குறுதி அளித்தார். 1956 பண்டாரநாயக்காவின் வெற்றிக்குப் பின்னால் இந்தச் சம்பவங்கள் முக்கிய பாத்திரம் வகித்திருந்தன. ஜோன் கொத்தலாவலவுக்கு அவர் இறக்கும் வரை சிங்கள பௌத்தர்கள் மத்தியில் மதிப்பு இருந்தது இல்லை.

என்றாலும் பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கும் போது அவரும் வாயால் கெட்டார். 1947இல் கலகெதர தொகுதியில் நடந்த இடைத்தேர்தலின் போது, இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவு அத்தொகுதியில் போட்டியிட்ட இலங்கரத்னவின் மனைவி தமரா குமாரிக்குக் கிடைத்தது. பண்டாரநாயக்கா ஐ.தே.க. பிரச்சார மேடையில் பேசிய போது, "அரசாங்கத் தொழிலில் இருந்த இலங்கரத்ன யூனியன் அமைக்கப் போய், தொழிலை இழந்தார். இப்போது அரசியல் செய்யப் போய் குடும்ப வாழ்க்கையையும் இழக்கப் போகிறார்..." என்றார். இந்தச் சந்தர்ப்பத்தில் அதிக கோபத்துக்கு உள்ளானவர் லங்கா சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த விவியன் குணவர்தன. உடனே அதே இடத்தில் கூட்டம் ஒன்றை அவர் ஏற்பாடு செய்ததுடன், பண்டாரநாயக்காவின் அந்த உரை, பெண்களை இழிவு செய்கிறது என்றும் பெண்கள் அனைவரும் இதனை எதிர்த்து ஐ.தே.க.வை தோற்கடிக்க வேண்டுமென்றும் தமராவை பெண்களின் உரிமையின் பேரால் வெல்ல வைக்க வேண்டுமென்றும் பிரச்சாரம் செய்தார். தமரா அந்தத் தேர்தலில் வென்றார். அத்தோடு 1956ஆம் ஆண்டு தேர்தலில் இலங்கரத்ன தம்பதிகளின் ஆதரவு பண்டாரநாயக்கவுக்குக் கிடைக்கவில்லை.

பண்டாரநாயக்காவின் மரணத்துக்குப் பின் வந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவும் வாய் கொடுத்து மாட்டிக் கொண்ட சந்தர்ப்பங்கள் ஏராளம். "என்னுடைய கணவனை கொல்லாமல் கொன்றது என்.எம்.பெரேரா தான்..." 1960 யூலை தேர்தலின் போது அவ்வாறு கூறிய சிறிமாவோ தான் வாயை நொந்து கொண்டது, 1964இல் கூட்டரசாங்கத்தை அமைப்பதற்காக என்.எம்.பெரேராவின் ஒத்துழைப்பை நாடிய போது தான். 1970 தேர்தலில் சந்திரனிலிருந்தாவது அரிசி கொண்டுவந்து தருவதாகக் கூறிய போதும் வாரத்துக்கு இரண்டு நாட்கள் சோறு உண்ண தடையேற்பட்டதும் அந்த ஆட்சியில் தான். (அன்று அம்மையார் அரிசிக்கு அளித்த வாக்குறுதியை இன்று மகள் பாணுக்கு அளித்த வாக்குறுதியோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.)

1952 தேர்தலின் போது "சூரியனும் சந்திரனும் இருக்கும் வரை அரிசிக் கொத்தொன்றை 25 சதத்துக்குத் தருவேன்" என்று கூறிய டட்லி சேனநாயக்க 1953 மாபெரும் ஹர்த்தால் நடப்பதற்குக் காரணமானது அனைவருக்கும் தெரியும். அவரின் அந்த வாக்குறுதி அளிக்கப்பட்டு ஒரு வருடத்துக்குள் டட்லி ஆட்சியில் நிதி அமைச்சராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்தனாவால் ஒரு கொத்து அரிசி 70 சதத்துக்கு உயர்த்தப்பட்டது.

1947ஆம் ஆண்டு தேர்தலின் போது முற்போக்கு அரசாங்கம் ஒன்றை அமைக்கும் வாய்ப்பை கொல்வின் ஆர்.டி.சில்வா தன் வாயால் கெடுத்துக் கொண்டார் என்று அன்றைய சூழலில் இடதுசாரிச் சக்திகளால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. ல.ச.ச.க., கொம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் கட்சி ஆகியவை இணைந்து சுயாதீன உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் ஆட்சியமைப்பதற்கான பேச்சுவார்த்தையை நடத்திக் கொண்டிருந்த போது "சுயாதீன உறுப்பினர்கள் மூன்று தலைகளுடன் இருக்கும் கழுதைகள்" என்று கூறியமை சுயாதீன உறுப்பினர்களை ஆத்திரம் கொள்ளச் செய்து அவர்களை முற்றாக அப்பேச்சுவார்த்தையில் இருந்து விலகச் செய்தது.

பாராளுமன்றத்தில் எப்போதும் பொறுப்புடன் நடந்துகொள்பவர் என்று கருதப்பட்ட என்.எம் பெரேரா, 1962 இல் அரச கவிழ்ப்பு சதி முயற்சியில் ஈடுபட்டதாகக் கருதப்பட்ட சந்தேகநபர்களை விசாரணை செய்வதில் பங்குவகித்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவைப் பார்த்து அவரும் அதில் தொடர்புள்ளவர் என்று கூறிய விடயம் அரசாங்கத்துக்குள் சர்ச்சைகளை ஏற்படுத்தியது. பின்னர் அவர் அவ்வாறு கூறியதை வாபஸ் வாங்கியதுடன் அதற்காக வருத்தம் தெரிவிக்க வேண்டியவரானார்.

இதே என்.எம்.பெரேராவுக்கு எதிராக அன்றைய சூழலில் சிங்கள பௌத்தர்கள் மத்தியில், ஐ.தே.க. தொடர்ச்சியாக ஒரு பிரச்சாரத்தை மேற்கொண்டிருந்தது. "'ருவன்வெலிசாய'வை (பௌத்தர்களின் பழம்பெரும் பௌத்த விகாரை) உடைத்து அந்தக் கற்களைக் கொண்டு ஏழைகளுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டும்" என்று அவர் சொன்னதாக அந்தப் பிரச்சாரம் அமைந்தது. இப்படி ஒரு விடயத்தை அவர் கூறியதற்கான வாய்ப்புகள் ஏதும் இருக்கவில்லை என்றாலும் சமசமாஜிக்காரர்கள் மதவிரோதிகள் என்றும் அவர்கள் பௌத்த நாட்டைக் காட்டிக் கொடுக்க வந்தவர்கள் என்றும் ஐ.தே.க.வினர் பல வருடங்களாகப் பிரச்சாரம் செய்து வந்தனர்.

1960களில் பிரேமதாசவுக்கு எதிரான ஒரு பிரச்சாரமும் இந்த வகையில் நாடு முழுவதும் பரவியிருந்தது. 1960 யூலை தேர்தலின் போது சிறிமாவோ பண்டாரநாயக்க "கதிரையில்" அமர்ந்தால் கதிரையைக் கழுவ வேண்டி வரும் என்று பிரேமதாச கூறியதாக அப்பிரச்சாரம் அமைந்தது. பிரேமதாச மீது கடும் கண்டனங்களை ஏற்படுத்துவதாக இந்தப் பிரச்சாரம் அமைந்தது.

தேசிய விடுதலை முன்னணி (Jathika Vimukthi Peramuna)யின் தலைவர் கே.எம்.பி.ராஜரட்னா கடும் இனவாதியாக இருந்தவர். இவரது மனைவி குசுமா ராஜரட்னவும் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர். மொழிப் பிரச்சினை நாட்டில் தலைதூக்கிய சந்தர்ப்பத்தில் இவரது பாத்திரம் முக்கியமானது. யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ எதிர்ப்பு பிரச்சாரம், ஸ்ரீ எழுத்துக்கு தார் பூசி அழித்தல் என்பவை தொடங்கிய போது தெற்கில் தமிழில் எழுதப்பட்ட பலகைகள் எல்லாவற்றையும் தார் பூசி அழிக்கும் நடவடிக்கையில் முழுக் கட்சியின் வேலைத்திட்டமாக முன்னெடுத்தவர் ராஜரட்னா. "இந் நாட்டிலுள்ள கடைசி தமிழனின் தோலில் செருப்புச் சோடியொன்றை செய்து என்னுடைய காலில் போட்டுக்கொள்ளும் வரை எனக்கு தூக்கம் வரப்போவதில்லை..." என்று ராஜரட்ன அப்போது சொன்னார். 1965 இல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட தமிழரசுக் கட்சி உதவியுடன் டட்லி தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கம் பதவியலமர்ந்தது. எம்.திருச்செல்வமும் அமைச்சர் பதவி வகித்த அதே அரசாங்கத்தில் தான் குசுமா ராஜரட்னவும் அமைச்சரவையில் அங்கம் வகித்தார்.

முன்னாள் கல்வி, கலாசார அமைச்சராக இருந்தவரும் இனவாத அரசியல் பேசி அரசியல் செய்தவருமான ஐ.எம்.ஆர்.ஏ.ஈரியகொல்ல பிக்குமாரைத் திட்டிப் பேசிய போது, "எங்கள் மகாநாயக்க பிக்குமாரில் பலர் விகாரைகளில் உள்ள "படிக்கம்"களை நிரப்புவதைத் தவிர என்ன செய்கிறார்கள்?" என்றார். இவரை எதிர்த்து பிக்குமார் மற்றும் மக்கள் திரண்டு தமது எதிர்ப்புகளைக் காட்டிய போது அது பெரும் பரபரப்புக்குரிய செய்தியாக அன்று ஆகியிருந்தது. 1970 தேர்தலில் குளியாப்பிட்டி தொகுதியில் அவர் தோல்வியுற இச்சம்பவம் முக்கிய காரணமாக அமைந்ததென பொதுவான அபிப்பிராயம் நிலவியது.

அது போல ஜே.ஆர்.ஜயவர்தனா தனது வாயால் கெட்ட சநதர்ப்பங்கள் உள்நாட்டில் மட்டுமல்ல உலகளவில் பிரபல்யம் வாய்ந்தவை. 1978ஆம் ஆண்டு [illegible] அரசியலமைப்பை அறிமுகப்படுத்திய போது அவர் "இனி ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் ஆக்குவதைத் தவிர தன்னால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்றார். 83 கலவரத்தின் போது "போரென்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்று பிரகடனம் செய்ததும், அது போல ஆத்திரம் கொண்ட சிங்கள பௌத்தர்களின் வெளிப்பாடு அது என்றும் அதனை நியாயப்படுத்தியதும் அவர் தான் . வடக்கில் போர் உக்கிரம் பெற்ற போது மேஜர் ஜெனரல் புல் வீரதுங்கவை அனுப்பி "6 மாதங்களுக்குள் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவேன்" என்று மார்தட்டி சவால் இட்டதும் ஜே.ஆர். தான். அதன் பின் அதுபோன்ற கோசங்களை அடிக்கடி செய்வதற்கு பின் வந்த தலைவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர் அவர்.

இந்த அரசாங்கத்தை எடுத்துக்கொண்டால் "இலங்கை மக்கள் சாப்பிடுவது அதிகம். அது தான் பிரச்சினை..." என்று கூறிய வர்த்தக அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்னவின் கூற்று இலங்கையில் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

தொடர்புசாதன அமைச்சர் மங்கள சமரவீர "சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையை குப்பைக்கூடையில் போடவேண்டும்" என்று கூறியதும், அவரே சுசந்திக்காவை "ஆப்பிரிக்க ஆண்" என்று கூறியமையும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது அறிந்ததே.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு காலக்கெடு விதிப்பதில் உலகில் ரத்வத்தையை விட வேறு யாரும் இருக்க முடியுமோ தெரியவில்லை. அந்தளவுக்கு அவரின் வாய்சொல் நகைப்புக்குரியதாகி விட்டது.

அனுர பண்டாரநாயக்க எப்படி ஒரு போதும் ஐ.தே.க.வுக்கு போகப்போவதில்லை என்று வாய்ச் சவடால் அடித்து விட்டு இன்று அதன் தலைவர்களில் ஒருவராக இருக்கிறாரோ அது போல அவரின் சகோதரி சந்திரிகா, ஸ்ரீலங்கா மக்கள் கட்சியில் இருந்து ஒருபோதும் திரும்பி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குப் போகப்போவதில்லை என்று கூறிவிட்டு இன்று அதற்குத் தலைமை ஏற்றிருக்கிறார் என்பதும் கூறித் தெரியத் தேவையில்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை 1995 யூன் 15க்குள் ஒழிப்பதாகவும், பாண் விலையை 3.50ஆக ஆக்குவதாகவும் இதே சந்திரிகா கூறிய கூற்று சந்திரிகாவுக்கு எதிராக சதா குற்றம் சாட்டப்படும் முக்கிய ஒரு விடயமாக ஆக்கி விட்டிருக்கிறது.

இப்படி அரசியற் தலைவர்கள் தங்கள் வாயால் கெடும் சந்தர்ப்பங்கள் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். அவர்களை இயக்குகின்ற சக்திகளும், கட்டமைப்பும் இப்படித் தான் பொய்யைத் தவிர வேறெதனையும் கூற விடாது. போலி வாக்குறுதிகளைத் தவிர வேறெதனையும் கூற விடாது. வகையாக மாட்டிக் கொள்ளுகின்ற போது புலம்பலைத்தவிர வேறெதனையும் பேச வைக்காது. பாராளுமன்ற அரசியலாளர்கள் தமது அரசியல் இருப்பை தக்கவைப்பது இந்த வாயைக் கொண்டுதான். இது தான் இதுவரை தொடர்ந்து வந்த, தொடர்ந்து வரும் வரலாறு. தொடரப் போவதும் இது தானா?

—ஜென்னி

# சமாதான நகராக்கப்பட்டதன் பின் எரிமலையாகக் கனன்று கொண்டிருக்கும் திருமலை

ஈழத் தமிழ்த் தேசியத்தின் பாரம்பரியத் தாயகப் பூமியாக, தலைப்பட்டினமாக மிளிரும் திருமலை அரச ஆரவாரங்களுடன் சமாதான நகராகப் பிரகடனப்படுத்தப்பட்டு ஒன்றரை மாதமாகிறது.

கடந்த செப். 14ம் திகதி செவ்வாய்க்கிழமை காலையில் திருமலை நகரின் நுழைவாயிலான அனுராதபுர சந்தியில் "சமாதான நகரம்" என்ற மும்மொழிகளிலான பெயர்வளைவு திறந்து வைக்கப்பட்டு பின் இதற்கான நினைவுச்சின்ன அடிக்கல் - ஆடிக்கலவரத்தில் பேரினவாத வெறியாட்டத்திற்கு பலியான வெலிக்கடைத் தியாகிகளை நினைவுகூரும் "வெலிக்கடைத் தியாகிகள் நினைவுத் திறந்த வெளி அரங்கு" அமைந்துள்ள கடற்கரையில் நாட்டப்பட்டு சமாதான நகரத்து விழா அரங்கேறியது.

"எவர் திருகோணமலையைக் கட்டியாளுகின்றாரோ அவரே இந்து மா கடலைக் கட்டியாளுகிறார்" என்று 19ம் நூற்றாண்டில் ஆங்கிலேயப் பேரரசின் தலைமை அமைச்சராக விளங்கிய "லோட் வெலிங்டன்" கூறியதை ஸ்ரீலங்கா அரச இயந்திரம் தக்க முறையிலே மனதிலிருத்தி தன் திட்டங்களை கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக செயற்படுத்தி வருவது கண்கூடு.

சமாதான கலாசாரம் உலகில் தோற்றம் பெற "யுனெஸ்கோ" ஆல் தெரிவு செய்யப்பட்ட 67 நகரங்களைப் போல திருகோணமலையும் வரலாற்றுப்புலம், பண்பாட்டு விழுமியம் கொண்டதுடன் ஏகாதிபத்தியச் சுரண்டல், ஆக்கிரமிப்பு, உரிமைப்போராட்டம் என்பவற்றுக்கு உள்ளானதாகவும் இருப்பது சமாதான நகரத் தோற்றப்பாட்டுக்குப் பொருத்தமுடையதே. எனினும், தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் சர்வதேசக் கவனயீர்ப்பைப் பெருவாரியாகப் பெற்றுள்ள வேளையிலே, ஸ்ரீலங்கா அரசாங்கம் அதற்கெதிராக அனைத்துலக சூறாவளி பரப்புரைகளை பல்வேறு வகையிலும் மேற்கொண்டு வரும் இவ்வேளையிலே தமிழ்த் தேசியத்தின் ஆள்புலத்தின் தலைநகர் சமாதான நகராகத் தெரியப்பட்டிருப்பது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இவை தொடர்பான தகவல்கள் ஒளிவுமறைவின்றி இதுபற்றி சிந்திக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.


செல்வநாயகம்

சமாதான நகர அங்குரார்ப்பண நிகழ்வு தி/புனித மரியாள் கல்லூரி அரங்கிலே நடைபெற்ற வேளையில் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆற்றிய உரைகள் தமிழர் தாயகம் மீதான அவர்களது "ஆழமான சிந்தனையை வெளிப்படுத்தியிருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆரம்பத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினரான நஜீப் அப்துல் மஜீத் அவர்கள் "சமாதானம் என்பது "சமாதானம் என்று காகிதத்தில் எழுதுவதாலும், சுவரொட்டிகளாலும் வந்து விடாது" என்ற அற்புதமான கருத்தைச் செப்பியிருந்தார். இக்கருத்து நன்கு சிந்திக்கத்தக்கது. ஆனால், சிந்திக்க வேண்டியவர்கள் யார்?" என்பதுதான் எம் முன்னால் எழுகிற கேள்வி. ஏனெனில், தமிழ் மக்கள் சமாதானத்திற்கு எதிராக ஒரு போதும் நின்றதில்லை. நிரந்தர கௌரவமான சமாதானத்திற்காகவே இத்தனை அளப்பரிய தியாகங்களைச் செய்து வருகிறார்கள். மேலும், "சமாதானம்" என்பதற்கான அரபு மொழிச் சொல்லின் விளக்கம் "நியாயமான நிறைவான அமைதி" என்றமைவது கௌரவ பாராளுமன்ற உறுப்பினருக்கு விளங்கியிருக்காது என்பதா?

"துரதிஷ்டவசமாக சமாதானம் என்பது கைநழுவிப் போகும் ஒன்றாகவே காணப்படுகிறது" என்று பிரதியமைச்சர் டிலான் பெரேரா கூறியிருப்பதும் ஆளும் வர்க்கத்துக்கு இடித்துரைக்கப்பட வேண்டிய செய்தி அல்லவா? கதிரைகளைத் தக்க வைக்கும் சுயநல சக்கடத்தார் ஏறிய குதிரையில்" ஏறி ஆட்சி நடத்தும் "கனவான்"களால் திட்டமிட்டு "சமாதானத்திற்கான சகல கதவுகளும் இறுகச் சாத்தப்பட்டுள்ளன.

இதில் உரையாற்றிய தபால் தொலைத்தொடர்பு சாதனத்துறை அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் திருகோணமலையை வர்த்தக தலைநகராக்க அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டு செயலாற்றி வருகிறோம்" என்று கூறியது சர்வதேச அரங்கிலே நிதி திரட்டலுக்கான பிரச்சாரப் பீடிகையாகத் தென்பட்டது.

பொதுமக்களின் வரிப்பணத்தில் கட்டி மூன்றாடுகளாகத் தடை-போடப்பட்டுள்ள "திருமலை ஐக்கிய பொதுச்சந்தை"யைத் திறக்க விடாது தடை செய்து வரும் அரசு திருமலையில் அபிவிருத்தி / வர்த்தக தலைநகர் என்று கூறியிருப்பதன் பின்னணியில் பேரினவாத சூட்சுமம் பொதிந்துள்ளதை இவ்விடத்தில் அவசியம் நினைவூட்ட வேண்டியதாகிறது.

தமிழ்த் தேசியத்தின் தாயகக் கோட்பாட்டை வேரறுக்கும் நோக்குடன் குடியேற்றக் கொள்கையைத் திட்டமிட்டு சிங்கள பேரினவாதத்தை விசாலப்படுத்திய பெருமை மகாவலி அமைச்சுக்கு உரியது என்றால் மிகையாகாது. அதில் முக்கிய பொறுப்பிலிருந்த மாலிங்க ஹேர்மண் குணரட்ண என்பவர் 26.08.1990ல் வெளியான "சண்டே டைம்ஸ்"ல் கூறியிருந்த சில வரிகள் தேவை கருதி இங்கு மீள எடுத்தாளப்படுகிறது.

"... நாட்டின் 60வீதமான கடற்பரப்பு வடக்கு கிழக்கிலே இருக்கின்றது. இச்சூழ்நிலையை மாற்றியமைக்க 1983/84களில் பல திட்டங்கள் அமைச்சால் தீட்டப்பட்டன. மாதுறுஓயாவில் குடியேற்றம் மூலம் கிழக்கு மாகாணத்தைத் துண்டாடுவது. திருமலை நகரை வர்த்தக நகராக்க அரசுக்கு சிபாரிசு செய்வது. இதனூடாக திருமலையை கடற்படைத்தளமாகவும், முத்துக்குளிக்கும் தளமாகவும் ஆக்க எண்ணினோம். திருமலைக்கு வடக்கேயுள்ள "யான் ஓயா"வில் அணையைக் கட்டி ஆயுதபாணிகளாக குடியேற்றவாசிகளை (50,000 பேர்) இருத்த முனைந்தோம். என்றாலும் இவற்றில் பல கைகூடாமல் போய்விட்டன..." என்று "ஹேர்மன் குணரட்ண" விபரிக்கிறார். பதினேழு வருட ஆட்சியில் முன்னைய அரசாங்கம் செய்யத் தவறியதை ஐந்து வருட ஆட்சியில் இன்றைய அரசாங்கம் "தூசுதட்டி" முன்னெடுக்கக் கங்கணம் கட்டி நிற்பதன் முன்னறிவிப்பாக அமைச்சரின் இக்கூற்றை எடுத்துக் கொள்ளலாமல்லவா?

காலங்காலமாக தமிழ் மணம்பரப்பிய மட்டக்களப்பிலிருந்து 1961 ஏப்ரல் 10ல் பிரித்தெடுக்கப்பட்டு "அம்மான் ஏரி", "அம்பாறை"யாக புதிய நிர்வாக எல்லை வகுக்கப்பட்டதோடு மட்டுமல்லாது "திகாமடுல்ல" என்ற சிங்களத் தேர்தல் தொகுதியையும் உருவாக்கி விட்டு, இன்று "தீகவாபி"யை புனித நகராகப் பிரகடனப்படுத்தி கிழக்கு மாகாணத்தை "வளப்படுத்தி"-யுள்ளது ஸ்ரீலங்கா அரசாங்கம். இந்நிலையில் 1950களிலிருந்து "திருமலை புனித நகராக்கப்பட வேண்டும்" என்ற நியாய பூர்வமான கோரிக்கை மாற்றந்தாய் மனப்பாங்குடன் நோக்கப்பட்டுவருவது பற்றி இத்தருணத்திலேனும் உரத்துச் சிந்திக்க முற்படுவதுடன் அவசியம்.


டி.எஸ்.சேனநாயக்க

"கடந்த கால வரலாற்றை ஆராய்வதென்பது எதிர்காலத்திற்கான ஒளியைத் தேடிக்கண்டு-பிடிப்பதற்கே" என்ற வாக்கியத்திற்கிணங்க "புனித நகரக் கோரிக்-கையை ஒட்டியதாக ஒரு தகவல்: அன்று பிரதமராக இருந்த டட்லி சேனநாயக்க அவர்கள் திருமலை வந்த சமயத்திலே திருமலைப் பெரியவர்கள் புனித நகர் தொடர்பான மனுவைக் கையளிக்க அதனை அருகிலிருந்த அன்று உள்ளூராட்சி அமைச்சராக விளங்கிய மு. திருச்செல்வத்திடம் கையளித்த டட்லி உரிய நடவடிக்கை எடுக்கக் கோரினார். இதற்கமைய கே.சி.நித்தியானந்தனைத்

-13

# வெள்ளையர் சாதியத்தையும் பிரபுத்துவத்தையும் கையாண்ட விதம் !

இலங்கைச் சமூகத்துள் நிலவிய சாதியத்தை உயர்ந்த பட்சம் பயன்-படுத்தியவர்கள் பிரித்தானிய ஆட்சி-யாளர்கள். 1880களில் திரு.ஜேம்ஸ் பீரிஸ் பிரித்தானியாவிலிருந்து கல்வி கற்று பரிஸ்டராக இலங்கை வந்தார். அவர் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் மாணவர் அமைப்பின் தலைவராகவும் இருந்த ஒரு இலங்கையர். இருந்தாலும் அவர் கறாவ சாதியத்தைச் சேர்ந்தவராக இருந்ததால் அவரால் இலங்கை சட்டசபைக்கு தெரிவாகும் வாய்ப்பு இல்லாது போனது. லோன்டர் ஆளுனரின் ஆட்சிக்காலத-்தில் இலங்கைத் தமிழாகளின் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்-டவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன். இலங்கைச் சிங்களவர்க-ளின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் ஜே.பி.ஒபேசேகர.

1883 இலிருந்து 1890 வரை இந்நாட்டை நிர்வகித்தவர் ஆர்-தன் ஹோடன் எனும் ஆளுநர் ஆவர். இவர் இரவு விருந்துகளை ஏற்பாடு செய்வதில் மிகுந்த நாட்டம் உள்ளவர். அவ்வாறான சந்தர்ப்-பங்களில் நாட்டிலுள்ள வர்த்தகர்கள் முக்கியஸ்தர்களை அழைத்து விருந்து கொடுத்து நாட்டுப்பிரச்சினைகள் பற்றிப் பேசி சிலவற்றுக்கு தீர்வு வழங்கவும், சிலவற்றை மூடி மறைக்கவும் இவர்களைக் கொண்டு செய்தார்.

1890 - 1896 காலப்பகுதிக்குள் நாட்டை நிர்வகிப்பவர் ஹவுலொக் எனும் ஆளுநர். இவர் இரவு விருந்துகளை ஏற்பாடு செய்து சில சக்திகளை கைக்குள் போட்டுக் கொள்ள முயற்சித்தாலும் அவை அத்தனை தூரம் சாத்தியமாகி இருக்கவில்லை. 1896 இல் சேர் வெஸ்ட் றிச்வே எனும் ஆளுநர் பதவியில் அமர்ந்தார். இவர் ஏனையோரை விட சற்று ஜனநாயகம் உள்ளவர். இவரின் நிர்வா-கத்தின் கீழ் தான் தமிழ் மேட்டுக்குடி வர்க்கத்தவரிடம் இருந்த சட்டசபைப் பிரதிநிதித்துவம் தமிழ் சாதாரண வர்க்கத்தைச் (கரையார் சாதி) சேர்ந்த றொக்வூட் என்பவருக்கு கிடைத்தது.

அதுவரை சிங்களவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த பிரதிநிதித்-துவம் சேர் கிறிஸ்தோபர் ஒபேசேகரவுக்கு கிடைத்தது. அவர் 1917 வரை சிங்களப் பிரதிநிதியாக சட்டசபையில் இருந்தார். கொவிகம சாதி அல்லாத ஒரு சிங்கள பிரதிநிதி 1917இல் தான் அங்கம் வகிக்க முடிந்தது. அதன் படி கறாவ சாதியத்தைச் சேர்ந்த டொக்டர் பெர்-ணான்டோ என்பவர் சட்டசபைக்குத் தெரிவானார். அரசியல் செயற்-பாடுகளில் சாதிய தலையீடு மேலெழும்பிய போது பிரித்தானியர் அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். அவர்கள் எமது பலவீனமான அம்சத்தை அடையாளம் கண்டு அதற்கேற்றவாறு காய்களை நகர்த்தினர். அது பிரித்தானியரின் பண்பு.

1900இன் பின் படித்த இலங்கையர் அதிகரிக்கத் தொடங்கினர். இவர்கள் இந்நாட்டின் 'அரசியல் சீர்திருத்தத்தை' ஏற்றுக் கொண்டு சட்டசபை பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதில் அக்கறை காட்டினர். என்றாலும் சிலருக்கோ கறுப்பு வெள்ளையராக நடந்து கொள்வதி-லேயே ஆவல் கொண்டனர். இவர்கள் வெள்ளை இனத்தவரின் சீருடைகளை அணிந்து பேர்கள் மற்றும் சான்விச் போன்ற உணவு வகைகளை உண்ணுவதும் இரவு நேர பார்களுக்குச் செல்வதையும் தற்பெருமையாகக் கொண்டனர். இவர்களில் பலர் சட்டசபைப் பிரதிநிதித்துவத்தைக் கோரி நின்றது நாட்டின் மீது இருந்த பற்று என்பதை விட அவர்கள் தங்களை அதற்குள் நுழைத்துக் கொள்வது எப்படி என்பதில் கொண்டிருந்த ஆர்வமே காரணமாகும்.

சேர் ஜேம்ஸ் பீரிஸ் கூட இவ்வகையான பிரதிநிதித்துவம் நாட்டின் உயர் வர்க்கத்தவருக்குக் கிடைக்க வேண்டும் என்றே கருதினார். சாதாரண இலங்கையருக்கு அதிகாரம் கிடைக்கச்-செய்வதில் இவர்களுக்கு தேவை இருக்கவில்லை.

பண்டாரநாயக்க-சேனநாயக்க போன்ற பிரபுத்துவ குடும்பங்களும் இவ்வாறு தான் எதிர்பார்த்தார்கள். அது சகலரும் அறிந்த இரகசியம்.

எவ்வாறிருப்பினும் ஜேம்ஸ் பீரிஸ் எனும் பாத்திரமானது இந்த காலகட்டத்தில் மிகவும் முக்கியமான நபராக இருந்தார். அவர் பிரித்தானியாவில் கல்வி கற்று இந் நாட்டுக்கு திரும்பிய கோடீஸ்வர வர்த்தகராக இருந்த ஜேகோப் டிமெல்லின் மகளை திருமணம் முடித்தார். இதன் பின்னர் தான் அவர் அரசியலில் ஈடுபடவும் தொட-ங்கினார். அந்தக் காலகட்டத்தில் வேறு அரசியல் ஆர்ப்பாட்டங்கள் அல்லது கிளர்ச்சிகள் இலங்கையில் காணப்படவில்லை. சீர்திருத்தம் வேண்டி பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு தந்தி அனுப்பிக் கொண்டிருப்பதே இவர்களின் வேலையாக இருந்தது. 1908இல் சேர் ஜேம்ஸ் பீரிஸ் பிரித்தானிய ஆளுனரால் குடியேற்ற காரியதரிசிக் காரியாலயத்துக்கு ஒரு தந்தி அனுப்பப்பட்டது. தற்போது சிங்க-ளவருக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற ஒரு பிரதிநிதித்துவத்தை இரண்டாக ஆக்கும்படி தான் கோரினார்கள்.

வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யக்கூடிய வகையில் அந்த பிரதிநிதித்துவத்தை அமைக்குமாறு அவர்கள் கேட்டுக் கொண்-டார்கள். சர்வஜன வாக்குரிமையைப் பற்றிக் கூட அவர்கள் கோரி-யிருக்கவில்லை. வரையறுக்கப்பட்ட வாக்குரிமையைப் பெற்று அதனை பிரபுத்துவ சக்திகளிடம் மட்டும் வைத்துக் கொள்வதையே அவர்கள் விரும்பியிருந்தார்கள். வாக்குரிமை, ஜனநாயக சட்டசபை மற்றும் ஆட்சி நிர்வாகம் என்பவை வெள்ளையர் மற்றும் "கறுப்பு வெள்ளையரிடம்" வைத்துக் கொள்கின்ற தந்திரோபாயம் வகுக்கப்பட்டது அப்படித்தான்.

ஜேம்ஸ் பீரிசுக்குப் பின்னரும் இவ்வகையான தந்திகள் குடியேற்ற காரியதரிசிக் காரியாலயத்துக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தது. அந்தச் சகல சந்தர்ப்பங்களிலும் அவர்கள் சீர்திருத்தம் வேண்டித் தான் தந்தி அனுப்பிக்கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எச்.ஜே.சி.பெரேரா, கரைநாட்டு உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பாக ஹென்ரி பீ.டி.மெல், யாழ்ப்பாணச் சங்கத்தின் சார்பில் எச்.ஏ.அருளானந்-தன், சிறி லங்கா நெஷனல் அசோசி-யேசன் (பின்னர் தேசிய காங்கிரஸ்) சார்பில் ஆத்தர் அல்விஸ், சிலாபச் சங்கத்தின் சார்பில் முதலிந்து ஜே.சீ.எல்.செனவிரத்ன போன்றோர் இது போல பிரித்தானியாவுக்கு தந்தி அனுப்பிய கனவான்களாவர்.

இந்தத் தந்திகள் பிரித்தானிய ஆளுனர்களுக்கு ஊடாகவே அனுப்பப்பட வேண்டும். அன்று பிரித்தானிய ஆளுனராக இருந்த ஹென்ரி மெக்கலம் இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் கபடத்தனமாக நடந்து கொண்டார். அவர் இந்த தந்திகளை அனுப்புகின்ற போது கூடவே தனது சிபாரிசுகளையும் சேர்த்து அனுப்பத் தவறுவதில்லை. இலங்கையருக்கு சர்வஜன வாக்குரிமை அளிப்பது மோசமான காரியம் என்று அவர் பிரித்தானியாவுக்கு தகவல் அனுப்பியிருந்தார். அந்தச் சிபாரிசுகளில் ஜூரி சபைக்கு பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்ற வழிமுறையைப் போலவே சட்டசபைப் பிரதிநிதித்துவ விடயத்திலும் பின்பற்றப்பட வேண்டும் என்று அறிவித்திருந்தார். அன்றைய காலகட்டத்தில் ஜூரிகள் சபைக்கு தெரிவு செய்யப்-படுபவர்கள் கல்வித் தகுதியுடையோரும், சொத்துடையோரும் மட்டுமே. இதன்படி வாக்குரிமையைக் கட்டுப்படுத்தி அதனை சிறு அளவிளானோருக்கு மட்டும் கிடைக்கச் செய்வதன் மூலம் சிக்கலின்றி ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டு நடத்த முடியும் என்று மெக்கலம் பிரித்தானியருக்குத் தெரிவித்திருந்தார். அல்லது போனால் நாட்டிலுள்ள கனவான்கள் மற்றும் அரசின் மேல்மட்ட நிர்வாகிகள் என்போரைக் கொண்டு நாட்டின் நிர்வாகத்தை நடத்த முடியும் என்று அவர் கூறியிருந்தார். இந்த அத்தனை கருத்துக்கைளையும் ஆராய்ந்த பிரித்தானிய குடியேற்றச் செயலாளர் இலங்கைக்கு சிறு அளவிலான ஒரு சீர்திருத்தத்தை வழங்க முடிவு செய்தார். அதன்படி 1911 இல் சீர்திருத்தம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. அது 1912இலிருந்து அமுலுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது.

15ஆக இருந்த சட்டசபை அங்கத்துவம் 21ஆக அதிகரிக்கப்பட்டது. அதன்படி அப்பிரதிநிதித்துவம் பின்வருமாறு அரச அதிகாரிகள் 11, நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை (கரையோரச் சிங்களவர்) சிங்கள பிரதிநிதிகள்-2, தமிழ் பிரதிநிதிகள்-2, கண்டியச் சிங்களவர்-1, முஸ்லிம்-1, என்கிற வகையில் இது அமைந்தது. வாக்களிப்பின் மூலம் எஞ்சிய 4 பேரை தெரிவு செய்யும் வகையில் அமைக்கப்பட்டது. ஐரோப்பியர் 2 பேர், பறங்கியர்-1, படித்த இலங்கையர் 1 என்கிற ரீதியில் இது அமைந்தது.

**சாம் விஜேசிங்க**

(முன்னாள் பாராளுமன்ற செயலாளர்)

லங்காதீப 24.10.99

நன்றி - நூலகத்திட்டம்



சிங்கள வீரவிதான

# பாசிசம் ஜாக்கிரதை!

"தேசிய இயக்கத்தில் பாசிசப் போக்கு வரத்தொடங்கியுள்ளது..."

இவ்வாறு கூறியவர் வேறு யாருமல்ல சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு கோட்பாட்டு உருவம் கொடுப்பதில் பெரும் பங்கு வகித்து வந்தவரும் "ஜாதிக்க சிந்தனைய" அமைப்பின் தலைவருமான நளின் டி சில்வா தான். திவய்ன பத்திரிகையில் தான் தொடர்ந்து எழுதி வரும் பத்தியில் (16 மே 1999) சிங்கள வீரவிதான பற்றி அவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

"வீரவிதானவின் தலைவர் சம்பிக்க ரணவக்க ஒரு சிங்கள பௌத்த பாசிஸ்ட்"

இதனைக் கூறியவர் அமைச்சர் மங்கள சமரவீர கடந்த ஒக்டோபர் 14ஆம் திகதி செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

இந்த இரு கூற்றுக்களையும், அதனைக் கூறியவர்களையும் கவனமாகப் பாருங்கள். முன்னையவர் சிங்கள பௌத்த பேரினவாத வெறிக்கு சித்தாந்த வடிவம் கொடுப்பதில் முன்னின்று வருபவர். இரண்டாமவர் சிங்கள பௌத்த அரச கட்டமைப்புக்கு தற்போது தலைமை ஏற்றிருக்கும் அரசாங்கத்தின் தற்போதைய பேச்சாளராக இருப்பவர். இந்தச் சக்திகளே இப்படி ஒரு இடத்தை வந்தடைந்திருக்கின்றன என்றால் தற்போதைய அடக்கப்படும் தமிழ், முஸ்லிம், மலையக தேசங்கள் இது குறித்து எவ்வளவு விழிப்புடன் இருக்க, செயற்பட வேண்டியிருக்கிறது என்பதை விளங்கிக் கொள்வோம்.

இன்றைய பேரினவாதம் பாசிச வடிவமெடுக்கத் தொடங்கி விட்டது. கடந்த கால இனக்கலவரங்கள், மற்றும் ஏனைய இனங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எதற்கும் ஒரு ஒரு நிறுவனமயப்பட்ட அமைப்போ, சமூக கட்டமைப்போ, அதற்கான ஸ்தூலமான சித்தாந்தமோ இருந்தது கிடையாது. அவை சிதறுண்ட சித்தாந்தமாகவும், நிறுவனங்களாகவும், தனி நபர் வெறியாகவுமே இருந்திருக்கின்றன. ஆனால் இன்றைய பேரினவாதம் அப்படிப்பட்டதல்ல. அதற்கு என்று இன்று சிங்கள வீர விதான எனும் "அமைப்பு" வந்து விட்டது. சிதறியிருந்த சிங்கள பௌத்த சித்தாந்தம் ஒன்று மையப்படுத்தப்பட்டு அதற்கு கோட்பாட்டுருவம் கொடுக்கப்பட்டாகி விட்டது. அதற்குத் தெளிவான அரசியல் வடிமும் கூட இருக்கிறது. அது இனி எடுக்க வேண்டிய வடிவம்? இராணுவ வடிவம் தான் என்கிற நிலையை உணர்த்தி நிற்கிறது. சமீப காலமாக வீரவிதானவுக்கு வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்கள் இறக்கப்பட்டிருப்பதாகவும், இது வரை 200 பேருக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு முன்னாள் இராணுவத்தினரைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டிருப்பதாகவும் கூட அரசாங்க தரப்பைச் சேர்ந்தவர்களே கூறித் திரிகிறார்கள்.

## கடந்த கால பேரினவாதம்

இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் என்று கூறப்படும் அனகாரிக்க தர்மபால சிங்கள பௌத்தர்களல்லாதவர்கள் மீது ஏற்படுத்திய (அவர் நடத்திய "சிங்கள பௌத்தயா" பத்திரிகை 1997இல் 100 வருட நிறைவைக் கொண்டாடியது) இனக்குரோதம் மற்றும் புனைவுகள், கற்பிதங்கள், ஐதீகங்கள் என்பவை பின்னர் வளர்க்கப்பட்ட சிங்கள பௌத்த தூய்மைவாதத்துக்கு பலம் சேர்த்தன. அதன் பின்னர் அரசியல் கட்சிகள் தொடக்கம், வெகுஜன இயக்கங்கள் வரை பல சிங்களத் தூய்மையைப் பாதுகாப்பதற்கான இயக்கங்கள் தொடக்கப்பட்டன.

70களின் பிற்பகுதி மற்றும் 80களின் முற்பகுதி தமிழ்த் தேசப் போராட்டம் முனைப்பு பெற்றதும், அது ஆயுதப் போராட்டத்துக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட சூழலும் தென்னிலங்கையில் அரசியல் கட்சிகள் போட்டிக்கு பேரினவாதம் பேசத் தொடங்கின. பேரினவாதம் பேசாமல் அரசியலில் இருப்புக் கொள்ள முடியாத நிலை தோன்றியது. பேரினவாதமயமாக்கல் என்பது மிகவும் நுணுக்கமாகவும், சாமர்த்தியமாகவும் வளர்ந்து வேரூன்றத் தொடங்கியது.

ஆரம்பத்தில் பாஷா பெரமுன, தேசப்பிரேமி பிக்கு பெரமுன, தேசிய விடுதலை முன்னணி, போன்ற அமைப்புகள் அரசியலில் ஈடுபட்டன. அதன் பின்னர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் "ஹெல உருமய" எனும் இனவாத அமைப்பு இயங்கத் தொடங்கியது. களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்ன (1994இல் ஐ.தே.க.வில் இணைந்தார்) தலைமையிலான இந்த அணியில் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரனும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் இன்றைய ஐ.தே.க. பிரமுகருமான அனுர பண்டாரநாயக்கவும் இருந்தார். 70களின் பிற்பகுதி மற்றும் 80களின் ஆரம்ப காலகட்டங்களில் ஐ.தே.க.வுக்குள் இருந்த முக்கிய அணி மாத்ரு பூமிய குழுவினர். இதனை நடத்தியவர் களனி தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவரும், 1983 கலவரத்தில் முக்கிய பங்காற்றியவருமான சிறில் மெத்திவ். இவர் "மாத்ரு பூமிய" எனும் இனவெறியைத் தூண்டும் பத்திரிகைய்ய அன்று நடத்தி வந்தார். இது இரு வருடங்கள் வெளிவந்து நின்று போனாலும், பொய் புனைவுகளையும் பேரினவாதத்தையும் பரப்பி அப்பத்திரிகை ஆற்றிய பாத்திரம் முக்கியமானது.

அதன் பின்னர் கூட நூற்றுக்கணக்கான இனவாத அமைப்புகள் தோன்றின. ஆனால் அவற்றில் எதுவும் தொடர்ச்சியாக நிலைபெறவில்லை. ஆனாலும் 80களில், 90களில் பேரினவாத கட்சிகளாகவே பகிரங்கமாக அடையாளம் காணப்பட்ட கட்சிகள் மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் "சிங்களயே மகா சம்மத்த பூமி புத்திர பக்ஷய" (சிங்கள மண்ணின் மைந்தர்கள் கட்சி) 1989 தேர்தலில் பராளுமன்றத்துக்கு 2 உறுப்பினர்கள் தெரிவான ம.ஐ.மு. 1994இல் படுதோல்வி அடைந்தது. இதற்குரிய காரணமாக தென்னிலங்கை புத்திஜீவிகள் மத்தியில் "இனவாதத்துக்கு சிங்கள மக்கள் கொடுத்த சாட்டை அடி" என்ற போதும் அது அல்ல ஐ.தே.க. மீது தென்னிலங்கை சிங்கள மக்கள் கொண்டிருந்த வெறுப்பும் அந்த எதிரிக்கு எதிரான சக்தியை (பொ.ஐ.மு.-வை) பலப்படுத்த வேண்டும் என்கிற அவாவும் தான் காரணமாகின. மண்ணின் மைந்தர் கட்சியைப் பொறுத்தவரை அது அவ்வளவு செல்வாக்கைப் பெறவில்லை. அதற்கான காரணம் அது பாராளுமன்ற அரசியலை இலக்காக மட்டுமே கொண்டு இனவாதம் பேசத்தொடங்கியமை தான். இந்த இடத்தில் தான் சிங்கள வீரவிதானவோடு தொடர்புறுத்தி பார்க்க வேண்டும். வீரவிதான இன்று வரை பாராளுமன்ற அரசியலில் அக்கறை காட்டவில்லை. அரசியல்வாதிகளை கடுமையாக எதிர்க்கிறார்கள், தேர்தற் காலங்களில் அவர்களும் சமாந்தரமாக இயங்குகிறார்கள். "சிங்கள பௌத்தர்களின் துரோகிகள்" என்று ஏனைய கட்சிகளை அம்பலப்படுத்த அந்தக் காலங்களை நன்றாக பயன்படுத்திக்கொள்கிறார்கள். அவர்களின் மூலோபாயம் சிங்கள பௌத்த அரசை கட்டியெழுப்புவதற்காக அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக இருந்தாலும் அவர்களின் தந்திரோபாயத்தின்படி அவர்கள் தற்போதைக்கு தாங்கள் இந்த பாராளுமன்ற அரசியலில் இல்லை என்பதை தமது நடவடிக்கைகளின் மூலம் வெளிக்காட்டி வருகின்றனர்.



## வீரவிதான தோற்றமும் அமைப்பும்

வீரவிதான இயக்கம் 1995 யூலை 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அதனை ஒரு இரகசிய இயக்கமாகவே ஆரம்பித்தனர் என்ற போதும் இதனை சமூக சேவைகள் திணைக்களத்தில் "ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகவே" பதிவு செய்திருந்தார்கள். பதிவு செய்வதற்காக அவர்களின் கொள்கை, செயல்திட்டம், யாப்பு, என்பவை கொடுக்கப்பட வேண்டும். அதனைக் கொடுத்தார்கள். ஆனால் அதில் உள்ளவை அல்ல பின் வந்த நாட்களில் அவர்கள் முன்வைத்த செயற்திட்டங்களும், கொள்கைகளும். இதன் ஆரம்பகர்த்தாவான சம்பிக்க ரணவக்க முன்னர் ஜே.வி.பி.யின் ஆரவாளராக இயங்கிவந்தவர். அதன்பின் "ஜனத்தா மித்துரோ" (மக்கள் தோழர்) எனும் அமைப்பை நிறுவி இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பு பற்றிய பல கருத்தாக்கங்களைப் பற்றி ஆராய்ந்தனர். ஏகாதிபத்திய எதிர்ப்பின் அவசியம் பற்றி அதிகம் இவ்வமைப்பால் பேசப்பட்டது. 90களின் ஆரம்ப அரை தசாப்தகாலமாக இயங்கிய பல்வேறு இனவாத அமைப்புகள் உதிரி உதிரியாக பல்வேறு செயற்பாடுகளை செய்தனர். நளின் டி சில்வா, குணதாச அமரசேகர, மாதுலுவாவே சோபித்த ஹிமி, எஸ்.எல்.குணசேகர, பெங்கமுவே நாலக்க ஹிமி, மடிகே பஞ்ஞானசீல தேரோ போன்றோர் இதனை வழிநடத்தியவர்களில் முக்கியமானவர்கள்.

ஆனால் சம்பிக்கவின் சளைக்காத செயற்திறன், வேகம் என்பவற்றுக்கு முன்னால் அவர்களால் நின்று பிடிக்க முடியவில்லை. சம்பிக்க மெதுமெதுவாக இவ்வமைப்புகளில் தனது சகாக்களை ஊடுருவ வைத்தும் நேரடியாக அனைவரையும் "சேர்த்து சிங்கள ஆணைக்குழு"வை ஏற்படுத்தியும் செயற்பட்டதுடன், சகல அமைப்புகளிலும் இருந்தவர்களில் பெரும்பாலானவர்களை தனது பக்கம் சேர்த்துக் கொள்ள முடிந்தது. அவர்களில் பெரும்பாலானோரை இன்று வீரவிதானவோடு இணைத்து அவர்களின் முன்னைய அமைப்புகளை அப்படியே தனது கட்டுப்பாட்டுக்குள்- ஒரே குடையின் கீழ்- கொண்டுவர சம்பிக்கவால் முடிந்தது.

சிங்கள் வீரவிதானவின் கீழ் பல்வேறு நிறுவனங்களை பினாமி பெயர்களில் தொடக்கினார்கள். "ஸ்ரீ லங்கா ஐக்கிய வர்த்தகர் சங்கம்" இதில் முக்கியமானது. (ஆரம்பத்தில் சிங்கள வர்த்தகத்தின் வளர்ச்சிக்காகவே இது தோற்றுவிக்கப்பட்டதாக அதன் தேசியக் கமிட்டி உறுப்பினர் குலதுங்க ராஜபக்ஷ குறிப்பிடுகிறார் - "ஹெலருவன" செப் 99) இதன் நூற்றுக்கணக்கான கிளைகள் இன்று நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சிங்களவர் மட்டும் உற்பத்தியில் ஈடுபட வேண்டும், ஏனைய இனத்தவரிடமிருந்து விவசாய மற்றும் தொழிற்துறையை படிப்படியாக கைப்பற்றுவது என்பவை தான் வழிமுறை. கிரிபத்கொடவில் கடந்த வருடம் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான "கிறிஸ்தம்பு பாரம்" கடையை கைவிடச் சொன்னதும், கேட்காத நிலையில் அதனை குண்டு வீசி தகர்த்ததும், இந்த அடிப்படைகளில் தான். அது போல நுவரெலியா, கண்டி, பொரல்லை போன்ற இடங்களில் தமிழர்களின் கடைகளில் ஒன்றும் வாங்க வேண்டாம் என்று துண்டுப்பிரசுரம் விநியோகித்ததும், சிங்களவர்கள் என்னென்ன பொருட்களை நுகரலாம் எவற்றையெல்லாம் வாங்கக்கூடாது என்ற பட்டியலைத் தயாரித்து துண்டுப்பிரசுரமாக வெளியிட்டதும், (இந்தப் பிரசுரமும் பட்டியலும் "சித்திஜய" எனும் சஞ்சிகையின் ஓகஸ்ட் இதழில் வெளியாகியுள்ளது) சகல வங்கிகளிலும் தமிழர்களின் கணக்குகளைப் பற்றிய தரவுகளைச் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வர்த்தகர் சங்கத்தால் சிங்கள மாணவர்களுக்கென புலமைப்பரிசில் திட்டங்கள் உள்ளிட்ட திட்டங்களை செய்து வருவதுடன், வர்த்தகர்கள் பலரை உலக நாடுகள் பலவற்றுக்கு அவரவர் சார்ந்த துறை பற்றி அறியவும் பயிற்சி பெறவும் உறுப்பினர்களை அனுப்புதல். எவரெவர் இப்படி போய் வந்திருக்கிறார்கள் என்பதை வீரவிதானவின் உத்தியோகபூர்வ பத்திரிகையில் படங்களுடன் பிரசுரிக்கிறார்கள்.



மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர

இதனை விட "வீரவிதான பெண்கள் இயக்கம்" எனும் இயக்கம் பெண்கள் மத்தியில் இயங்கி வருகிறது. பெண்களை இலக்காகக் கொண்ட அணிதிரட்டலுக்கும் வீரவிதானவின் நிகழ்ச்சிகள், கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் என்பவற்றின் போது பெண்களைக் கொண்டு செய்விக்கின்ற "பணிவிடைகளை" செய்விக்கின்றார்கள். செப்டம்பர் 17ஆம் திகதி அனகாரிக்க தர்மபாலவின் 135வது சிராத்த தினத்தை முன்னிட்டு படையினருக்கு ரத்த தானம் வழங்கும் நிகழ்ச்சியொன்று அவிஸ்ஸாவெல்ல ஸ்ரீ சுதர்மாராம பிரிவேனா விகாரையில் ஒழுங்கு செய்திருந்தது பெண்கள் இயக்கமே என்பது குறிப்பிடத்தக்கது.



சம்பிக்க ரணவக்க

அடுத்தது முக்கியமான ஒன்று பயங்கரவாத ஒழிப்பு தேசிய இயக்கம் (NMAT) இது கடந்த 1998 மார்ச் 5ஆம் திகதி மருதானை குண்டு வெடிப்பைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டதாக அது அறிவிக்கிறது. இவ்வருடம் ஜனவரி 14ஆம் திகதி இவ்வமைப்பின் வேலைத்திட்டம் முன்வைக்கப்பட்டது. பெரும் கூட்டமொன்றை ஏற்பாடு செய்து முன்வைக்கப்பட்ட இக்கூட்டத்தில் உரையாற்றிய சம்பிக்க ரணவக்க "இந்த வேலைத்திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டால் படைக்கு ஒரு லட்சம் இளைஞர்களை நாம் தருவோம்" என்றார். (இந்த அறிக்கை பற்றிய முழு விபரமும் பெப்ரவரி சரிநிகரில் வெளிவந்தது.) தமிழ் மக்களை எப்படி நிரந்தர கண்காணிப்புக்குள் வைத்திருப்பது, "பயங்கரவாதிகளை" எப்படி ஒழிப்பது என்பதற்கான அவர்களின் திட்டம் அதில் தெளிவாக இருந்தது. இவ்வமைப்பை சிங்கள வீரவிதானவின் கீழ் இயங்குகின்ற அமைப்பாக அவர்கள் ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் வீரவிதானவின் தலைவர்களில் பெருமளவானோர் (சம்பிக்க உட்பட) இதில் உள்ளனர். வீரவிதானவின் வெப் தளத்தில் NMATயின் கொள்கை, வேலைத்திட்டம் என்பவற்றையும் உள்ளடக்கியிருக்கிறார்கள்.

## ஊடுருவல் (PLANTING)

பாசிசத்தின் முக்கிய தந்திரோபாயங்களில் ஒன்று அது முக்கிய சகல தளங்களிலும் ஊடுருவி தன்னை நிலைநிறுத்தி, காலப்போக்கில் கைப்பற்றி, கட்டுப்படுத்தும். இன்று வீரவிதான ஊடுருவாத தளங்கள் இல்லையெனலாம். பிரதான அரசியற் கட்சிகளை எடுத்துக்கொண்டால் ஐ.தே.க.வின் முன்னாள் மேல்மாகாண முதலமைச்சர் சுசில் முனசிங்க இதில் ஒரு அங்கத்தவர். அது தவிர ஐ.தே.க.வின் தற்போதைய தலைமை மட்டத்தில் உள்ள பிரபல நடிகர் ரவீந்திர ரந்தெனிய வீரவிதான கூட்டங்களின் முக்கிய பேச்சாளராகக் கலந்து கொண்டு வருகிறார். (பார்க்க ஹெலருவன-ஜனவரி 99) அம்பாறையிலுள்ள பிரதேச சபைத் தலைவர் தயா கொப்ரல் (ஐ.தே.க.) என்பவர் இதன் அமைப்பாளராக உள்ளார். இவரது காரில் வீரவிதானவின் கொடியை மாட்டிக்கொண்டு தான் செல்கிறார். ஆனால் பலாங்கொடயில் ஒக்டோபரில் நடத்தப்பட்ட கூட்டமொன்றில் ஐ.தே.க.வின் பொதுச்செயலாளர் காமினி அத்துகோரல "..வீரவிதான இயக்கத்துடன் ஐ.தே.க. தொடர்பு வைத்திருந்தால் தகவல் தாருங்கள்" எனப் பேசியிருக்கிறார். உண்மைதான் தலைமை முழுவதும் வீரவிதானவிடம் இதுவரை சரணடையவில்லை. ஆனால் இன்றைய நிலைமையில் அதற்கான காலமும் வெகுதூரத்தில் இல்லை.

பொ.ஐ.மு.வைப் பொறுத்தவரை ஏற்கெனவே ஸ்ரீ.ல.சு.க. என்பது சிங்களப் பேரினவாதத்தின் மீது தான் அது அரசியல் நடத்தி வந்துள்ளது. சிங்கள பௌத்தத்தை நிறுவனமயப்படுத்துவதில் அதற்கு ஒரு பாரம்பரியம் உண்டு. கள்ளத்தோணிகள் என்று இந்திய வம்சாவழியினரை நாடகடத்தியது. பௌத்த மதத்தை அரச மதமாக்கியது, சிங்களம் மட்டும் சட்டத்தை கொண்டு வந்தது போன்ற புலவற்றை அடுக்கிக்கொண்டு போகலாம். இன்று அது "செத்துப்போன" பாரம்பரிய இடதுசாரி கட்சிகளை வைத்துக்கொண்டு முற்போக்கு முகமூடி போட்டுக்கொண்டிருந்தாலும் அதிலுள்ள பலர் வீரவிதானவுடன் தொடர்புடையவர்களாக இருக்கின்றார்கள். "சிங்கள ஆணைக்குழு" விசாரணை நடத்தியபோது அதில் சிங்கள மக்கள் தமிழ், முஸ்லிம்களால் அழிக்கப்பட்டு வருவதாக சாட்சியம் கூறியவர் பொ.ஐ.மு.வின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜயசேன ராஜகருணா. 1998 மே 26ஆம் திகதி இவர் அந்த சாட்சியத்தை அளித்திருந்தார். இன்று தீர்வுப்பொதி தொடங்கி, சமவாய்ப்புச் சட்டம் வரை பாசிசத்துக்கு விட்டுக்கொடுத்தமை வெறும் அதன் சரணடைவையோ, இயலாமையையோ மட்டும் காட்டவில்லை. பொ.ஐ.மு.வுக்குள்ளேயே எத்தனை எதிர்ப்புகள் இருந்தன என்பதையும் சேர்த்து அம்பலப்படுத்தின.

## அச்சக்திகள் யார்?

படையிலிருந்து ஓய்வுபெற்றவர்கள், மற்றும் இன்னும் களத்தில் இருக்கும் படைத்தலைவர்களும் வீரவிதானவின் முக்கிய பொறுப்புகளில் இருப்பவர்கள். உதாரணத்திற்கு மேஜர் ஜெனரல் லக்கி அல்கம இதன் அமைப்பாளர்களில் ஒருவர், அதுபோல மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர வீரவிதானவின் நிறைவேற்றுச் செயலாளராக இருக்கிறார். பிரேமதாச காலத்தில் ஜே.வி.பி.

நன்றி - நூலகத்திட்டம்



இளைஞர்களை புனருத்தாபனம் செய்யும் பொறுப்பில் இவர் இருந்தார். (அந்த முகாம்களில் தான் பெரும் சித்திரவதைகள், கொலைகள் நடந்தன என்பது தெரிந்ததே.) "ஹெலருவன" செப்டம்பர் இதழில் தீர்வுப்பொதிக்கு எதிரான இவரது கட்டுரையொன்றும் பிரசுரமாகியிருக்கிறது. இவர் கடந்த 17 ஒக்டோபர் லங்காதீப பத்திரிகைக்கு வீரவிதானவின் சார்பாக அளித்துள்ள பேட்டியின் போது அரசியலில் ஈடுபடுமா வீரவிதான என்று கேட்ட கேள்விக்கு

"எங்களின் நோக்கம் சிங்கள இனத்தை அணிதிரட்டி இடிந்துபோன சிங்கள பொருளதாரத்தை தூக்கி நிலைநிறுத்துவதே. சகல பேதங்களையும் கடந்து சிங்களவர்களை அணிதிரட்டுவதே.

அப்படியென்றால் அமுக்கக்குழுவா?

அமுக்கக் குழுவென்பது வெறும் கிளர்ச்சிகர வடிவமல்லவா? அரச யந்திரத்தில் துருப்பிடித்த பக்கங்களை சுத்தப்படுத்துவதே எமது வழிமுறை." எனப் பதிலளித்துள்ளார்.

சில மாவட்டங்களில் பொலிஸ் அதிகாரிகள் இதன் அமைப்பாளர்களாக இருப்பது வீரவிதானவின் பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தது.

### தொடர்புசாதனங்களைக் கைப்பற்றல்

இன்றைய தொடர்புசாதன உலகில் பெரும்போக்கு எதுவோ அதனை பின்தொடர்ந்து செல்பவர்கள் தான் முதலாளித்துவ சந்தையில் நிலைக்க முடிகிறது. அந்த வகையில் இன்று சிங்களப் பேரினவாதத்தை உயர்த்திப் பிடிப்பதில் சிங்கள தொடர்பு சாதனங்களுக்கிடையில் போட்டா போட்டி நிலவுகிறது. அச்சு ஊடகங்கள், வானொலி, தொலைக்காட்சி உள்ளிட்ட இலத்திரனியல் ஊடகங்கள் சகலதற்கும் இது பொருந்தும். திவய்ன (அதன் சகோதரப் பத்திரிகை The Island) இலங்கையில் அதி கூடிய விற்பனை உள்ள பத்திரிகையாக இருப்பது இதனால் தான். தொலைக்காட்சி சேவைகளிலேயே டீ.என்.எல். அதிக இனவாதம் கக்கும் ஒன்றாகும். அதுபோல "சிரச", "சவன" இரண்டும் இந்த வகையறாக்களைச் சேரும். வீரவிதானவின் செய்திகளுக்கு இவை அதிக முக்கியத்துவம் வழங்கி வருகின்றன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் லங்காதீப பத்திரிகைக்குச் சென்ற சம்பிக்க ரணவக்க அது சிங்களவர்களுக்கு எதிரான பத்திரிகையென்றும் சிங்கள இனத்தவருக்கு எதிரான இதனை மக்கள் தகர்ப்பார்களென்றும் மிரட்டியிருக்கிறார். பின்னர் அவரை "விஜய" வெளியீடு நிறுவனத்தின் நிர்வாகம் அழைத்து இருத்தி அவரையே இனி 'எழுதும்படி கேட்டுக் கொண்டதன் பின்னர். ஞாயிறு Sunday Timesஇல் எழுத வைத்திருக்கிறது. "கும்பகர்ண" எனும் பேரில் எழுதப்படும் இந்த வாராந்த பத்தி உடனடியாக சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு லங்காதீபவிலும் வெளியாகி வருகிறது. வீரவிதானவுக்கு இவ்வருடத்திலிருந்து வெப் தளத்தையும் நிறுவியுள்ளது. http// www.svv.org எனும் இத்தளத்தில் பெருமளவு கட்டுரைகள், கொள்கை விளக்கங்கள், வேலைத்திட்டம், அறிக்கைகள் எல்லாம் உள்ளடக்கப்பட்டுள்ளன. 'கும்பகர்ண'வின் கட்டுரைகளும் இதில் அடக்கப்பட்டுள்ளன. ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க., ஜே.வி.பி.க்கு கூட வெப் தளங்கள் இருக்கின்றன. ஆனால் இலங்கையில் எந்த அரசியற் கட்சிக்கோ அல்லது எந்த சமூக இயக்கங்களுக்கோ இப்படிப்பட்ட ஒரு பெரிய வெப்தளம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. வீரவிதானவின் "தேசியக்கொள்கை வெளியீடு" யூலை 12 அன்று காலை "சுபநேரத்தில்" மல்வத்த அஸ்கிரி மகாநாயக்கர், கண்டி தலாதா மாளிகை நிலமே நிரஞ்சன் விஜேரத்ன ஆகியோர் முன்னிலையில் வெளியிடப்பட்டிருந்தது. இதுவும் இந்த வெப்தளத்தில் கிடைக்கிறது. மாதாந்தம் வெளிவரும் வீரவிதானவின் உத்தியோகபூர்வ பத்திரிகையான "ஹெலருவன" வீரவிதானவின் விரிந்து பரந்த செயற்பாடுகளை தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றன. செப்டம்பர் இதழில் வீரவிதானவின் தேசியக் கமிட்டி உறுப்பினர் பீ.ஏ.மகிபால "ஊருக்கு 15 பேர் எங்களுடன் இணைந்தால் எமது இலக்கை சுலபமாக எட்டி விடலாம்" என்கிறார். கங்கொடவில சோம ஹிமியை வீரவிதான வளைத்துப்போட்டுக் கொண்டு விட்டது. ஆரம்பத்தில் வீரவிதானவை திட்டிக் கொண்டிருந்த சோமஹிமி இப்பத்திரிகைக்கு அளித்திருக்கிற பேட்டியில் "சிங்கள இனம் மலட்டுத்தனத்துக்கு உள்ளாகி அருகி வருகிறது. சிங்களவர் 2-3 பிள்ளைகள் பெறுகின்ற போது தமிழ் முஸ்லிம்கள் 7-8 பிள்ளைகளைப் பெற்று பெருகி வருகிறார்கள்" என்றெல்லாம் அதில் பேட்டியளித்துள்ளார். அதே பத்திரிகையில் "203 பாடசாலைகள் மேல்மாகணத்தில் மூடப்பட இருக்கிறது. சிங்கள இனத்தவர் குறைந்து மாணவர் எண்ணிக்கை குறைந்துள்ளதாலுமே இந்நிலைமை..." என ஒரு செய்தியும் வெளியாகியுள்ளது. (பக்கம் 16)



பல்கலைக்கழகங்கள், பாடசாலை என்பனவற்றில் ஏலவே ஊடுருவி கைப்பற்றத் தொடங்கி விட்டனர். பெருமளவான பல்கலைக்கழகங்களில் ஜே.வி.பி.யின் மாணவர் அமைப்பு தான் பலமானதாக இருந்து வரும் நிலையில் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு தேர்தல்களில் வீரவிதானவுக்கு பெருத்த தலைவலியாக இருப்பது ஜே.வி.பி. அடிக்கடி இவை இரண்டும் மோதிக்கொள்கின்றன. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பெரும் சண்டை இவ்விரு தரப்பினருக்கிடையிலேயே இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இன்று தமிழ் முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்கும் பல்கலைக்கழகங்களில் அம்மாணவர்களுக்கு எதிரான கருத்துக்களை பரப்புவதும், அவர்களை புலிகள் என்றும் அவர்களை பல்கலைகழக விடுதிகளிலில் இருந்து வெளியேற்ற வேண்டுமென்றும் எத்தனித்து வருகின்றனர். இந்தப் போக்கின் அபாயம் குறித்து சமீப காலமாக மாணவர்கள் மத்தியில் பெரும் அச்சம் நிலவி வருவதைக் காணமுடிகிறது.

மேலும் முக்கியமாக பௌத்த உயர் பீடங்களுக்குள் ஊடுருவி அதனைக் கட்டுப்படுத்தி வருகிறது என்றால் அது மிகையில்லை. இலங்கையில் சிங்கள பௌத்தர்கள் எல்லோரையும் விகாரைகளுக்கூடாக வலைப்பின்னலாக மையப்படுத்தியிருப்பது இந்த பௌத்த மகா சங்கம். என்பது கவனிக்கத்தக்கது.

வீரவிதான கிராமிய மக்களையும் நகர்ப்புற வர்த்தகர்களையும் இலக்கு வைத்து தான் இயங்குகிறது. அதனால் தான் கிராமப்புற இளைஞர்களில் செல்வாக்கு செலுத்தி வரும் ஜே.வி.பி.யுடன் அது கடுமையாக மோதி வருகிறது. அதுபோல வீரவிதானவின் சாதியப் பின்னணியைப் பொறுத்தவரை அதன் தலைமையில் இருப்பவர்களில் பெருமளவில் சலாகம சாதியினராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

சிங்கள வீரவிதானவின் அமைப்பு வடிவமும், அதன் செயல்வேகத்துக்கும் முன்னால் தென்னிலங்கையில் எந்த அமைப்பும் கிடையாது. ஒவ்வொரு நாளும் ஏதாவது செய்து கொண்டிருக்கிறார்கள். போஸ்டர்களை அடிப்பது, கூட்டம் கூடுவது, நூல் வெளியிடுவது, அறிக்கை வெளியிடுவது, என்பனவற்றோடு ஒவ்வொரு நாளைய முக்கிய அரசியல் நிகழ்வுகளுக்கும் உடனடியாக தங்களின் நிலைப்பாட்டை வைத்து விடுகிறார்கள். (வீரவிதானவின் நான்காவது ஆண்டு நிறைவை கண்டியில் யூலை 11 அன்று நடத்திய போது பேசிய சம்பிக்க ரணவக்க "அதன் நான்கு வருட சாதனைகளில் ஒன்றாக தீர்வுப் பொதியை கைவிடச்செய்தமை"யையும் குறிப்பிடுகிறார்.) அரச கட்டமைப்பு அதற்கு சாதகமாக இருக்கிறது.

அண்மையில் சிங்கள சமூகத்தைச் சேர்ந்த மனித உரிமையாளர் ஒருவர் இப்படிக் கூறினார். "...நாங்கள் தமிழ் மக்களின் உரிமை, போரெதிர்ப்பு, சமாதானம், அரசியல் தீர்வு, என்று ஒரு புறம் கொண்டு சென்ற கருத்தாடலை திசைதிருப்பி சிங்கள பௌத்த மீட்பு, போரே வழி, என்று அதற்கான கருத்தாக்கங்களை நிறுவிவிட்டுள்ளனர் வீரவிதானவினர். இப்போது எங்களைப் போன்ற சமாதானவாதிகளுக்கும் என்ன நேர்ந்திருக்கிறது என்றால் முன்னைய அந்த தமிழ் மக்கள் உரிமை என்பதெல்லாம் பேசவிடாமல் செய்யப்பட்டு, வீரவிதானவுக்கு பதிலளிப்பதில் எமது கவனம் முழுக்க குவிந்து விட்டுள்ளது. இது ஆபத்தான போக்கு என்பதை இப்போது தான் உணர்கிறோம். வீரவிதான இந்த இடத்தில் தான் வெற்றியீட்டியுள்ளது..."

பாசிசமயமாக்கல் மிக வேகமாக நடந்து வரும் நிலையில், இன்றைய பாராளுமன்ற அரசியல் கட்டமைப்பில் இயங்கி வரும் பிரதான கட்சிகள் ஒன்றில் தாங்கள் பாசிசத்தை கைப்பற்ற வேண்டும் அல்லது பாசிச சக்திகள் அக்கட்சிகளை கைப்பற்றிவிடும் நிலை தோன்றி வருகிறது. இடதுசாரி சக்திகள் இதனைக் கிஞ்சித்தும் அடையாளம் காணாமல் வெற்று வர்க்க சூத்திரத்தோடு தங்கள் அரசியலைக் குறுக்கிக் கொண்டுள்ளது தான் பெரும் துயரம்.

**—கோமதி**

SSN 1391 - 2011

**வீரவிதர்ன்வின் உத்தியோகபூர்வ பத்திரிகை**

> **கிரெம்ஷி கூறுகிறார் "..பாசிஸ்டுகள் தங்களின் சக்தியையும். ஸ்தாபனத் திறமையையும் பறையடித்துக்காட்டி ஆளும் வர்க்கத்தின் ஒரு பகுதியை தங்களுக்கு ஆதரவளிக்குமாறு செய்து விடுவார்கள். அதிலும் மிதவாத ஆளும் வர்க்கத் தலைமை நம்பகத் தன்மையை இழந்து வருகிறதோ அல்லது ஸ்திரமற்றதான சூழல் உருவாகி வருகிறதோ, அந்த இடைவெளியை பாசிஸ்டுகள் கைப்பற்றிவிடுகிறார்கள்...இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகள் குழப்பியடிக்கப்பட்டு பலவீனப்படும் போது பாசிசம் தலை தூக்கிவிடுகிறது..."**

## புனைவுகளும் பாசிசமும்!

'**...இது** சிங்கள பௌத்த நாடு, ஏனையோர் வந்தேறுகுடிகள், நாட்டைத் துண்டாடி அபகரிக்கப் பார்க்கின்றார்கள், தமிழ்நாட்டோடு இணைத்து எதிர்காலத்தில் பரந்த தமிழ்நாடாக முழு இலங்கையையும் ஆக்கப்போகிறார்கள், தமிழர்களுக்கு நாடு உண்டு, சிங்களவர்களுக்கு உலகில் எந்த நாடும் இல்லை. மிச்சமுள்ள இதனை சூறையாட விடக்கூடாது, தமிழீழம் அமைந்தால் சிங்களவரின் நிலத்தில் மூன்றில் ஒரு பகுதியும், கடற்பகுதியில் 6இல் 4 பகுதியும் பறிபோய்விடும், தமிழ், முஸ்லிம்கள் எல்லோரும் சேர்ந்து சகல தொழிற்துறையையும் கைப்பற்றியிருக்கிறார்கள். சிங்களவர்களை சுரண்ட இனியும் அனுமதியோம், இந்திய வம்சாவழி எனும் "கள்ளத்தோணிகள்" நாட்டின் செல்வத்தை சுரண்டுபவர்கள், அதில் பலர் சிங்களவரை சுரண்டி இந்தியாவுக்கு சொத்துக்களை கொண்டுபோய் குவிப்பவர்கள். இவர்கள் எல்லோரும் கணக்கு வழக்கில்லாமல் பிள்ளைபெற்று இனத்தை பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள், சிங்களவர்கள் மீது திட்டமிட்டு மலட்டுத்தனத்தை உருவாக்குகிறார்கள். சகல அரசாங்க தொழிலையும் கைப்பற்றி இருக்கிறார்கள். இவர்களுக்காக சிங்களவரின் சொத்துக்கள் முழுதும் அரசால் செலவளிக்கப்படுகிறது...."

இந்த புனைவுகள் அடிப்படையானவை. இதனை ஆதாரமாகக் கொண்டு பல்வேறு போலிப் பிரச்சாரங்கள், புனைவுகள், கற்பிதங்கள், வரலாற்றுத் திரிபுகள் என்பவை தொடர்ச்சியாக செய்யப்படுகின்றன. இவை திருப்பித் திருப்பிச் சொல்லப்படுகின்றன. இவற்றால் சிங்கள மக்களை பீதியுறச் செய்து தேசியவெறி ஊட்டப்படுகிறது. இவை இன்று உண்மை என நம்பவைக்கப்பட்டுள்ளன. கிரெம்ஷியின் அர்த்தத்தில் சொன்னால் "மக்களின் நியாயமான குறைகளையும், பயங்களையும் தங்களுக்கு சாதகமான வகையில் வார்த்தை ஜாலங்களால் திருப்பி விடுவது பாசிசத்திற்கே உரித்தான அம்சமாகும்." இதனடிப்படையில் பாசிசத்தின் அடிப்படையான அம்சமான இனத்தூய்மை, அதனடிப்படையில் அமைந்த ஏனைய இனங்களை இனச்சுத்திகரிப்பு செய்தல், இனக்களையெடுப்புக்கு துணிதல், இனப்படுகொலைகளை நியாயப்படுத்தல், இனக்கலப்பு செய்து எதிரி இனத்தின் மீது தூய்மையை கெடுத்தலும், தம்மின பெண்கள் மீது இனப்பெருக்கத்துக்கு நிர்ப்பந்தித்தலும், மற்றைய இனங்கள் மீது இனப்பெருக்கத்துக்கான வாய்ப்புகளை அகற்றுதல் என்பன போன்றவற்றை இங்கு படிப்படியாகக் காண்கிறோம்.

"மண்ணின் மைந்தர்கள்" என்கிற கருத்தாக்கம், அன்றைய ஜெர்மன், இத்தாலி, ஜப்பான், இன்றைய இஸ்ரேல் உள்ளிட்ட பல உதாரணங்களைக் காணலாம். இலங்கையில் கூட வெறும் இனவாத சக்திகள் மாத்திரமல்ல அரசாங்கமும் கூட படைக்கு ஆட்திரட்டுகின்ற போது இதே சுலோகத்தைத் தூக்கிப்பிடித்தது நினைவிருக்கலாம். பிற்போக்குத் தலைமைகளைக் கொண்ட தேசியவாதத்தின் அதீத தூய்மைவாதம் பாசிசத்தில் போய் தான் முடிந்திருக்கிறது என்பதற்கு உலகில் பல வரலாறுகள் உண்டு. "..தங்களை தேசியவாதிகளாகவும், ஜனநாயகவாதிகளாகவும், பெரும்பான்மையோரை பிரதிநித்துவப்படுத்துவதாகவும், சிறுபான்மைகள் நாட்டிற்கு வெளியிலிருந்து வந்தவர்களென்றும், தேசத்தின் கலாசாரத்தை சிதைப்பவர்கள், துரோகிகள், அவர்கள் "மண்ணின் மைந்தாகள்" தான் மண்ணைக் காக்க வேண்டுமென்றும் எல்லாவித பழமைவாதக் கருத்துக்களையும் பரப்பி பெண்களுக்கு பாரம்பரியம் வரையறுத்த இடத்தினை திணித்து பாசிசத்தை நிலைநிறுத்துவார்கள்..." என்கிறார் கிரெம்ஷி

மேலும் கிரெம்ஷி கூறுகிறார் "..பாசிஸ்டுகள் தங்களின் சக்தியையும், ஸ்தாபனத் திறமையையும் பறையடித்துக்காட்டி ஆளும் வர்க்கத்தின் ஒரு பகுதியை தங்களுக்கு ஆதரவளிக்குமாறு செய்து விடுவார்கள். அதிலும் மிதவாத ஆளும் வர்க்கத் தலைமை நம்பகத் தன்மையை இழந்து வருகிறதோ அல்லது ஸ்திரமற்றதான சூழல் உருவாகி வருகிறதோ, அந்த இடைவெளியை பாசிஸ்டுகள் கைப்பறற்றிவிடுகிறார்கள்....இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகள் குழப்பியடிக்கப்பட்டு பலவீனப்படும் போது பாசிசம் தலைதூக்கிவிடுகிறது..."

"...வர்க்க எல்லைகளையும் தாண்டி கணிசமான பகுதி மக்கள் பாசிசத்தை ஒப்புக்கொண்டது ஏன்.." என இத்தாலிய அனுபவத்திலிருந்து கிரெம்ஷி எழுப்பிய கேள்வி இங்கும் பொருந்தும். "...எப்போதெல்லாம் வளமான சிந்தனைகளும் ஜனநாயகத் தன்மைகளும் முடங்குகிறதோ- எப்போதெல்லாம் முதலாளித்துவ தேசியவாதம் தோல்வியைத் தழுவுகின்றதோ- அப்போது பழமைவாதம் பாசிசத்துக்கான தளத்தை உருவாக்கிக் கொள்கிறது.." என்பதுடன் "...பாசிசம் பெருமுதலாளிகளால்லோ நிலப்பிரபுக்களாலோ உருவாக்கப்படுவதல்ல. குட்டி பூர்சுவாக்களாலும் வியாபாரிகளாலும் உருவாக்கப்படுவது.." என்கிறார்.

முதலில் அவர்கள் யூதர்களைத் தேடி வந்த போது
நான் எதுவும் பேசவில்லை
ஏனென்றால் நான் ஒரு யூதன் அல்ல
பிறகு அவர்கள் கம்யூனிஸ்டுகளைத் தேடி வந்தார்கள்
நான் எதுவும் பேசவில்லை
ஏனென்றால் நான் ஒரு கம்யூனிஸ்ட் அல்ல
அதன்பிறகு அவர்கள் தொழிற்சங்கவாதிகளைத் தேடிவந்தார்கள்
நான் எதுவும் பேசவில்லை
ஏனென்றால் நான் ஒரு தொழிற்சங்கவாதி அல்ல
இறுதியில் அவர்கள் என்னைத் தேடி வந்தார்கள்
அப்போது எனக்காகப் பேசுவதற்கு
யாரும் எஞ்சியிருக்கவில்லை.

பாஸ்ரர் நியுமோலர்
(நாசி சிறைகளில் கொல்லப்பட்ட)




# பிரபாகரன் அவர்களுக்கு!



## வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு அகதி முஸ்லிமின் கடிதம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கு,

எப்போதோ எழுத நினைத்த கடிதமிது. இவ்வளவு காலம் தாழ்த்தி, ஒன்பது வருடங்களுக்குப் பிறகாயினும், எழுதக் கிடைத்தது ஒரு வகையில் ஆறுதலான செய்தி தான். ஆயினும், இது உங்களது கரங்களுக்குக் கிட்டுமா என்ற சந்தேகம் இன்னும் என்னுள் இருக்கின்றது. அதை விடவும் கிட்ட வேண்டுமென்ற நம்பிக்கை கலந்த எதிர்பார்ப்புத் தான் இதை எழுதத் தூண்டியது.

ஒன்பது நீண்ட வருடங்களாக, புத்தளத்தின் உப்புக் கரிக்கும் மணல்களில் புதையுண்டு கிடக்கும் ஒவ்வொரு தாயினதும் கண்ணீர், அடக்கவும் முடியாது வெளிப்படுத்தவும் முடியாது வெப்புசாரத்தில் வெதும்பும் ஒவ்வொரு சகோதரியினதும் உணர்வு, வாழ்க்கை என்றால் என்னவென்றே தெரியாது வெளியேற்றம் ஒரு கீறலாய்ப் பதிந்து போன சின்னஞ்சிறுசுகளின் மங்கிய கனவுகள் - இவை தான் என்னை எழுதத் தூண்டியது. மற்றப்படி இதை எழுதுவது நானல்ல.

ஒட்டுமொத்தமான இந்த உணர்வுகளை வார்த்தைகளுக்குள் வசப்படுத்த முடியாது நான் தோற்றுப் போவேன் என்பது எனக்குத் தெரியும், ஆனாலும் இந்த மக்கள் மீண்டும் அவர்களது தாயகங்களுக்குச் சென்று வாழ வேண்டும் என்ற அந்த நம்பிக்கை ஒருபோதும் தோற்றுப் போய்விடக் கூடாது.

1995 ஒக்டோபர் 30 அன்று கொழும்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட ஐந்தாண்டு நிறைவு நிகழ்வில் கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன்:

ஆறாம் வருடமும் இவர்கள்
அழுவதே விதியென்றால்
அழியட்டும் இந்நாடு!
அழியட்டும் என் இனம்!!
அழியட்டும் என் கவிதை!!!
அழியட்டும் எனது தமிழ்!!!!

-என்று தனது கவிதையின் கடைசி அடியை முடித்த போது என் கண்கள் கலங்கிப் போயின. இன்று ஒன்பதாவது வருடமும் இவர்கள் அழுவது தான் விதியென்றாயிற்று. பத்தாவது வருடமென்ற ஒன்று இருக்கக் கூடாது என்ற நப்பாசையைத் தான் இந்தக் கடிதம் உங்களிடம் வேண்டுகிறது.

பிரபாகரன் அவர்களே!

பொதுவாக எளிதில் நேர்முகங்களுக்கு ஒத்துக் கொள்ளாத நீங்கள் 20.02.1993ல் கொழும்பு பி.பி.சி நிருபர் சியாகா பூசு விற்கும், 09.09.1994ல் பி.பி.சி தமிழோசைப் பொறுப்பாளர் ஆனந்தி சூரியப்பிரகாசத்திற்கும் வழங்கிய இரு செவ்விகளை உங்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**'அம்பாறை மாவட்டத்தில் 90ம் ஆண்டு இனக்கலவரம் வெடித்து பெருந்தொகைத் தமிழர்கள் கொல்லப்பட்ட போது யாழ்ப்பாணத்திலும் இனக்கலவரம் வெடிக்கும் அபாயம் இருந்தது. முஸ்லிம்களின் சொந்தப் பாதுகாப்பிற்காக தற்காலிகமாக முஸ்லிம்களை வெளியேறுமாறு கேட்டுக் கொண்டேன். ஆனால் யுத்தம் முடிவுற்று சமாதானம் மீண்டால் அவர்களை யாழ்வர அனுமதிப்போம்.'**

*-சியாகா பூசுவிற்கு வழங்கிய செவ்வியில்*

**'யாழ்ப்பாணம் இந்த மக்களின் சொந்த மண். சந்தர்ப்ப சூழ்நிலையால் துரதிர்ஷ்டவசமாக இந்த மக்கள் அகதிகளாக வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்போதும் இராணுவம் குடாநாட்டின் பல இடங்களைக் கைப்பற்றி வைத்திருக்கிறது. அங்கிருந்த தமிழ் மக்கள் இப்போது முஸ்லிம்களின் வீடுகளில் வாழ்கின்றனர். எனவே இராணுவம் வாபஸ் பெற்றால் முஸ்லிம்களை நாம் திரும்பி யாழ் வர அனுமதிப்போம். அவர்களின் வெளியேற்றத்தையிட்டு நாம் மனம் வருந்துகின்றோம்.'**

*-ஆனந்திக்கு வழங்கிய செவ்வியில்.*

இவற்றினூடாக கீழ்வரும் விடயங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது.

01. முஸ்லிம்களை வெளியேற்றியது நீங்கள் தான் என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள்.

02 வெளியேற்றம் தற்காலிகமானது என்றும் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள்.

03. அவர்கள் மீண்டும் யாழ். வர அனுமதிப்பதாக உறுதியளித்திருக்கிறீர்கள்.

இவற்றின் அடிப்படையில் வடக்கு முஸ்லிம்களை அவர்களது தாயகத்திற்கு மீண்டும் வருமாறு அழைக்கும் பொறுப்பு உங்களது தீர்மானத்திலேயே தங்கியுள்ளது. ஆதலால் தான் வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்களை உடனடியாக தாயகம் வருமாறு அழைப்பு விடுக்குமாறு உங்களிடம் வேண்டுகிறோம்.

இது நடப்பதாயின் உங்களது கருத்தின்படி இரண்டு நிபந்தனைகள் நிறைவேற வேண்டும்.

01. யுத்தம் முடிவுற்று சமாதானம் ஏற்பட வேண்டும்

02. இராணுவம் குடாநாட்டிலிருந்து வாபஸ் பெறப்பட வேண்டும்.

இந்த இரண்டும் நடைபெறுமா? அல்லது இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்? இந்த ஐயங்கள் மனதுள் எதிர்காலம் பற்றிய பாரிய அச்சத்தையே உண்டு பண்ணுகின்றன.

உங்களது இயக்கத்தைச் சேர்ந்த கரிகாலனும், கருணாவும் தான் இவர்களை வெளியேற்றியது என்பதை நாம் அறிவோம். அத்தோடு, வெளியேற்றிய கையோடு யோகரத்தினம் யோகி யாழ். பல்கலைக் கழகத்தில் என்ன பேசினார் என்பதையும் நாம் அறிவோம். (பார்க்க பெட்டிச் செய்தி). ஏறாவூரிலும் காத்தான்குடிப் பள்ளியிலும் நிகழ்ந்த எவற்றையும் நாம் மறந்து விடவில்லை. ஆனால் ஒரு புதிய மாற்றமும், புரிந்துணர்வும் ஏற்பட வேண்டுமென்ற ஒரேயொரு நல்ல நோக்கத்திற்கும் எதிர்பார்ப்பிற்குமாய், இவை எல்லாவற்றையும் மன்னிப்பதற்கு நாம் தயாராகவே இருக்கிறோம். பழைய காயங்களை பூதக்கண்ணாடி போட்டுப் பெருப்பிக்க நாம் விரும்பவில்லை.

எந்தப் போராட்டப் பாதையும் அடிபிசகாது நேர்கோட்டுப் பாதையில் செல்வதில்லை. உங்கள் தரப்பில் தவறுகள் இழைக்கப்பட்டிருப்பது போல் எங்கள் தரப்பிலும் தவறுகள் இழைக்கப்பட்டிருக்கின்றன. நாம் பெருமனதோடு அவற்றை ஏற்றுக் கொண்டு அவற்றுக்காக மன்னிப்பும் கோருகின்றோம். எங்களுடையதை விடவும் நீங்கள் செய்தவை அதிகம் தான் என்றாலும், இது அளவை நிறுவை பற்றிப் பேசுகிற சந்தர்ப்பமில்லை என்பதையும் நாம் அறிவோம்.

பழைய வரலாறுகள் இங்கே மீளக்கூடாது. மீளவும்மாட்டா என்ற நம்பிக்கையோடு தமிழ் முஸ்லிம் நல்லுறவைக் கட்டியெழுப்புவோம். கடந்தகால நிகழ்வுகள் நமக்குள் வேண்டத்தகாத காழ்ப்புணர்ச்சியையும் வெறுப்புணர்வையும் விதைத்துவிட்டது. அவற்றைக் கவனமாகக் களைவதற்கு நாம் முன்முயற்சி எடுக்க வேண்டியுள்ளது.

எல்லா சமூகத்திலும் இனவாதிகளும் துரோகிகளும் இருக்கவே செய்வர். எமது சமூகத்திலும் அவர்கள் இருக்கின்றனர். ஆனால் எல்லா சமூகத்திலும் நல்லவர்களும், ஒன்றுமே புரியாத அப்பாவிகளும் இருக்கவே செய்கின்றனர். எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான இவர்கள் தான், செய்யாத குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படுகிறார்கள் என்பது மிகுந்த வேதனையைத் தருகின்றது. பெரும்பாலான வடபுல முஸ்லிம்களது கதையும் இதுதான்.

தாயகம் மீள்வது எப்போது என்ற ஆதங்கத்தோடு புத்தளக் கரைகளில் எமது மக்கள் ஒன்பது வருடங்களாக அலைந்து திரிந்து, கடைசியில் பெற்றது ஏமாற்றம் மட்டுமே. இப்போது அவர்கள் சோர்ந்து போய் இருக்கின்றார்கள். ஆயினும் இன்னமும் அவர்கள் முழுமையாக நம்பிக்கையிழக்கவில்லை. என்றோ ஒரு நாள் தமக்கும் விடிவு வரும் என்ற எதிர்பார்ப்போடு, ஓலைக் குடிசைகளுக்குள் குப்பி விளக்குகளை ஏந்தியவர்களாக அவர்கள் காத்திருக்கிறார்கள்.

பிரபாகரன் அவர்களே!

இவர்களுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் விடுவதற்கு ஆயிரக் கணக்கானோர் இருக்கின்றனர். ஆனால் பிரச்சினை அதுவல்ல. அவர்கள் எல்லோருமே இம் மக்களது, நிலையை வெறுமனே ஒரு அகதிகள் பிரச்சினையாக மட்டுமே பார்க்கின்றனர். அதுவே மிகப்பெரிய தோல்வி. இது வெறுமனே ஒரு மனிதாபிமானப் பிரச்சினையல்ல. தமது தாயகம் செல்ல முடியாது எல்லா அடிப்படை உரிமைகளையும் இழந்து நிர்க்கதிக்குள்ளான ஒரு மக்கள் திரளின் இருப்பு பற்றியதும், அரசியல் எதிர்காலம் பற்றியதுமான ஒரு பிரச்சினையே இதுவாகும்.

இனியும் நாட்களைக் கடத்தாது வடக்கு முஸ்லிம்களை அவர்களது தாயகங்களுக்கு மீண்டும் வந்து குடியமருமாறு நீங்கள் பகிரங்கமாக பிரகடனப்படுத்த வேண்டும். இதை ஏன் நாங்கள் உங்களிடமே கோருகிறோம் என்பதற்கான நியாயங்களை நீங்கள் அறிவீர்கள்.

இதற்கு மேலும் உங்களிடம் சொல்வதற்கு எங்களிடம் எதுவுமில்லை. நாங்கள் தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்தை ஒருபோதும் காட்டிக் கொடுக்கவுமில்லை. இனியும் அவ்வாறு செய்யவேண்டிய எந்த அவசியமும் எமக்கு இல்லை. மற்றொரு சிறுபான்மையினரான எங்களது உணர்வுகளையும் அடிப்படை உரிமைகளையும் ஏற்று மதிப்பளியுங்கள் என்றே உங்களிடம் வேண்டுகின்றோம்.

மீண்டும் வட புலத்தின் நெடு நிலங்களிலுள்ள எங்களது பள்ளிகளில் பாங்கோசை கேட்குமென்ற எங்களது நம்பிக்கையை நிறைவேற்றுவீர்களா?

***உங்களது பதில் தான் என்ன?***

**- ஸைனப் -**

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சியிலிருந்து 75,000 முஸ்லிம்களை வெளியேற்றியதன் பின்னர், யாழ் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய ஓர் உரையில் விடுதலைப் புலிகளின் அரசியல் பேச்சாளர் யோகி தங்களது செயலை நியாயப்படுத்தினார். தற்போது வடமாகாணத்தின் இனச்சுத்திகரிப்பு (Ethnic Cleasing) என வர்ணிக்கப்படும், 1990 ஒக்டோபரில் துப்பாக்கி முனையில் மேற்கொள்ளப்பட்ட வெளியேற்றமானது தனியான முறையில் செய்யப்பட்ட ஒரு விடயமல்ல. அதே வருடம் யூனில கிழக்கு மாகாணத்தில் மீளவும் ஆரம்பமான யுத்தத்துடன் முஸ்லிம்கள் மீது படுகொலைகளும் நடாத்தப்பட்டன. இவை தொடர்பாக விடுதலைப்புலிகளின் அன்றைய அரசியல் பொறுப்பாளர் யோகி வழங்கிய உரையின் சில பகுதிகள் வருமாறு:

"நாங்கள் முஸ்லிம்களை வெளியேற்றியது ஏன்? கிழக்கு மாகாணத்தில் 4000 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 2000 பேர் முஸ்லிம் ஆயுதக் கும்பல்களாலும், ஊர்காவற் படையினராலுமே கொல்லப்பட்டனர். முஸ்லிம்கள் தாம் சிங்களவரும் அல்ல, தமிழரும் அல்ல. மாறாக, அரேபியர்கள் என உரிமை பாராட்டுகின்றனர். தங்களது சுயநல நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவே அவர்கள் இதைப் பயன்படுத்துகின்றனர். ஆனால், அவர்கள் தமிழர்களே. தமிழ் பாடசாலைகளில் தமிழிலேயே அவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்களது கலாசாரம் அராபியக் கலாசாரம் அல்ல. அப்படியானால் அவர்களுடைய பெண்கள் பர்தா அணிந்திருப்பார்கள். அப்படி இங்கு நடக்கவில்லை..."

"முஸ்லிம்கள் கிழக்கில் 35சதவீதத்தையும், வடக்கில் 5 வீதத்தையும் கொண்டுள்ளனர். இலங்கையில் அவர்கள் ஏழு சதவீதமானோரே. இணைந்த வட கிழக்கில் அவர்கள் 17 சதவீதத்தைக் கொண்டுள்ளனர். கிழக்கிலுள்ள முஸ்லிம்கள் தாம் 35 சதவீதத்திற்கான சலுகைகளை இழப்பதாக வாதிடுகின்றனர். அதேவேளை வடக்கிலுள்ள 5 சதவீதமான முஸ்லிம்கள் 17 சதவீதத்திற்குரிய சலுகைகளைப் பெறுவதை ஏன் அவர்களால் உணர முடியவில்லை. எனவே முழு இலங்கையிலுமே 2 சதவீதமான சலுகைகளையே பெற முடியுமான அவர்கள் இணைந்த வடகிழக்கிலோ 17 வீதத்தைப் பெறுபவர்கள். ஆனால், கிழக்கு முஸ்லிம்கள் இதை உணரவில்லை"

"வடக்கு முஸ்லிம்களைப் பற்றி கிழக்கு முஸ்லிம்களுக்கே அக்கறை இல்லையென்றால், நாம் ஏன் அவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்?"

"அம்பாறை மாவட்டத்தில் பத்து தமிழ்க் கிராமங்கள் தற்போது இல்லை... எழுபதாயிரம் தமிழர்கள் அகற்றப்பட்டுள்ளனர். இந்த அக்கிரமங்கள் பற்றிய செய்திகள் வெளிவரவில்லை. ஏனெனில், அங்கு இது பற்றி எழுதுவதற்கு ஒருவர் கூட விட்டு வைக்கப்படவில்லை. எழுபதாயிரம் தமிழர்கள் பற்றிக் கவலைப்படாதவர்கள் ஏன் இப்போது நாற்பதாயிரம் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது பற்றிக் கவலைப்படுகின்றனர்? தமிழர்களுக்கு நடந்தது போன்றல்லாமல் நாம் அவர்களைக் கொல்லவில்லை. அவர்களது கற்புகளைச் சூறையாடவில்லை. அல்லது அவர்களது உடைமைகளை அபகரிக்கவில்லை. நாம் செய்ததெல்லாம் அவர்களை வெளியேற்றியது மட்டுமே.

"சிலர் வடக்கில் ஒரு முஸ்லிம் ஜிஹாத் குழு உருவாகுமோ என அஞ்சுகின்றனர். (ஜனாதிபதி ரணசிங்க) பிரேமதாச மூன்றாவது ஆயுதபலத்தை விரும்ப மாட்டார்.)"

"நாம் முஸ்லிம்களுக்கு அனேகமான வாக்குறுதிகளை வழங்கியுள்ளோம். முஸ்லிம்கள் அதற்குச் செவிசாய்க்கவில்லை. அதற்கு எதிராக சிங்கள இராணுவத்தோடும், இலங்கை அரசுடனும் இணைந்து எம்மை அழிக்க ஆயத்தமானார்கள்."

"தமிழீழம் சமய அல்லது சாதி வேறுபாடுகளற்ற ஒரு மத சார்பற்ற அரசு. இங்கு பிரிவினைக்கு இடமில்லை."

தாங்கள் தமிழர்களே என்பதை முஸ்லிம்கள் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். அவர்கள் தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்த அரேபியர்களின் வழித்தோன்றல்களே என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

*மனித உரிமைக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின்(UTHR) அறிக்கைகளுள் ஒன்றான கருத்தியல்களின் மோதல் The Clash of Ideologies இலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.*

நன்றி - நூலகத்திட்டம்






# தமிழீழத்தில் முஸ்லிம்களுக்கு இடமில்லையா?

**வடக்கிலிருந்து முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டு ஒன்பது வருடங்களாகின்றன. இந்த ஒன்பது வருடங்களையும் திரும்பிப் பார்க்கும் போது நீங்கள் என்ன உணர்கின்றீர்கள் ?**

இந்த ஒன்பது வருட காலங்களில் எமது மக்களுடைய பிரதானமான கேள்விக்கு இன்னும் எங்களுக்கு விடை கிடைக்கவில்லை. அதாவது ஏன் விடுதலைப் புலிகள் எங்களை வெளியேற்றினார்கள் என்ற கேள்விக்கு ஒன்பது வருடங்களாகியும் இன்னும் எமது மக்களுக்கு சரியான பதில் ஒன்று கிடைக்கவில்லை. அதே நேரத்தில், இந்த ஒன்பது வருட அகதி வாழ்க்கையிலே பெரிய அளவிலான மாற்றங்கள் எதுவும் எங்கள் மக்கள் மத்தியிலே அவர்களுடைய முன்னேற்றத்தைப் பொறுத்த வரையிலே ஏற்பட்டதாக இல்லை. சில முகாம்களினுடைய அமைப்புக்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. சில முகாம்களிற்குச் சில வசதிகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. ஆனாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் பொழுது அன்று இருந்த நிலைமையில் பெரியளவிலே ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த முடியவில்லை. எமது மக்கள் அவர்களினுடைய முகாம் வாழ்க்கையினுடைய கஷ்டங்கள், துன்பங்கள், துயரங்களில் இருந்து விடுபடுவதற்கான சூழ்நிலைகள் உருவானதாக இல்லை. எமது மக்களும் தங்களுடைய எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என்ற ஒரு தீர்க்கமான முடிவுக்கு வர முடியாத நிலையில் தான் இருந்து வருகிறார்கள். ஏனென்றால் யுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அதே நேரத்தில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய பகுதிகளிலே அவர்களை ஒரு சரியான வழியில் ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கு இடம் மாத்திரம் இருந்தால் போதுமா ? அவர்களுக்கான தொழில், அவர்களுடைய கல்வி முன்னேற்றத்திற்குப் பொறுப்பான வசதிகள், எங்கள் மக்களுடைய கலை, கலாசார, பண்பாடுகளைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய சூழ்நிலைகள், இவை எல்லாம் அவர்களுக்கு, அவர்கள் வாழக் கூடிய சூழ்நிலைகளிலே ஒரு மன நிறைவைத் தரக் கூடியதாக இல்லை. எனவே ஒன்பது வருடங்கள் ஆகியும் எமது மக்களில் பெரும்பாலானோர் திரும்பவும் தங்களது தாயக மண்ணுக்கு மீளச் செல்லும் நாளைத்தான் ஆவலோடு எதிர்பார்த்து இருக்கின்றார்கள். அதே நேரத்திலே ஒன்பது வருடங்கள், அதாவது தொண்ணூறிலே பிறந்த, வெளியேற்றப்படும் பொழுது அல்லது வெளியேறிய காலகட்டத்திற் பிறந்த ஒரு பாலகனின் இன்றைய வயது ஒன்பது. இவர்களைப் பொறுத்த அளவிலே தாயக மண்ணின் மண் வாசனையை அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் தங்களுடைய பெற்றோர்கள் ஏதோ ஒரு இன்னலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற முடிவுக்கு வரக் கூடியதாக புறச்சூழல் உள்ளது.

அந்தப் பாலகர்கள் பட்டுக் கொண்டிருக்கக் கூடிய துன்பங்களும், துயரங்களும் அவர்களைச் சிந்திக்க வைக்கக் கூடிய ஒரு சூழ்நிலைமையை நாங்கள் காண்கின்றோம். இதுதான் இன்றைய ஒன்பது வருட கால கட்டத்திலே நாங்கள் பெற்றிருக்கக் கூடிய நிலைமை.

**வடக்கிலிருந்து முஸ்லீம் மக்களை வெளியேற்றிய புலிகள் அவ்வாறு வெளியேற்றியதற்கான காரணத்தை எப்போதாவது வெளிப்படையாகவோ அல்லது அது தொடர்பாக அக்கறை கொண்டு செயற்படுகின்ற வடக்கு முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பு போன்ற அமைப்புகளுக்கோ தெரிவித்திருக்கின்றார்களா ?**

புலிகள் வடக்கிலிருந்து முஸ்லீம் மக்களை வெளியேற்றிய கால கட்டத்திலே முஸ்லிம் மக்கள் மீது அனுதாபம் கொண்ட சில தமிழ் மக்கள் மத்தியிலே இதைப் பற்றிய கேள்விகள் எழுந்திருக்கின்றன. அந்தச் சந்தர்ப்பங்களிலே அந்த மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக வேண்டி அவர்கள் சில காரணங்களைக் கூறி இருக்கின்றார்கள். அது, அன்றைய கால கட்டத்தில் "களத்தில்" என்ற புலிகளுடைய உத்தியோகபூர்வமான பத்திரிகையில் கூட வந்திருக்கின்றது. அரசியல் பிரிவுப் பொறுப்பாளராக அன்றைய காலகட்டத்தில் இருந்த யோகி என்பவர், கிராமங்கள் மத்தியிலே நடைபெற்ற புலிகளுடைய கூட்டங்களிலே இத்தகைய கேள்விகள் எழுந்த பொழுது அவற்றிற்குப் பதிலளித்துப் பேசிய ஒலி நாடாக்களில் எல்லாம் அவர்கள் கூறிய காரணங்களைக் கேட்கக் கூடியதாக இருந்தது. அவற்றில் அவர்கள் கூறிய காரணங்களை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாமலிருக்கிறது. அவை நகைப்புக்கிடமான காரணங்களாக இருந்தன. அதிலே அவர்கள் குறிப்பிட்ட காரணங்களில் ஒன்று கிழக்கு மாகாணத்திலே முஸ்லிம்கள், தமிழர்களை அடிக்கின்றார்கள், கொல்கின்றார்கள். கிழக்கு மாகாணத்தில் நான்காயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அதிலே இரண்டாயிரம் தமிழர்கள் முஸ்லிம்களால் கொல்லப்பட்டார்கள். அங்கே தமிழர்கள் பாதுகாப்பாக வாழ முடியாமல் வடக்கு நோக்கி வந்து கொண்டிருக்கின்றார்கள். எஞ்சியோர் இப்பொழுது காடுகளிலே வசிக்கின்றார்கள். அவர்கள் இங்கே வந்தால் அவர்களினுடைய ஆத்திரத்தை முஸ்லீம்கள் மீது காட்டக் கூடிய சூழ்நிலை அந்த இடத்தில் ஏற்படும். அதனால் இந்த முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்காக நாங்கள் அவர்களைத் தமிழீழத்தை விட்டு வெளியேற்றினோம் என்று சொன்னார்கள். கிழக்கு மாகாணத்திலே பல்வேறு இயக்கங்களும், பல இராணுவ முகாம்களும் இருக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது. வடக்கைப் பொறுத்த வரையிலே முழுக்க, முழுக்கப் புலிகளுடைய கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்தது. முஸ்லீம்கள் வாழ்ந்த பகுதிகள் அனைத்தும் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தன. எனவே புலிகள் சொல்லக் கூடிய இந்தக் காரணத்தைப் புலிகளால் கூட ஜீரணிக்க முடிந்திருக்குமென்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால் முஸ்லீம்களைப் பாதுகாக்கக் கூடிய வல்லமையும், வலிமையும், ஆளுமையும் அற்ற ஒரு தலைமைத்துவமா புலிகளிடம் இருந்தது. வெளியிலிருந்து வரக் கூடிய ஆபத்திலிருந்து இந்த முஸ்லீம் மக்களைப் பாதுகாக்க முடியாத ஒரு பலவீனமான ஒரு கட்டமைப்பா புலிகளிடம் இருந்தது? இவ்வாறானால் அவர்கள் எப்படி இவ்வளவு தமிழ் மக்களையும் பாதுகாக்கப் போகிறார்கள்? இந்தக் கேள்விகள் எழுவது நியாயமல்லவா? அடுத்து அவர்கள் சொன்ன இன்னொரு காரணம்



**வடக்கு முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பின் (N.M.R.O.) செயலாளர் மௌலவி பீ.ஏ.எஸ்.சுப்யான் அவர்களுடனான நேர்காணல்**

முஸ்லீம் வியாபாரி ஒருவர் சாவகச்சேரியிலே புலிகளுடைய காவல் துறையிலே சேர்ந்து இராணுவத்திற்காக உளவு பார்த்தார் என்பது. அவருடைய ஸ்தாபனத்திலிருந்து தாங்கள் வோக்கி ரோக்கி (Walkie - Talkie) மற்றும் அதற்கான ஆதாரங்களைப் பெற்றிருப்பதாகவும் சொன்னார்கள். 'நிறைய முஸ்லீம்கள் இராணுவத்தினுடைய ஒற்றர்களாகச் செயற்பட்டு வருகின்றார்கள்.

இது எங்களுடைய தமிழீழப் போராட்டத்திற்குப் பாதகத்தை ஏற்படுத்தும். எனவே நாங்கள் முஸ்லீம்களை வெளியேற்றுகின்றோம்.' இதுவும் மக்களைத் திசை திருப்பக் கூடிய ஒரு பிழையான தகவலாகத்தான் இருந்தது. ஏனென்றால், அவர்கள் எந்த மக்கள் மத்தியிலே, எந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர் இந்த வேலையைச் செய்தார் என்ற கதையைப் பரப்பினார்களோ, அந்தக் குறிப்பிட்ட நபர் தான், நான் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் என்னோடு இருந்தார். ஆனால் அவரிடத்திலே எந்த ஒரு சந்தர்ப்பத்திலுமே புலிகள் இதைப் பற்றி விசாரணை செய்ததாக இல்லை. அத்தோடு இந்தக் காலகட்டம் வரை நாங்கள் அறிந்த வரையில், ஒற்றர்கள் என்ற அடிப்படையிலே புலிகள் யாரையும் பிடித்ததாகவோ அல்லது அவர்களிடத்திலிருந்து வோக்கி - ரோக்கியோ அல்லது வேறு வகையான ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவோ ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. புலிகளும் அப்படி எந்த இடத்திலும், எதையும் பகிரங்கமாக வெளியிடவும் இல்லை. எனவே இவை எல்லாம் புலிகள், மக்களுடைய நியாயமான கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல், மக்களை அவர்களோடு ஒற்றுமையாகவும், ஐக்கியமாகவும், அன்பாகவும் வாழ்ந்த ஒரு சமுதாயத்தின் மீது ஒரு தப்பான, பிழையான ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தக் கூடிய வகையிலே புலிகள் நடந்து கொண்டது மிகப் தவறு . அதாவது, முஸ்லீம்களை வெளியேற்றியது பெரிய ஒரு தவறு. அதைவிட, அவர்கள் அந்நியோன்னியமாக வாழ்ந்த சமுதாயத்தின் மத்தியிலே பிழையான ஒரு அபிப்பிராயத்தை உருவாக்கியது மாபெரும் தவறான ஒரு செயலாக இருந்து கொண்டிருக்கின்றது.

**1990ஆம் ஆண்டு முஸ்லீம் மக்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்படுவதற்கு முன்னதாக கிழக்கிலும் சரி, வடக்கிலும் சரி முஸ்லீம்களுக்கு எதிரான உணர்வலைகள், தமிழ் சமூகத்தில் இருந்து வந்ததாக நீங்கள் கருதுகின்றீர்களா ?**

வட பகுதியைப் பொறுத்த வரையிலே முஸ்லீம்களினுடைய வரலாற்றை எடுத்துக் கொண்டால் அதாவது யாழ்ப்பாண முஸ்லீம்களுடைய வரலாற்றை நீங்கள் எடுத்துப் பார்த்தால் முஸ்லீம்களுடைய வெளியேற்றமானது சாவகச்சேரியிலிருந்து ஆரம்பமாகிறது. ஆரம்பத்திலே முஸ்லீம்கள் பெரும் பகுதியானவர்கள் சாவக்ச்சேரியிலே இருந்தார்கள். சாவகச்சேரி என்ற சொல்லே மருவி வந்த ஒரு சொல் என்பர். யாவகச்சேரி என்ற சொல் தான் மருவிச் சாவகச்சேரியாக வந்தது என்கின்றது தான் வரலாற்று ரீதியான உண்மை. அன்றைய காலத்தில் யாவா முஸ்லீம்கள் என்று சொல்லக்கூடியவர்கள் அந்தப் பகுதியிலே அதிகமாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். அந்த யாவா முஸ்லீகள் வாழ்ந்த சேரி தான் யாவகச்சேரியாக இருந்தது. அவர்கள் படைகளிலே பணியாற்றி இருக்கின்றார்கள். பிறகு அது மருவித்தான் சாவகச்சேரி என்ற பெயரானது.

இவ்வாறு சாவகச்சேரியில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் பிறகு அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.அதன் பின்பு அவர்கள் நல்லூரில் இருந்திருக்கின்றார்கள். கோட்டைப் பகுதியிலே இருந்திருக்கின்றார்கள். கோட்டையிலும் கூட ஒரு பள்ளிவாயல் இருக்கின்றது. நல்லூரிலும் இருந்திருக்கின்றது. பண்ணைப் பகுதிகள் எல்லாம் முஸ்லீம்களுடைய பகுதிகளாகத் தான் இருந்து வந்திருக்கின்றன. நல்லூர்ப் பகுதிக்கு இடம் பெயர்ந்து வந்த முஸ்லிம்கள் அங்கும் வாழ அனுமதிக்கப்படவில்லை. பிறகு அங்கிருந்து தான் முஸ்லீம்கள் நாவாந்துறைப் பகுதியிலே குடியேறினார்கள். இதற்கு முன்னால் உள்ள அதாவது யாவகச்சேரி என்று சொல்லக் கூடிய சாவகச்சேரி, கோட்டை, பண்ணைப் பகுதிகள் உள்ளடக்கப்பட்ட பகுதிகள், நல்லூர்ப் பகுதிகள் இங்கிருந்து எல்லாம் முஸ்லீம்கள் ஏதோ ஒரு வகையிலே தான் அப்புறப்படுத்தப்பட்டார்கள். இறுதியாக, அவர்கள் நாவாந்துறையை அண்டிய பகுதிகளிலே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இந்த இடப் பெயர்வுகள் எல்லாம் யாழ்ப்பாணத்திற்குள்ளேயே நடந்திருக்கிறது. ஆனால் இந்தத் தடவை ஒரேயடியாகவே யாழ்ப்பாண முஸ்லீம்கள் மாத்திரமல்ல, வட பகுதியைச் சேர்ந்த அனைத்து முஸ்லீம்களையும் முற்றாகவே துடைத்து வெளியேற்றினார்கள். இந்தப் பின்னணியிலே பார்க்கும் பொழுது இது திட்டமிட்ட ஒரு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா ? அல்லது எதேச்சையாக நடந்த விஷயங்கள் தான் ஆனால் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்படுத்திப் பார்க்கும் பொழுது இது திட்டமிடப்பட்டதாக தோற்றமளிக்கின்றதா என்ற ஒரு சந்தேகம் எங்களுக்கு எழும்புகின்றது. ஏனென்றால் ஒவ்வொரு காலகட்டத்திலும் இந்த விடயங்களிலே சம்பந்தப்பட்டவர்கள் வெவ்வேறு விதமான ஆட்களாக இருப்பதைத் தான் நாங்கள் பார்க்கின்றோம். முஸ்லீம்கள் தங்களைச் சூழ வாழ்ந்த மக்களோடு பிரச்சினைகளிலோ அல்லது சண்டை, சச்சரவுகளிலோ, இன ரீதியான மோதல்களிலோ ஈடுபட்டதில்லை. சில கொடுக்கல், வாங்கல் பிரச்சினைகள் தொடர்பாக வாக்குவாதங்கள் ஏற்பட்டிருக்கக்கூடும். அது சில நேரத்திலே இழுபட்டுக் கொஞ்சம் பெரிய ஒரு நிலைமைக்கு வந்து அமைதியாக அடங்கியிருக்க முடியும். அப்படி நடந்திருக்கின்றது. ஆனால் பெரிய அளவிலே இவ்வாறான ஒரு சூழ்நிலை இல்லை.

ஆனால் எமது மக்களில் ஒரு சிலர் கூறுகின்றார்கள், அதை நான் என்றால் என்னுடைய காதினால் கேட்கவோ, பார்க்கவோ இல்லை. எங்களுடைய பகுதிக்கூடாகப் போய் வரும் சில தமிழ் இளைஞர்கள், இது எல்லாம் ஒரு காலத்தில் எங்களுக்குத்தான் வரும் ! எங்களுக்குத்தான் வரும் ! என்று எங்களைப் பார்த்துச் சொல்லிப் போட்டுப் போயிருக்கின்றார்கள் என்று எல்லாம் சொல்லுகின்றார்கள். இதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கின்றது என்பது எனக்குத் தெரியாது. அதனை வைத்துப் பார்க்கும் பொழுது, இது ஏதோ ஒரு பின்னணியிலே சதித் திட்டங்கள் இருந்து தான், இந்த விடயங்கள் நடந்து இருக்குமோ என்று ஒரு சந்தேகத்தை உருவாக்குகின்றது. அவ்வாறில்லாவிடில் இதனை எதிர்பாராத ஒரு சம்பவமாகத்தான் நாம் கொள்ளலாம். தமிழர்கள் மத்தியிலே, குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதிகளிலே சாதி பாராட்டும் தன்மைகள், நோக்குகள் அதிகளவிலே இருந்திருக்கின்றது. தங்கள் இனத்தையே பல்வேறு கூறுகளாகப் பிரித்து, அவர்களையே ஒதுக்கி வைக்கக் கூடிய தன்மைகள் யாழ்ப்பாணத்திலே மிகக் கூடுதலான அளவிலே இருந்துள்ளன. எனவே அந்த அடிப்படையிலே, முஸ்லீம்களும் வேண்டப்படாத ஒரு சமுதாயம் என்ற அடிப்படையில் தான் அவர்கள் நடந்து இருப்பதாகத் தெரிகின்றது. ஏனென்றால், அப்படியான ஏதாவது முஸ்லீம் - தமிழ்க் கலவரங்கள் நடந்து, அந்தக் கலவரங்களின் அடிப்படையிலே வெளியேற்றப்பட்டார்கள் என்றால் இல்லை. நல்லூர்ச் சம்பவத்தை நாங்கள் எடுத்து நோக்கிப் பார்த்தால், நல்லூரிலே, முஸ்லீம்கள் வாழக் கூடிய ஒரு பகுதியிலே, முஸ்லீம்களுக்குத் தடுக்கப்பட்ட ஒரு மிருகத்தினுடைய உடலை அவர்கள் பாவிக்கக் கூடிய கிணற்றிலே போட்டார்கள் என்று தான் நாங்கள் அறிகிறோம். சண்டைகள் நடந்தது, பிரச்சினைகள் நடந்தது, கலம்பகம் நடந்தது. அதன் அடிப்படையிலே முஸ்லீம்கள் வெளியேறினார்கள் என்று வரலாற்றிலே பார்க்க எங்களால் முடியவில்லை. எனவே முஸ்லீம்கள் வேண்டப்படாத ஒரு சமுதாயமாக, - ஏனென்றால் தமிழ் மக்கள் மத்தியில் இப்படி ஒதுக்கி, ஒடுக்கி வைத்திருக்கக் கூடிய தன்மைகள் இருப்பதனால், -ஆக்கி ஒரு புறமாகத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். தமிழ் மக்கள் மத்தியிலேயே முஸ்லீம்கள் விரும்பாத, வேண்டத்தகாத வார்த்தைப் பிரயோகங்களை அவர்கள் செய்வது உண்டு. அது சில நேரத்திலே பகிடியாகவும் நண்பர்கள் மத்தியிலேயும் அந்த வார்த்தைகளைப் பிரயோகிப்பார்கள்.

ஆனால் இந்த முஸ்லீம்களுடைய இந்த வெளியேற்றத்தில், வெளியேற்றியது ஒரு ஆயுதக் குழு. ஒரு வேளை வேறு சில காரணங்களுக்காகவும், யாருடைய தூண்டுதலின் பேரிலேயும் இந்த முஸ்லீம்களை வெளியேற்றுவதற்கு அவர்கள் எத்தனித்திருக்க முடியும். அந்தக் கால கட்டத்திலே கதைகள் அடிபட்டது, இஸ்ரேல் புலிகளுக்குப் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்குவதாகவும், அதற்கு உபகாரமாக அவர்களுடைய கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழக் கூடிய முஸ்லீம்களைத் துன்புறுத்த வேண்டும் என்ற ஒரு உடன்பாடு காணப்பட்டிருப்பதாக ஒரு கதையும் அடிபட்டது. அதேபோன்று முஸ்லீம்கள் வெளியேற்றப்படக்கூடிய அந்தக் காலகட்டம், இந்தியாவிலே ஆர். எஸ். எஸ். (R. S. S.) இனுடைய வளர்ச்சி மிக வேகமாகப் போய்க் கொண்டிருந்த காலகட்டம். ஏனென்றால் அதற்குப் பின்னால்தான் இந்தியாவிலே கிராமம், கிராமமாக இஸ்லாமிய மதத்திற்கு, ஹரிஜன இன மக்கள் வரக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்தது. எனவே அந்தக் காலகட்டங்களிலே இந்த விஷ்வ ஹிந்து பரிஷத் போன்ற மத ரீதியான சிந்தனைப் போக்குடைய அமைப்புக்கள் மிக வேகமாக வளர்ந்து வந்தன. எனவே, அவர்களுக்கும், புலிகளுக்கும் இடையிலே ஏதாவது ஒரு உடன்பாடு ஏற்பட்டு, அவர்களுடைய வேண்டுகோளின் பேரிலே புலிகள் இவ்வாறான நடவடிக்கையை எடுத்திருக்கலாம் என்றும் நாம் யோசிக்கலாம். புலிகளைப் பொறுத்த வரையிலே அவர்கள் மதங்களுக்கு அப்பால், மதக் கிரியைகளுக்கு அப்பால் போராட்டத்தையும், தேசியத்தையும் பார்க்கக் கூடியவர்களாகத் தான் தங்களை எப்பொழுதும் தங்களை இனங் காட்டி வந்திருக்கின்றார்கள். எனவே அவர்கள் திடீரென எப்படி ஒரு இனத்திற்கெதிராகத் திரும்ப முடிந்தது என்பது கேள்வியாகிறது.

(இன்னும் வரும்)

நன்றி - நூலகத்திட்டம்



# நடு இரவு விவாதம்: ஆணாதிக்கப் பிசாசின் நடமாட்டம்!

புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் பொழுதுபோக்கின் பெரும்பகுதியை ஆரம்பத்தில் தமிழ்ச் சினிமா விழுங்கியிருந்தது. இப்போதெல்லாம் புலம்பெயர் வானொலிகள் (தொலைக்காட்சி?) இதை ஆக்கிரமிக்கத் தொடங்கியிருக்கின்றன. வலிமையான வெகுஜன தொடர்புச் சாதனங்கள் என்ற வகையில் எமது தமிழ்ச் சமூகத்தின் மீது இவை ஏற்படுத்தும் பாதிப்பு அதிகமானது.

சமூக நோக்கின் அடிப்படையில் இவை எந்தளவுக்குச் செயற்படுகின்றன என்றளவுக்கு முழுமையாக ஆய்வுக்குள் இந்த விமர்சனம் போகவில்லை. இந்த விடயத்தில் எல்லா வானொலிகளையும் பொதுமைப்படுத்துவதில் சில சிக்கல்களுமிருக்கின்றன. இருந்தபோதும் நாட்டின் போர்ச் சூழல் அல்லலுறும் மக்கள் என்பவற்றை விடுதலைக்கான தேவையோடு இணைப்பதிலும் பார்க்கப் புலம் பெயர்ந்து வந்ததினால் ஏற்பட்ட குற்றவுணர்வுகள் மீதான வேல்ப் பாய்ச்சலாக அவற்றில் பாவிப்பதில் ஒன்றுபட்டுத் தான் இருக்கின்றன. அதன் மூலம் விடுதலைக்கான பங்களிப்பாகப் புலம்பெயர் மக்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொடுப்பதை மட்டும் தமது சமூக நோக்காக் குறுக்கிக் கொண்டுள்ளதை வானொலி நிகழ்ச்சிகள் சில படம் பிடிக்கின்றன. அது மட்டுமின்றி 'நாட்டை விட்டு ஓடிவந்திட்டம்: எங்களுக்குப் போராட்டத்தை விமர்சிப்பதற்கு என்ன தகுதியிருக்கு' என்று பொறுப்பின்றி நொந்துகொள்ளும் அல்லது விமர்சனங்களை மறுக்கும் போக்கும் இந்த வானொலிகளால் உரப்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் ஒரு தமிழ்ஜீவி தனது உரிமைகளைத் தாரை வார்க்கும் போக்கும் மாற்றுக் கருத்துக்களுக்கான சூழலை மங்கச் செய்வதான போக்கும் உரமூட்டப்படுகின்றன. கருத்தியல் தளங்களைச் சமூக நோக்கு நிலையில் நின்று அணுகாமல், அதை வளர்த்தெடுக்காமல் பொதுப் புத்திக்குள் நேயர்களை உழல வைப்பதற்கு மேலால் ஒரு அடி கூட நகர முடியாமல் குண்டுச் சட்டிக்குள் குதிரையோடிக் கொண்டிருக்கின்றன.

விவாதங்களை நடத்துவதில் ஒரு சமூகப் பொறுப்பு இருக்கிறது என்பதை, விவாதங்களை நடத்தும் அறிவிப்பாளர்கள் சிலர் புரிந்து வைத்திருப்பதாகத் தெரியவில்லை. தமிழ் நாட்டுப் பட்டிமன்றங்களில் காணப்படும் அளவுக்குக் கூட இந்தப் பொறுப்பு ரீ. ஆர். ரீயின் நடு இரவு விவாதக் களத்தில் உணரப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இந்த விவாதங்களை நடத்துவோர் 'பேசப்படும்' வானொலி அறிவிப்பாளர்களாக இருப்பது மட்டும் ஒன்றும் விவாதத்தைக் களப்படுத்துவதற்கான தகுதியைத் தந்துவிடாது. வெறும் பொதுப் புத்தியில், அதுவும் கூட அதற்குள் நிகழ்த்தப்படக்கூடிய சீர்திருத்தவாதப் போக்கில் கூட இல்லாமல் கடைக் கோடித்தனமாக அறிதல்களுடன் விவாதத்தை நடத்துவதில் பயனில்லை. குரல்வளமும், பம்பலடிக்கும் திறமையும் தான் விவாதத்தை நடத்துவதற்கான தகுதியைத் தந்திருப்பது ஒரு அவலம்.

மே மாத முன்நடுப் பகுதியில் ரீ. ஆர். ரீயில் (பிரான்ஸ்) சில நாட்களாக நடு இரவில் நடந்த விவாதமொன்று பற்றியே இங்கு எழுதித் தீர்க்க வேண்டியிருக்கின்றது. அப்பட்டமான ஆணாதிக்க நிலையில் நின்று, விவாதங்களைத் தொகுப்பது, முன் நிபந்தனைகள் விதிப்பது, விவாதங்களுக்குள் மூக்கை நுழைப்பது, வசதியாக உதாரணங்களை எடுத்து விடுவது... என்று பொறுப்பின்றி நடந்தார் அறிவிப்பாளர். இதன் மூலம் ஆணாதிக்க மனோபாவங்கள் உசும்பிக் கொண்டன. வாதங்களைப் பிரயோசனமாகவும், அதன் தலைப்புக்குள்ளும், தனி நபர் தாக்குதலுக்கான களமாக ஆக்காமலும் களப்படுத்துவதற்குப் பதில் இவற்றைச் சிதைத்து விவாதத்தை வளர்த்து விட்டார் அறிவிப்பாளர். தங்களுக்குத் துதிபாடும் நேயர்களை உற்பத்தி செய்வதால் தமிழ்ச் சமூகத்துக்கு வானொலியூடாக எதை வழங்கப் போகின்றார்கள் இவர்கள்?



புலம்பெயர் சமூகத்தில் வாசிப்புத் திறன் மிக மோசமான நிலையிலேயே இருக்கின்றது. இங்கு வெளி வரும் சிறு பத்திரிகைகள் என்பது பலருக்கு எட்டத்தில் உள்ள சமாச்சாரம். வெகுஜனப் பத்திரிகைகளின் வாசிப்பும் கூடப் பெருமளவு தினமுரசுத் தனத்தில் கரைந்து விடுகின்றது. புலம்பெயர் மொழியில் புலமையற்ற நிலையில் இந்த நாட்டு மொழிகளில் வெளியாகும் வெளியீடுகள் மீதான வாசிப்பு, அறிதல் எப்படியிருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இயந்திர வாழ்க்கையை - இதில் ஓரளவு உண்மை இருந்த போதும் கூட - தமது அறிவுத் தேடலின் மீதான சோம்பேறித்தனத்துக்குக் கணிசமானோர் காரணம் காட்டுவதில் சளைக்கவே மாட்டார்கள். இந்த வகையாறாக்களுக்குள் உள்ள ஒரு சிலர் ரீ. ஆர். ரீயில் நடு இரவு நேரங்களில் நடத்தப்படும் விவாதங்கள் உட்பட அனைத்து விவாதங்கள், தொலைபேசி நிகழ்ச்சிகள் போதியளவு நேரம் கிடைத்துத் தான் விடுகிறது. கோயில் மேளம் போலச் சகல விவாதங்களிலும் (குறிப்பிட்ட 'ரெக்ஸ்ற்' தான் அவர்களிடம் இருக்கும். அதை விவாதத்தின் தலைப்புக்கு ஏற்ப நெளித்துப்) பங்கு பற்றுகின்றார்கள் சிலர். அவர்களின் பெயர்கள் அறிவிப்பாளருக்கு மட்டுமல்ல, தொடர்ந்து வானொலியைக் கேட்கும் நேயர்களுககும் பாடமாகிவிடும். இதன் மூலம் ஒரு வகை பிரமுகர்களாகி விடுகின்றார்கள். இந்தப் பிரமுகர்கள் தமக்குள் தொடர்புகளைப் பேணி அணி சேர்க்கின்றார்கள். விவாதங்களில் ஒருவரை ஒருவர் தெரியாதது போல் சார்பானவர்களை விவாதத்தில் ஆதாரம் காட்டிச் சொல்வார்கள்: எதிரானவர்களைத் தாக்குவார்கள். இந்த வகை அணி திரளலின் மூலம் தனி நபர் தாக்குதல்களை நோக்கமாக வைத்தே விவாதக் கருத்துக்களை முன்வைப்பதும் கூட அவர்களின் விவாத அம்சம் தான் என்பதைத் தொடர்ந்து இந்த வானொலி விவாதங்களைக் கேட்பவர்கள் புரிந்து கொள்ள முடியும். இதன்மூலம் தனது கருத்தை நேர்மையின்றியும், சந்தர்ப்பவாதமாகவும் கூட முன்வைக்கின்றனர். பலதரப்பட்ட கருத்துக்களுக்கான முனைப்புகளுக்குச் சந்தர்ப்பம் இல்லாமல் செய்து நேரத்தைக் கொறித்துவிடுகின்றனர்.



இவ்வகையறாவைச் சேர்ந்த ஒரு நேயருடன் தொலைபேசியில் தனிபட்ட தொடர்பு கொண்டபோது எமது மதிப்பீடுகளை உறுதிப்படுத்துவது போல் இருந்தது.

அறிமுகம் - சுமார் 3 நிமிட நேரம் எப்படி எனது தொலைபேசி இலக்கத்தை எடுத்தீர்கள்? கோழையாக இல்லாமல் சொல்லுங்கள். யார் தந்தார்கள்? இப்படியே 3 நிமிடமும் முயன்று கொண்டிருந்தார்.

சுமார் 50 நிமிடம் கதைத்தோம். அவ்வளவு நேரமும் (நான் சாதாரணமாக உரையாடலாமே என்று கேட்டுக் கொண்டும் கூட) மேடைப்பேச்சு தமிழில் பேசிக் கொண்டார். வானலையில் வராமல் தொலைபேசியில் வந்திருக்கிறீர்கள் என்றார்.

முன்னர் (ஆர்.ஏ.சி) கனேடிய வானொலியில் கதைத்த போது முற்போக்கான கருத்துக்களை வைத்தெல்லாம் கதைப்பீர்கள். இப்போ ரி.ஆர்.ரி.யில் இப்படி மோசமான வாதங்களை முன்வைத்தீர்களே என்று கேட்ட போது சொன்னார்.

அந்த வானொலி கேட்டதென்று சொல்கிறீர்கள் அப்படியென்றால், என்னை நன்றாகப் புரிந்துகொண்டிருப்பீர்கள். இது ரி.ஆர்.ரி. என்றார்.

பெண்ணடிமைத்தனம், ஆணாதிக்கத்தனம் என்றெல்லாம் யாராவது சரியாக விளக்கினால் நாம் விவாதங்களை முன்வைக்கலாம். ஒருத்தரும் சொல்கிறார்களிலில்லையே என்று வானொலி விவாதத்தில் சொன்னீர்கள். சரி அது பற்றித் தெரியாமல் எப்படி விவாதத்தில் பங்கு பற்றினீர்கள்? சரி அதை விடுவம். விவாத நிகழ்ச்சி தொடங்கியவுடன் ஒருவர் அதுபற்றி விளக்கமாக தொலைமடல் மூலம் அனுப்பிய கடிதத்தை அறிவிப்பாளர் வாசித்தாரா? (இக் கடிதம் எழுத்து தெளிவில்லாமல் இருக்கிறது என இடையில் வாசிப்பது நிறுத்தப்பட்டது. இவ் இடத்தில் குறிப்பிடப்பட வேண்டியது) என்றபோது, நான் இடையிலிருந்து தான் கேட்டேன். அதனால் தெரியாது என்றார். கேட்காமல் எப்படி அவ்வாறு விவாதத்தை முன்வைத்தீர்கள் என்றேன். திசை திரும்பி அத் தொலைமடல் எழுதிய பெண் பற்றி சொல்லத் தொடங்கினார். நான் அதை இடைநிறுத்தினேன்.

இந்த உண்மை உதாரணம் எனது மதிப்பீடுகளுக்கு ஒரு மாதிரியாக இருந்ததால் இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

இதேபோல அந்த அறிவிப்பாளரையும் ஒரு சிறு அறிமுகம் செய்கிறேன்.

அறிவிப்பாளர்: பாரதியார்கூட தனது மனைவியிடம் அடிவாங்கினார்: ஏன் தெரியுமா? (நகைச்சுவை கலந்த தொனியுடன்).

நேயர்: தெரியாது

அறிவிப்பாளர்: பட்டினி தாங்க முடியாமல் தனது மனைவி பக்கத்து வீட்டிலை வாங்கி வந்த சாப்பாட்டை காகங்களுக்கு போட்டுக் கொண்டிருந்தாராம்.

அறிவிப்பாளரின் மறுவாசிப்பு அப்படி. இவருடைய பாரதியார் அரிசியை சிட்டுக் குருவிகளுக்குப் போடவில்லை. சாப்பாட்டை காகங்களுக்குப் போட்டிருக்கிறார்.

இதைவிட இதற்குள் இருக்கிற கடைக்கோடித்தனம் என்னவென்றால் பெண்விடுதலை பேசிய பாரதி மீதே மனைவி வன்முறையைப் பிரயோகிப்பவளாக இருந்தாள் என்று சித்திரிப்பது தான்.

இவ் விவாதத்தில் பங்குபற்றிய இன்னொரு நேயர் சொன்னார்,

பெண்ணடிமைத்தனம் எண்டதெல்லாம் எப்பவோ காலாவதியாகிப்போன பிரச்சினை. அதை இப்ப கிளறி எடுத்துக் கதைக்கிறார்கள்.

ஏதோ உரிமையுடன் கோபப்பட்டுப் பேசினார். இந்தச் சகிப்பின்மைக்குப் பின்னால் இருந்த உளவியல் ஆணாதிக்க மனோபாவம் தான் என்பது அவருக்கு விளங்க நியாயமில்லை.

எந்த நிகழ்ச்சியை எடுத்தாலும் பெண்விடுதலை பெண்விடுதலை எண்டு சிலர் (யாரையோ மனதில் வைத்து) கவிதை எழுதிறதும், கதை எழுதிறதுமாக இருக்கினம் என்று எரிந்து விழுந்தார்.

இன்னொரு நேயர் வந்தார். பியர் அடிக்கிறதுக்கும், படுக்கிறதுக்கும் தான் பெண்விடுதலை கேட்கினம் என்றார்.

பெண்ணியம் சம்பந்தமான கோட்பாடுகள், விவாதங்கள் உலகம் பூராவும் (ஓரளவுக்கு தமிழ்ச் சூழலிலும்கூட) இன்று வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் நிலையில் இப்படியான விவாதங்களை பொருத்திப் பார்த்தால் வெட்கப்படாமல் என்ன செய்ய முடியும்.

இவ் விவாதத்தில் பெண்ணிய வாதிகளின் மீது தாக்குதல் தொடுப்பதில் சிலர் (ஒருசில பெண்களும் உட்பட) தமது தொனியை வெளிப்படுத்தினார்கள். ஆணாதிக்க கருத்தியல்களே சமூகத்தின் கருத்தியல்களாக இருப்பது என்ற அடிப்படையான விடயம்கூட இவர்களில் பலருக்குப் புரியாமல் இருந்தது. இக் கருத்தியல்களை உள்வாங்கிய பெண்ணும் ஆண்நோக்கில் தான் நின்று கதைப்பாள் என்பதை (அறிவிப்பாளர் உட்பட) பலர் புரிந்து வைத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பிரச்சினையாக இவ் விவாதத் தலைப்பு (எமது சமூகத்தில் பெண்கள் சமத்துவமாக நடத்தப்படுகிறார்களா? இல்லையா? என்பதுதான் தலைப்பு) குறுக்கப்பட்டு விட்டது. இந்த எல்லைக்குள் தன்னும் பெண்களின் ஒடுக்கப்படும் உணர்விலிருந்து எழும் விவாதங்களை அதன் நியாயங்களை புரிந்து கொள்ளவாவது முயற்சிப்பதற்குப் பதில் ஆண் அதிகாரத்துவ மனோபாவத்தில் நின்று சகிப்பின்மையுடன் எதிர்வாதம் புரியப்பட்டது. (இருந்தபோதும் இந்த அடாவடித்தனத்துக்குள்ளும் சில பெண்கள் தங்கள் கருத்துக்களை ஓரளவு பெண்நிலையில் நின்று துணிவுடன் முன்வைத்தார்கள் என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று.) முன்னால் நின்றிருந்தால் அடித்து நொருக்கி விடுவார்களோ என்று எண்ணுமளவுக்கு ஒருசில ஆண்கள் திமிருடன் பேசினார்கள். இவ்வாறான விவாதங்கள்கூட அறிவிப்பாளரின் திறந்த மடைகளுக்கூடாக தடுப்பேதுமின்றி பாய்ந்து கொண்டிருந்தது. பெண்நிலையிலான விவாதங்கள் பல தடவைகளில் குறுக்கீடுகள் செய்யப்பட்டன. இதைச் சில நேயர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

நீங்கள் ஒருபக்க சார்பாக நடந்து கொள்கிறீர்கள் என்று ஒரு பெண் நேயர் -நியாயமாகவே- குற்றஞ்-

*(இவ் ஆக்கம் பாரிசிலிருந்து வெளிவரும் -தமிழ்த் தேசியப் பத்திரிகை என தன்னைத் தானே அறிவித்துக் கொள்ளும்- ஈழமுரசுக்கு பிரசுரத்துக்காக அனுப்பப்பட்டது. பிரசுரமாகவுமில்லை. பதிலுமில்லை.*

*அதில் அதிசயமுமில்லை. தமிழ்ப் பத்திரிகா தர்மம் அப்படி. மாற்றுக் கருத்துக்களுக்கான மதிப்பும் அப்படி! -ரவீந்திரன்)*

நன்றி - நூலகத்திட்டம்



சாட்டியதற்கு, தான் அப்படிச் செய்வதன் மூலம் விவாதத்தைத் தூண்டுவதாக அறிவிப்பாளர் சாதுரியம் புரிந்தார்.

இந்த இலட்சணங்களில் நடத்தப்படும் விவாதங்கள் தமிழ்ச் சமூகத்தின் பெண் ஒடுக்குமுறைக் கருத்தியலில் ஒரு சிறு அசைவைத்-தானும் ஏற்படுத்துமா என்பது சந்தேகமே. ஆயுதம் ஏந்திப் போராடும் தமிழீழப் பெண் போராளிகள் பற்றி ஆணாதிக்க மனோபாவம் படைத்தவர்கள் பெருமைப்பட்டுக் கொள்வதில் -பெண்நிலையிலான- அர்த்தம் என்ன இருக்கிறது. இன ஒடுக்குமுறை, ஆண் ஒடுக்குமுறை என்பற்றினூடாக தேசிய விடுதலைப் போராட்டத்தில் தியாகங்கள் புரியும் இந்தப் பெண் போராளிகளின் எதிர்காலம் பற்றிக் கவலை கொள்ளாமல், ஒருபுறத்தில் அவர்களைப் பெருமை பேசிக் கொண்டு மறுபுறத்தில் ஆணாதிக்க வீம்பு



பேசும் இவர்களே எதிர்காலத்தில் மீண்டும் இவர்களை அடுக்களைக்கு அனுப்பி வைக்கப் போகிறவர்கள். வியட்நாமும் நிக்கரக்குவாவும் இதற்குச் சிறந்த உதாரணங்கள். அங்கு வீரஞ்செறிந்த போராட்டத்தை நிகழ்த்திய பெண் போராளிகள் போராட்டம் முடிவுற்ற போது குசினிக்கு அனுப்பப்பட்டதும் அல்லது விபச்சாரிகளாக மாறியதும் நடக்கத் தான் செய்தது. அவர்களுக்கான சமூக உத்தரவாதம் போராட்டத்தின் போது கட்டியெழுப்பப்படாமல் இருந்ததே அதற்கு முக்கிய காரணம். சமூகத்தின் ஆணாதிக்கக் கருத்தியலை மாற்றியமைக்காத வரை இந்த ஆபத்து நிகழ்ந்தே தீரும். வெறும் சட்டங்களாலோ பயமுறுத்தலினாலோ அல்லது மனிதாபிமானத்தாலோ கூட இவற்றைச் சாதிக்க முடியாது.

இப்படியிருக்க பெண்ஒடுக்குமுறை காலாவதியாகிப்போன ஒன்று என்று வாதிடவும், தமிழீழத்தில் அப்படியெல்லாம் இல்லை என்று சிறுபிள்ளைத்தனமாக பேசிக்கொள்ளவும், ஆணாதிக்கம் என்றால் அலர்ஜி கொள்ளவும், பெண்விடுதலை பேசுபவர்கள் மீது தாக்குதல் தொடுக்கவும், பெண் ஒடுக்குமுறை பற்றி ஆணாதிக்கம் பற்றித் தெரிந்து கொள்ள மறுப்பதும்தான் இவ்வகை விவாதங்களில் கட்டமைக்கப்படுமென்றால்,

திருப்திப்பட்டுக் கொள்ள என்ன இருக்கிறது??

**-ரவீந்திரன் (சுவிஸ்)**

*15051999*

# வானலைகளில் நச்சு விதைகள்!

கடந்த ஐந்தாண்டு காலத்திற்குள் தொடர்ந்து மூன்று தமிழ் தனியார் வர்த்தக ஒலிபரப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. இலங்கை வானொலியில் ஒரே அலை வரிசையில் ஒலிபரப்பப்பட்டு வந்த தேசிய சேவை, வர்த்தக சேவை என்பன இரண்டாக்கப்பட்டு, மொத்தம் ஐந்து தமிழ் ஒலிபரப்புகள் இடம்பெறுகின்றது. இந்த நான்கு வர்த்தக ஒலிபரப்புகளில், மூன்று தனியார் ஒலிபரப்புகளும், இருபத்து நான்கு மணிநேர சேவையாகும். இந்த மூன்றிலும் இரண்டு, உள்ளூர் நிறுவனங்களினதும், மற்றயைது வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினதும் ஆகும்.

இவ்வாறான தனியார் ஒலிபரப்புகளின் இயக்குனர்கள் -சூரியன், சக்தி, சுவர்ண ஒலி - இலங்கை வானொலியின் முன்னாள் அறிவிப்பாளர்கள். எவ்வாறெனினும் மேற்படி ஒலிபரப்புகளின் நிகழ்ச்சிகளின் தரம் பற்றிப் பேசப்படும் போது நிலைமை கவலையேற்படும் விதத்திலேயே இருப்பது புலனாகும்.

பொதுவாகவே வர்த்தக ஊடகங்களின் உள்ளடக்கம் வியாபார நோக்கங் கொண்டே அமையும். மக்கள் நலனில் எவ்வித அக்கறையும் அற்றே அவை மிக அநேக சந்தர்ப்பங்களில் அமையும். ஆனால், சமீபகால வர்த்தக ஒலிபரப்புகள் இன்னும் ஒரு படி மேலே சென்று நச்சு விதைகளைத் தூவி வருவது மிகச் சாதாரணமாகவே அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

வர்த்தக ஊடகங்களை நடாத்தி வரும் நிறுவனங்களின் நோக்கம் வெறுமனே இலாபமீட்டல் மட்டுமல்ல. மாறாக விளம்பர ஆதிக்கத்தை நிலை நாட்டுதல், தங்கள் கூட்டு நிறுவனங்கள் நேரடியாகவே நுகர்வோருடன் தொடர்புகளை ஏற்படுத்திப் பேணுதல், தங்கள் நிறுவனங்கள் பற்றிய பிரமிப்பை ஏற்படுத்தல், தனிப்பட்ட / கட்சி அரசியல் பிரச்சாரம் மேற்கொள்ளல் என்பன சிலவாகும். இதன் மூலம் சுலபமாக வர்த்தக ஆதிக்கம் நிறுவப்பட முடியும். குறிப்பாகக் கட்புல / செவிப்புல ஊடகங்களில் இவ்வாறான போக்கு மிக அதிகமாகும். இலங்கையின் முன்னணி ஊடகங்களின் பின்னணி பற்றி அறிந்தவர்களுக்கு இது நன்றாகவே விளங்கும்.

இத்தகைய ஊடகங்கள் மக்களிடையே செல்வதற்கு உபயோகிக்கும் உத்தி உளவியல் மருத்துவம் போன்றது. கேட்பவரை நன்றாக மயக்கநிலைக்குக் கொண்டு சென்று, பின்னர் தாம் நினைத்தவற்றைச் சுலபமாக உட்செலுத்தும் முறையே இவர்களால் கடைப்பிடிக்கப்படுகின்றது.

தமிழ் வர்த்தக ஒலிபரப்புகளும் இவ்வாறான பண்புகளைக் கொண்டதுடன் இன்றும் ஒருபடி மேலே சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவை தமது இருபத்து நான்கு மணிநேர ஒலிபரப்பைத் தமிழ்ச் சினிமாப் பாடல்களை மட்டும் கொண்டே நிரப்பி வருகின்றன. ஒரே பாடலைக் கூட வெவ்வேறு தலைப்புக்களின் கீழ் ஒரேநாளில் ஐந்து தடவை ஒலிபரப்பும் கலையில் இவர்களை யாருமே விஞ்ச முடியாது. இருபத்து நான்கு மணிநேர ஒலிபரப்புகளில் ஆறு மணித்தியாலத்திற்கும் மேல் தொலைபேசி நிகழ்ச்சிகளால் நிரப்பப்படுகின்றது. இதன்மூலம் நேரடியாகத் தமது நிகழ்ச்சிகள் பற்றிக் கேட்பவர்கட்குப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு இதுவே சிறப்பு என்று சொல்லப்படுகின்றது. இது மிக மோசமான ரசனைக்கு மக்களைப் பண்படுத்தும் சுலபமான வழியாக அமைகின்றது.

மிக மோசமான நுகர்வுக் கலாச்சாரத்தில் சிக்குண்டிருக்கும் இளைய பரம்பரையினரை மேலும் மோசமான கலாசாரச் சீரழிவிற்கு உட்படுத்துவதும் இவர்களின் நோக்கமாகத் தெரிகின்றது. தென்னிந்திய சினிமா விமர்சனம், நட்சத்திரங்கள் பற்றிய செய்தி போன்றவை மிக நேரடியாகவே சொல்லப்படுகின்றது. தென்னிந்தியத் திரைப்படங்களை உயர் ரகமெனக் கூறி வியாபாரம் செய்ய முற்படுகின்றனர். இந்த வானொலி ஒலிபரப்பொன்றில் "மேட் இன் இன்டியா", "வந்தே மாதரம்" போன்ற அல்பங்கள் அதிகளவில் ஒலிபரப்படுகின்றது. இதன் நோக்கமும், பின்னணி அரசியலும் மிகத் தெளிவானது. இருபத்திநான்கு மணி நேரமும் தமிழ் சினிமாவில் மயங்கிக் கிடக்கும் ஓர் தலைமுறை மெல்ல மெல்ல உருவாக்கப்பட்டுக் கொண்டு இருப்பது கவலைக்கிடமான ஒரு விடயமாகும். எத்தனை தமிழ்த் தினசரிகள் வெளிவருகின்றது என்பது கூட அறியாத தலைமுறை அது.

பெண்கள் நிகழ்ச்சிகள் வழமையான சமையல் குறிப்பு, அழகுக் குறிப்பு, வீட்டுக் குறிப்புப் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த ஒலிபரப்புகளில் நேரடியாகக் கருத்துப்பரிமாறல் என்ற போர்வையில் பெண்கள் பற்றி மிக மோசமான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. காதலித்துக் கைவிடும் பெண்கள், அலங்காரப் பொருட்கள், வாங்குவதற்காக வேலைக்குப் போகும் பெண்கள் போன்ற தலைப்புகளில் கருத்துக் கேட்கப்படுகின்றது. இதிலும் குறிப்பாக ஓர் ஒலிபரப்பு பெண்களை இழிவு படுத்துவதை நோக்கமாகக் கொண்டே நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்றது. அந்த ஒலிபரப்பின் நிகழ்ச்சியொன்றில் மனைவி என்ற சொல் மூன்று அறிவிப்பாளர்களின் வாயில் இரண்டு மணி நேரம் படும் பாடு சொல்ல முடியாத கீழ்த்தரம். இவ்வாறான நிகழ்ச்சிகள் எவ்வளவு சிறுவர்களால் விரும்பிக் கேட்கப்படுகின்றதென்பதற்கு அவர்கள் வாசிக்கும் கடிதங்களே சாட்சி. இது அவர்களிடையே ஏற்படுத்தும் உளவியல் பாதிப்புப் பாரதூரமாக அமையும் என்பது குறித்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கட்குத் தெரியாததல்ல.

இங்கு குறிப்பிடப்பட்டவை வர்த்தக ஒலிபரப்புகளின் பொதுவான நிகழ்ச்சிப் போக்கு மட்டுமே இந்த ஒலிபரப்புக்களின் தரம் பற்றிய கேள்விகள் எழுப்பப்படும் போதெல்லாம் இவர்கள் தென்னிந்திய சினிமா ஊடகவியலாளர்கள் பாணியில் நேயர்கள் விரும்புவதைத்தான் ஒலிபரப்புகின்றோம் என்பது வழக்கம். திருடனாய்ப்பார்த்துத் திருந்தும் வரை திருட்டை ஒழிக்க முடியாது என்பது உண்மையெனினும், திருடன் ஒரு நாளும் திருந்தப் போவதில்லை என்பதை இது காட்டுகின்றது.

பெற்றோர்கள், பெரியோர்கள் விழித்துக்கொள்ள வேண்டிய கால கட்டம் இதுதான். ஏற்கெனவே தொலைக் காட்சியின் கோரப்பிடிக்குள் எம் இளஞ்சந்ததியைத் தொலைத்தாகி விட்டது. மேலும் அவர்களைச் சீரழிக்காமல் இயன்றவரை மேற்படி ஒலிபரப்புகளிலிருந்து விலத்தி வைத்தல் நன்மை பயக்கும். ஆரோக்கியமான எதிர்காலத் தமிழ்ச் சமூகமொன்றை எதிர்பார்க்கும் எல்லோரும் தீவிரமாகச் செயற்பட்டு இத் தவறான போக்குகளை முளையிலேயே கிள்ளி எறிதல் சாலச் சிறந்தது.

**ம.கபிலன்**

## சமாதான...

செயற்பட்ட வேளையிலே பேரினவாத நெருக்குதலுக்குப் பணிந்து திருச்செல்வத்திற்குத் தெரியப்படுததாது டட்லி ஏதேச்சிகாரமாக வர்த்தமானிப் பிரகடனம் மூலம் அக்குழுவைக் கலைத்தார்.

அநீதியான இச்செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முருகேசு திருச்செல்வம் தனது பதவியை இராஜினாமாச் செய்தார். எனினும், தனது இராஜினாமா உரையில் "புனித நகர்" விடயம் தொடர்பாக சிறப்பாகக் குறிப்பிட முடியாமல் போனதற்குக் காரணம் இது தொடர்பான கோவைகள் கே. சி. நித்தியானந்தனிடமிருந்து தக்க தருணத்தில் இவருக்குக் கிடைக்காமை ஆகும்.

பிரித்தானிய மற்றும் அமெரிக்கக் கலைக்களஞ்சியங்களின்படி "தமிழர் முதலில் குடியேறிய பகுதி" (First settlements of Tamils) திருகோணமலை" என்றுவரும் குறிப்பு, கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் அவர்களது பதிகத்தில் "குடிதனை நெருக்கிப் பெருக்கமாய் வாழ்ந்த" எனும் குறிப்பு தமிழ் மக்களின் இருப்பின் தொன்மையைச் சுட்டி நிற்கிறது. இந்நிலையில் கொழும்பின் பிரபல தனியார் தொலைக்காட்சி தனது செய்தியறிக்கையில் திருமலை தொடர்பான செய்திகள் வருமிடத்து மணிக்கூட்டு கோபுரத்தைக் காட்டுவது திருமலை நகர வரலாற்றை சரிவரப் புரிந்தவர்களுக்கு நெருடலாக அமைவதுடன் பேரினவாதக் குறியீடான "கொடி பறக்கும்" அக்கோபுரம் மனதை நோகடிக்கவும் செய்கிறதல்லவா? இதைவிடுத்து "திருக்கோணேஸ்வரம்" திருமலையின் அடையாளமாகக் காட்டப்பட பொறுப்பான ஊடகத்துறை என்ற வகையில் அவர்கள் ஆவன செய்வது வரவேற்கத்தக்கது.

"விடுதலைப் பயணத்தில் தங்குமடம் கிடையாது" என்று உரைத்த "சிந்தனைச்சிற்பி" சி. கதிரவேற்பிள்ளை அவர்களின் "அபிவிருத்தியும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போக முடியாதவை. அடிமைத்தனத்தைத் துடைத்தெறியாமல் அபிவிருத்தி பேசுவது தமிழீழத்தின் அழிவிலேயே போய் முடியும்" என்ற வாக்கை இத்தருணத்திலே பாராளுமன்ற தமிழ்ப் பிரதிநிதிகள் மனத்திலிருத்த விழைய வேண்டும்.

"திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவர்கட்கான தேர்தல் தொகுதி ஒன்று நிறுவப்படும்: அங்கு சிங்களவர் ஒருவர் நிச்சயமாக வெற்றிபெறும் வாய்ப்பைப் பெறுவார்" என்று 1976ல் "சேருவில" தேர்தல் தொகுதி நிறுவப்பட முன்னரே - தீர்க்கதரிசனப் பார்வையுடன் செல்வநாயகம் அவர்கள் கூறியதை உள்வாங்கிச் செயற்பட மறந்ததன் விளைவு தான் திருமலை எரிமலையாகிக் கனன்று கொண்டிருப்பதன் காரணம் என்பதைப் புரிந்து கொண்டு திருமலை சமாதான நகராகப் பிரகடனப்படுத்தப்பட்டு ஒன்றரை மாதமாகியுள்ள வேளையிலே "என்றும் விழிப்புணர்ச்சியோடு இருப்பது தான் விடுதலைக்கு நாம் கொடுக்கும் விலை" என்ற ஆங்கில அறிஞரொருவரின் வாக்கை உரத்துச் சிந்திக்க விழைவது காலத்தின் கட்டளையாகிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# 1990-1999



# தடயங்கள்

...எனக்கு ஒண்டுமே புரியுதில்ல.. ஆ வெண்டு சத்தம் போட்டு அழ வேணும் போல இருக்கு, ஆனா... ஏனோ தெரியயில்ல கண்ணீர் வர மறுக்குது அது மனசுக்குள்ளேயே கல்லாய்ப் போய்ட்டுது போல....

என்ர பிஞ்சுக் கால்கள் வலிக்கத் தொடங்குது செருப்பில்லாத கால்களிலே வெயில் தீ வச்சுக் கொண்டிருக்கு. கறுவல் அண்ணர் எங்கட சுழியனுக்குக் குறிவச்ச மாதிரி.

உம்மாட கண்களில இருந்து அவட மனசு கரைஞ்ச தண்ணீ தாரை தாரையா வழியுது அவவப் பார்க்கும் போது தான் எனக்குக் கவலை ஊத்தெடுக்குது தண்ணீயூத்துப் போல.

இடுப்பில சின்னவன் தொங்கிக் கொண்டி-ருக்கிறான். அவன்ர உச்சந் தலைய மூடியிருக்கும் உம்மாவின் சீலைத் தலைப்பையும் தாண்டி உச்சி வெயில் சுடுது. அவன் தலையில இரண்டு கையையும் வச்சு அழுறான்.

அவனுக்கு ஒண்டும் விளங்கியிருக்காது பெரிய மாமி வீட்டுக்குப் பெருநாள் கொண்டாடப் போறோமெண்டோ முள்ளியவள ஆஸ்பத்திரிக்கு மருந்தெடுக்கப் போறோமெண்டோ அல்லது துவக்குச் சத்தம் பென்னம் பெரிசாக் கேட்கக் கேட்க பள்ளிவாசல் பக்கம் ஓடுவோமே..., அதுபோல என்டோ நினைச்சிருப்பானோ என்னமோ.

எனக்குக் கொஞ்சம் கொஞ்சம் விளங்குது. ஆனா.. ஏனிப்படிச் செய்தவியள் எண்டுதான் விளங்குதில்ல் இதுக்கு யாரிட்டையாவது காரணம் கேட்கவேணும் போல இருக்கு. படிச்சுத் தரேக்க சேரிட்ட குறுக்குக் கேள்வி கேட்கிற மாதிரி.. ஆரிட்டக் கேட்பேன்?

ராத்திரி எட்டு மணியிருக்கும் நான் இஷாத் தொழுதிட்டு வந்து அப்பத்தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தன். எருமை மாட்டுத் தயிரும் குத்தரிசிச் சோறும். எனக்கு விருப்பமான சாப்பாடு நல்ல ருசியாயிருந்தது.

சின்னவன் நித்திரையாய்ப் போய்விட்டான். மாலுக்குள்ள இருந்து உம்மாவும், உம்மம்மாவும் பனங்கிழங்கு சீவிக் கொண்டிருந்தவியள் ஒடியலுக்குப் போட.

அப்பத்தான் விறுவிறெண்டு வந்தார். எண்டைக்கும் இல்லாத செரியான வேகம். அவற்ற முகத்தில சோகமும் கோபமும் அப்பிக் கிடந்தது. கண்களில கண்ணீர் குடியேறியது. குரலில கூட ஒருவிதமான கரகரப்பு அடுப்படிக் கதவிடுக்கால் அப்பாவை அவதானிக்கிறன்.

"புள்ள.., விடிய சுபஹூக்கு முதல்ல நாங்க வெளியேறியாகணும்...." அடியும் முடியும் இல்லாத ஒற்றை வாக்கியத்தில் சொல்லி முடித்தார். நான் மெள்ளவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிப்பதைப் போல.

உம்மாவும், உம்மம்மாவும் அதிர்ச்சியிலிருந்து இன்னும் விடுபடயில்ல் அவர்களால் வாய் திறந்து பேச வார்த்த வரயில்லப் போல. கொஞ்ச நேரத்துக்கு மாலுக்குள்ள இருந்து எந்தச் சத்தமும் கேட்கயில்ல. எங்கட மனசுக்குள்ள டப்டப்பென்டு, சுவரில கொழுவியிருந்த அப்பாட டச்சுக் காலத்து மணிக் கூட்டோட சேர்ந்து அடிக்கிற சத்தத்தைத் தவிர.

தொண்டையில குண்டு போல பொறுக்குது. அப்படியே வச்சிட்டு உம்மா புகப் போட்டு வச்ச மண்குடத்தில இருந்து தண்ணிய வாத்துக் குடிக்கிறன். அது செரியான குளிரா மனசத் தடவிக் கொண்டு இறங்குது. உம்மம்மா பாட்டுப் படிச்சுச் சின்னவனத் தூங்க வைக்கிற நேரத்தில காதில தேன் போல கேட்குமே அது மாதிரி. என்டாலும் எனக்கு அப்பா சொன்ன கதை நெஞ்சை எரிச்சுக் கொண்டிருக்கு. வாப்பாட மையத்துக்கு முன்னால குந்தியிருந்து உம்மா அழுத போது எரிஞ்சுதே அது போல.

வழமைய விட இண்டைக்கு வெயில் செரியாச் சுடுது. உம்மம்மா ஒரு காலை இழுத்திழுத்து நடக்கிறா, எங்கட சிவத்தப்பசு மிதிவெடி பட்டப் பிறகு நடந்த மாதிரி. அவவுக்கு ஒரு காலில வாதக் குணம். ஒவ்வொரு நாளும் இரவுல நான் தான எண்ணெய் போட்டுத் தேச்சு விடுவன் அப்பா சிவப்பிக்கு மருந்து கட்டி விட்டது போல. கொஞ்சம் சுகமாயிருக்குது எண்டு சொல்லுவா. ஆனா இப்ப கால் வருத்தம் கூடியிருக்கும் பாவம்.

அவட தலையில சுமை் சுமையெண்டா பெரிசா ஒண்டுமில்ல. அப்பாட பக்குசுப் பெட்டியையோ, பீலியடி மாட்டுப் பட்டியையோ அல்லது அட்டியட்டியா அடுக்கி வச்சிருக்கிற சீனட்டி நெல்லு மூட்டையையோ கொண்டு வர ஏலும்.

அவ வெத்தில பாக்கு இடிக்கிற உரல், ஒடியல் கட்டு, கொஞ்சம் பச்சரிசி, ஒரு சின்னப் பானை அவ்வளவு தான்.

வாப்பாட றலி சைக்கில அப்பா உறுட்டிக் கொண்டு வாரார். பின்னுக்கு தண்ணிமுறிப்புக்கு வயல் சாமான் கட்டியோடுறதுக்காக பூட்டின இரும்புக்கரியலில ஒரு அணில் கொறியன் சாக்கு. அதில அரைவாசிக்குச் சாமான்.

கென்ரில ஒரு மண்ணெண்ணைக் கலன் கொழுவியிருக்கு் மண்ணெண்ணைக் கலனுக்-குள்ள மண்ணெண்ணை இல்ல் இனி எங்கட வாழ்க்கைக்கு எங்க விளக்கு? அதுக்குள்ள தண்ணி தான்.

அப்பா அடிக்கடி "எங்கட கிணத்துத் தண்-ணியக் குடிச்சாத் தான் எனக்கு விடாய் தீந்த மாதிரி..." எண்டு சொல்லிக் கொண்டு மாமரத்து முத்தத்தில இருந்து மடக்கு மடக்கெண்டு குடிப்பார்.

அந்த ஆசைக்காகவோ என்னவோ, கொஞ்-சத் 'தண்ணி கொண்டு வாரார். அதில அரை-வாசிய சின்னவனுக்கு அடிக்கழுவ உம்மா எடுத்திட்டா.

நாக்கு வரண்டு கோடை காலத்து வயல் வெளி மாதிரி எரியுது. எனக்குத் தாகம் தாங்க முடியாமல் இருக்கு. எங்கட கிணத்துத் தண்ணீ குடிக்க வேணுமென்டு ஆசை.

இப்பவே குடிச்சு முடிச்சுட்டாப் பிறகு ஆரு எங்களுக்குத் தண்ணி தரப் போகுதுகள். வார வழியில நிறையக் கிணறுகள் இருக்குத் தான் ஆனா.., வாளியும் கயிறும் இல்லையே. படலைகளும் கட்டிக் கிடக்கு. நாய்களும் சத்தம் போட்டுக் குரைத்துக் கொண்டிருக்குது.

இன்னும் எவ்வளவு தூரமோ எத்தனை நாளோ எங்கேயோ... என் சின்ன மனசில படத்துக்குத் திரையில எழுத்து ஓடுற மாதிரி கேள்விக் குறிகள் ஓடுது. என்னைப் போல இன்னும் எத்தின பேர் என்ர வகுப்பில படிக்கிற றஸீன், மாஹிர், ஜிப்ரி, சக்கி, றைஹான், ஜெனீஷா, றிஸோனா.....

அந்தா முன்னுக்கு ஆதங்கண்டு மாமாவும் மாமியும் ஆதங்கத்தோட போறாங்க. சோகத்தோட சோர்ந்து சோர்ந்து போறார் சரிபுச் சாச்சா. கொன்றைக்ரர் அப்பா குடும்பம், சிவத்தாச் சாச்சி, மரியம் பெரியம்மா, நூறப்பா... இப்படி எத்தின ஆயிரம் பேர் தான் இந்த முடிவில்லாத பாதையில.

எல்லாத்துக்கும் ஒரு முடிவிருக்குத் தானே.

"பாதை எங்கே முடியுது" எண்டு ஒரு நாள் நான் தாஸீம் சேரிட்டக் கேட்ட ஞாபகம்.

அவர் சிரிச்சுக் கொண்டு சொன்னார்

"பயணங்கள் முடியுற இடத்தில தான் பாதையும் முடியும்" எண்டு.

"அப்படியெண்டா இந்தப் பயணம் எங்க முடியும்?" எண்டு தாஸீம் சேரிட்டக் கேட்க வேணும் போலயிருக்கு. ஆனா... ஆனா... அவரு.

என்ர கண் கலங்குது கண்ணீர் அரும்பிக் கன்-னத்தில வடியுது. அத இடது கையால துடைச்சி விடுறன்.

தாஸீம் சேர் எங்கட வகுப்பாசிரியரா-யிருந்தவர். அருமையான சேர் நல்லாப் படிப்பிப்பார். சிரிச்சுச் சிரிச்சு கனக்க கனக்க கதை சொல்லுவார்.

ஓர் ஊரில ஆச்சியொருத்தி வடை சுட்டு சுடச்சுடவே விற்று வந்தாளாம்... தாஸீம் சேர்க்குள் வடைக்காரக் கிழவி புகுந்து வெளிப்படுவாள். நாங்கள் இமை வெட்டாம பார்த்துக் கொண்டிருப்பம். காகம் ஒண்டு பறந்து வந்து வடைய வாயில கவ்விக் கொண்டு சுதந்திரமா ஒரு மரக்கிளையில இருந்து தின்னத் தொடங்கிச்சாம்.

இப்படித் தான் ஒரு நாள் அந்தக் காகம் வடைய தின்னத் தொடங்க அந்த வழியால வந்த தந்திர புத்தி நரி காக்கையைக் கூல் பண்ணி "காக்கா.. காக்கா... நீ நல்ல வடிவாயிருக்கிறாய். உன்ர குரல் கூட நல்ல இனிமை. கேட்க ஆசை. ஒரு பாட்டுப் பாடு" என்றதாம். தந்திரமறியாக் காகமும் கா.. கா... காகா... என்று கத்த, சொறி பாடத் தொடங்க, வடை கீழே விழ, அதக் கவ்விக் கொண்டு நரி ஓடிச்சாம்....

பாவம் காகம் ஏமாந்து போச்சுதாம். அதன் வாய்க் கெட்டினது வயித்துக்கு எட்டயில்ல எண்டு நான் சொன்னன்.

தாஸீம் சேர் கதை சொல்லச் சொல்ல எனக்கு காகத்தின் மேல அனுதாபமும், நரியின் மேல கோபமும் வந்தது. ஏமாத்துக்கார நரி...

சரி இந்தக் கதைய எப்பிடி முடிக்கலாம் எண்டு தாஸீம் சேர் கேட்ட ஞாபகம். நான் சொல்லத் தொடங்குவேன்.

இப்பிடி இப்பிடியே தொடர்ந்தும் நரி ஏமாத்தி வந்திச்சாம். எனக்குள் தாஸீம் சேர் புகுந்து வெளிப்படுவார். சேர் கவனமா என்ர கதையைக் கேட்பார்.

ஒரு நாள் காகங்கள் எல்லாம் கூடி ஏமாத்து நரி வடையப் பறிச்சுக் கொண்டு ஓடும்போது துரத்திப் பிடிச்சுதாம், ஆயிரக்கணக்கில் காகங்கள் சேர்ந்ததால நரிக்கு ஒண்டுமே செய்ய ஏலாம திக்குமுக்காடிச்சாம். காகங்கள் கழுகுகளா மாறி நரிட உடம்பெல்லாம் கொத்தத் தொடங்கினதாம். நரியோ ஊளை விட்டுக் கொண்டு ஓட்டம் பிடிச்சுதாம்..."

இப்ப அந்தக் கதைய நினைச்சுப் பாக்கிறன், நாங்கள் காகங்கள்... சிறகு வெட்டப்பட்ட காகங்கள்... நரிக்குப் பயந்து ஓடுறம். என்ர கண் கலங்குது.

போன வருசம் ஊருக்குள்ள விழுந்த ஷெல் சேருட வீட்டுக்குள்ளயும் விழுந்து... மௌத்தாப் போயிட்டாரு...

நானும் மையத்து வீட்டுக்குப் போய் அழுதுபோட்டு வந்தன்.

இப்போ, எனக்கு ஏனோ மனம் இருப்புக் கொள்ளயில்லை, "ஏனிப்படிச் செய்தவியள்... ஏனிப்படிச் செய்தவியல்" எண்டு முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

நான் இரவு பட்ட அவஸ்தை சொல்ல முடியாதது எல்லாமே எனக்கு இருட்டாத் தான் தெரிஞ்சுது.

புத்தகக் கட்டை எடுத்து வாப்பா தைச்சுத் தந்த யூரியா பேக்கில் கட்டி வச்சன். வேற எதையும் எடுக்க வேணுமெண்டு எனக்குத் தோன்றயில்லை. மனசு செல்லத்துரையண்ணற்ற அரிசி மில் இரைச்சல் மாதிரி அடிச்சுக் கொண்டிருந்தது.

இருட்டோட இருட்டா பக்கத்துக் கிழுவை வேலிக்குள்ளால் நுழைஞ்சு வேர்க்க விறுவிறுக்க ஓடிறன். பின் காணித் தோட்டத்துல உம்மம்மாவும் நானுஞ் சேர்ந்து போட்டிருந்த பனம் பாத்தியின் மேல் முகம் குப்புற விழுறன். அப்பிடியே கொஞ்ச நேரம் பனம் பாத்தியக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு கிடக்கிறன். பனங்கிழங்கென்டால் எனக்குச் செரியான ஆசை. இன்னும் இரண்டு மூண்டு நாளயில கிழங்கு பிடுங்கலாம். பூரான் தின்னலாம் என்டு நினைக்கைக்குள்ள வாயில தேனூறுது. ஆனா....

பனம் பாத்திய விட்டு எழும்புறன். பிறவும் ஓடுறன்... மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க சீலனை அழைக்கிறன்.

சீலன் என் பக்கத்து வீட்டுக் கூட்டாளி. என்னோடு படிப்பவன். விளையாடுபவன். ஒன்றாயிருந்து ஒரு கோப்பையில சாப்பிடுபவன்.

அவனையுமா பிரிந்துப் போகப் போறன். என் நெஞ்சில் அப்பக்காரப் பாக்கியம் அக்கா மாவிடிக்கும் இடி.

சீலன் சத்தங்கேட்டு வந்தான். சேதி கேட்டுக் கலங்கினான். முகஞ் சோர்ந்தோம். கட்டித் தழுவியழுதோம். கண்களில் வழிந்த கண்ணீர் துளிகள் ஒன்றாய்க் கலந்தன.

என்னிடமோ அவனிடமோ வார்த்தைகள் இல்லை. நிமிசங்கள் மௌனமாய் ஓடின... எனக்கு அடிக்கடி தேத்தண்ணி போட்டுத் தரும் பவளம் அக்கா - சீலனின் அம்மா கலங்கியபடி நிண்டா.

நான் என்ர பொக்கட்டுக்குள்ள கசங்கிய-படியிருந்த பத்து ரூபாய்த் தாளை எடுத்து அவன்ர கைக்குள்ள திணிக்கிறன். போன கிழமை கணக்குக் கொப்பி வாங்கிறதுக்கு கடனாய் வாங்கிய காசு.

என் சித்திரக் கொப்பியை எடுத்து வந்தான்.

அவர்கள் வீட்டுக் குப்பி விளக்கு வெளிச்சத்தில் முற்றத்துக் காற்று ஒவ்வொரு தாளாய்ப் புரட்டுது. சித்திரக் கொப்பியில் படம் ஓடுது. நெஞ்சுத் திரையில் நினைவு ஓடுது.

அழகான பூ இரண்டு ஒண்டை ஒண்டு கொஞ்சின படி -

நானும் சீலனும் கைகோர்த்தபடி நடக்கிறோம்... இளங்காலைப் பனியில் முழுகிய புல்வெளி எங்கள் கால்களில் நீரபிஷேகம் செய்து கொண்டிருக்க, துள்ளிக் குதித்து ஓடினபடி சுற்றித் திரியும் புன்னியாரங்குளத்து வயல் வெளி நினைவில் நீண்டு தெரிகிறது.

அடுத்த கட்டம்.

சீலன் துவக்கோட வாறான். ஆமிக்காரன் மாதிரி. நான் தலைதெறிக்க ஓடுறன். தாயிழந்த கன்றுக்குட்டிபோல.... பள்ளிக்கூடத்து நாடகத்துக்கு நாங்க போட்ட வேசமது. அவன் நல்லாய் நடிப்பான். சின்ன வயசிலேயே சிவாஜி மாதிரி வசனம் பேசுவான்.

நான் வரைஞ்ச அந்தக் கட்டம் இப்ப உண்மையாகிற மாதிரி அவன்ர கண்களும் கலங்குது.

அடுத்த தாள் புரளுது.

அன்ரனியின் கிறிஸ்மசுக்கு நான் போட்ட நத்தார் பப்பா வேஷம். கள்ளுக் கடைக் கந்தை-யற்ற வயிறு ஞாபகத்துக்கு வர அவனையறியாமல் சீலன் சிரிக்கிறான். நானும் புன்முறுவல் பூக்கிறன்.

தூரத்தே சிவசம்பர் வீட்டிக்கடியன்



நன்றி - நூலகத்திட்டம்



ஊளையிட்டுக் கொண்டிருந்தது. இடையிடையே சப்பாத்துக் கால்களின் குரல் கேட்டது. பயந்து பயந்து என் வீட்டுக்குள் நுழைகிறேன்.

"ம்.. ஆ... ம்.... ஆ..."

முத்தாவின் அழைப்போசை காதில் விழுந்தபோது தான் அதின்ர ஞாபகமும் வந்திச்சு. நேரம் தப்பாமல் இரவுச் சாப்பாட்டுக்காக அது மணியடிக்கும் நேரமிது. அதுக்கெங்கே தெரியப்போவுது நாங்க அத விட்டுப் பிரியப் போற சங்கதி.

பின் தோட்டத்துக் கூலான் பிலாவில் இருந்து கணக்க இலைகள் சொரிஞ்சு கிடக்கும். விளையாட்டுப் போட்டியில எறியப் பயன் படுத்துகிற ஈட்டி மாதிரி முன்னுக்குக் கூரையுள்ள தடியில நான் பின்னேரத்தில ஒவ்வொன்றாய் மாலை கோர்க்கிற மாதிரி குத்தி வைச்சிருந்த பிலாயிலைகளை எடுத்து வந்து முத்தாவுக்குப் போடுறன்.

அதுக்கு செரியான பசி. தின்னத் தொடங்கியது.... நான் முத்தாவைப் பிடிச்சுத் தடவி விடுறன். அதின்ர முகத்தை என்ர முகத்தோட சேர்த்துக் கொஞ்சுறன்.

"முத்தா.. உன்ன விட்டுப் பிரியப் போறன்டா... உனக்கு இனி யார் தான் துணையோ..." என்டு தேமித் தேமி அதோட பேசிறன்.

"ஷெல் வெடிக்கும், நிலக்கண்ணியிருக்கும் பார்த்து நடந்துக்கோ.... சத்தம் கேட்டா பங்கருக்குள்ள பதுங்கிக் கொள்...." என்டு ஏதோவெல்லாம் புலம்புறன்.

உம்மா மால்ச் சுவரோட சாய்ஞ்சு பேயறஞ்ச மாதிரி நிண்டு பார்க்கிறா. அவவுக்குத் தெரியும் முத்தா மீது எனக்குள்ள அன்பு பற்றி.....

எங்கட அப்பா நாட்டுக்குப் போகைக்க பெரிய ஆட்டுப்பட்டியே வச்சிருந்தவர். பிறகு கலவரம் வந்த பிறகு நாட்டுக்குப் போறது ஆபத்து. அடிக்கடி குண்டு வெடிப்பு, ஆள்க் கடத்தல், ஊடரங்கு எண்டு வந்ததால உம்மம்மா மறிச்சுப் போட்டா.

சின்னதுல இருந்து எனக்கு ஆடென்டா உயிரு. அதாலதான் அப்பா இத வாங்கித் தந்தார். இது வடிவான ஆட்டுக் குட்டி. மூண்டு வருசத்துக்கு முந்தி மோத்தாப் போன எங்கட பூட்டி மாதிரி வெள்ள் அவட மனசு போலவும். அதால தான் "முத்தா" என்டு அவட பேரையே வச்சன்.

இதக் கொண்டு போக எனக்கு நல்ல விருப்பம் தான். உம்மாட்டக் கேட்டாச் சம்மதிப்பா. ஆனா... முத்தா பசி தாங்காது. வேளைக்கு வேளை சாப்பாடு கொடுக்கணும். நாங்க போற இடத்தில புல்பூண்டோ, இலை, குழையோ இல்லாட்டி... எனக்குள் விடை விளங்காத பெரிய கேள்வி.

முத்தா விடிய விடியக் கத்திக் கொண்டு நின்டிச்சு.

அப்பா கொம்புக் கத்தியோட போய்க் கொட்டிலுக்குள்ள கட்டியிருந்த சிவப்பி, அதின்ர கண்டு கறுப்பி, காளை மாமாட்ட வாங்கின சுழியன் எல்லாத்தின்ர கட்டுக் கயிறுகளையும் அறுத்து விடுறார். வைக்கல், தவிடு எல்லாம் அள்ளி வைக்கிறார்.

உம்மம்மா கோழிக்கூட்டை அப்படியே இராசம்மாக்காவிடம் கையளிக்கிறா. நான் முத்தாவைச் சீலனிடம் அன்பளிக்கிறேன்.

அக்கம் பக்கத்திலயிருந்து பவளமக்கா, லீலா ரீச்சர், செல்லப் பிள்ளையார் பெண்சாதி, மார்க்கண்டு விதானையார் எல்லோரும் வந்து அனுதாபம் கூறுகினம்.

எவ்வளவு தூரம் நடந்திருப்பம். இன்னும் எவ்வளவு தூரம் தான் நடக்கிறது என்ர கேள்வி எல்லாற்ற கண்களிலயும் இருந்தது.

நடந்து வந்த றோட்டைத் திரும்பிப் பார்க்கிறன்.

மீலாத் விழா ஊர்வலத்தில கொடிபிடிச்சுக் கொண்டு போற றோட்டு, சித்திரப் புதுவருசத்தில சைக்கிளோட்டப் போட்டி நடக்கிற றோட்டு, நத்தார் பாப்பா ஊர்வலம் போற றோட்டு, சீலனோட சேர்ந்து வைகாசிக் காவடியாட்டம் பார்க்கிற றோட்டு, எங்கட ஊராக்கள் கனபேரச் சுட்டுப் பிணமாய்ப் போட்டிருந்த றோட்டு ஏன்....

முல்லை முஸ்ரிபா

எனக்கு நினைக்க... நினைக்க... வேதனை நீராவியூத்தது மாதிரி மேல கிளம்புது. தார் றோட்டு எனக்கு இப்போ கறுப்பாய்த் தெரியயில்ல. சிவப்பாய் இரத்தச் சிவப்பாய்.... தெரியுது. வயலுக்குப் போன வாப்பா பம்பரடியில மாட்டுப்பட்டு மௌத்தாப் போன றோட்டு.

என் கால் நகங்களிலிருந்து ரத்தம் வடியுது. உம்மாவைத் திரும்பிப் பார்க்கிறன். எல்லாத்தையும் இழந்த சோகத்தோட தள்ளாடித் தள்ளாடி நடக்கிறா... வாப்பாவைக் கபுறடியில விட்டுட்டு, அவரின் பிள்ளைகளை இடுப்பிலும், தெருவிலும், வயிற்றிலொன்றுமாகச் சுமந்தபடி.....

அவவுக்கும், வாப்பாவின் நினைப்பு வந்திருக்க வேண்டும். அழுவதும், பின்னர் சீலைத் தலைப்பை எடுத்துக் கண்களைத் துடைப்பதுமாக நடக்கிறா.

சின்னவன் காய்ந்து கறுத்து மெலிந்து பூரணமக்கா சந்தைக்கு விற்கக் கொண்டு வரும் கத்தரிக்காய் மாதிரி. பாவம் அவன்.

எங்கட வாப்பா தண்ணிமுறிப்பில மூனா முறிஞ்சு உழைச்சவரு. தானும் தன் பாடுமா உள்ளவரு. மற்றவர்களுக்கு உதவி செய்ய வேணுமென்டு நினைப்பவர். நான் சின்னவன் எல்லோரும் படிச்சு நல்லா வரவேணுமென்டு கனவு கண்டவர். ஒரு நேரத் தொழுகை தவறாத சீதேவி எங்கட வாப்பா. "அவர் இருந்திருந்தா எவ்வளவு உதவியாயிருக்கும்....." என்டு உம்மா கூட நினைச்சிருப்பா. ஆனா வாப்பா இருந்தா எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார். பாவம் மெல்லிய மனச் அதிர்ச்சி தாங்க மாட்டாதவரு.

எனக்கு வயிறு பிராண்டுது. சின்னவனுக்கும் பசித்திருக்க வேணும். ஓவென்டு சத்தம் போட்டு அழுறான். அவன்ர பசிய நெனச்சு என் பசி அடங்கிப் போவுது.

ஒரு மரத்துக்குக் கீழ் எல்லோரும் களச்சுப்



போய்க் கிடக்கிறம். நிழல் வெயிலாய் சுடுது. காத்து நெருப்பா வீசுது. நான் கண்கள மூடிக் கொண்டு கிடக்கிறன் என்னை அறியாத அயர்வில்.

எல்லோரும் போலினில போறோம். அரைக்கா றாத்தல் பாணும், பருப்பும் தாராங்க. உம்மம்மாவைப் பின்னுக்கு நின்ட பொம்புள இடிச்சுப் போட்டா. அவ விழப் பார்க்கிறா. நான் ஓடிப் போய்ப் பிடிக்கிறன். பாண் துண்டு கீழ விழுது. பக்கத்தில நின்ட மனிசன் பாண் துண்டை பாய்ஞ்சு பிடிக்கிறார். அண்டைக்கு எங்கட வீட்டுக் கோழிக் குஞ்சைப் பருந்து பிடிச்சுதே, அது மாதிரி.

ஒரு தோட்டத்தில குவிச்சு வைக்கப்பட்டிருக்கிறம். தேங்காய்க் குவியலைப்போல. கனபேர் வந்து பார்க்கினம். பழைய உடுப்பு, பாய், சோத்துக் கோப்பை என்டு நிறையச் சாமான் தருகினம். எங்கட சனம் ஆளை ஆள் அடிபட்டுக் கொண்டு சாமான் கேக்குதுகள்.

நான் பள்ளிக் கூடம் போக முடியாம, அழுதழுது அபுசாலி முதலாளிக்கு வெங்காயம் நாட்டப் போறன்....

சின்னவனின் அழுகைச் சத்தம் என்ர காதை அடைச்ச போது தான் திடுக்கிட்டு கண் திறக்கிறன். அப்பத்தான் அந்த இடத்துக்கு வந்து சேருகிறார் அப்பா. சைக்கிளை ஸ்ராண்ட் தட்டி நிப்பாட்டுறார். என் பார்வை ஹான்டிலில் கொழுவியிருந்த கலனில் குத்திட்டது. தண்ணிக்கானுடன் எனக்குக் கிட்ட வந்து தலையில கட்டியிருந்த வெள்ளச் சால்வையை அவிட்டவாறு உட்காருகிறார். வெள்ளைச் சால்வை தூசிபட்டுக் கலர் மாறியிருந்தது. மனசு போல.... அவரது உடம்பு வியர்வையில் குளித்திருந்தது. முகம் சோகத்திலும் கோரத்திலும் இறுகிக் கல்லாய்க் கிடந்தது. கலனில் இருந்த தண்ணில கோப்பையில் வாத்து எனக்குத் தாரார். என்ர தாகத்தைப் புரிஞ்சிருப்பார் போல....

பிறகு அவரும் சில முடக்கு ஊத்திக் கொண்டார். அல்ஹம்துலில்லாஹ் என்டு ஆண்டவனுக்குச் சுகூர் செய்றார். பசியும் தாகமும் ஒரே நேரத்தில் தீர்ந்து போனதான திருப்தி அவருக்கும் எனக்கும்.

சின்னவன் இன்னமும் அழுகிறான். எல்லோருஞ் சேர்ந்து உனக்கு என்ன வேண்டுமென்டு கேட்டாச்சு. அவன் கதறிக்கொண்டேயிருக்கிறான். அப்பா கிட்ட வாரார். அவனத் தூக்கித் தோளில போட்டபடி அங்குமிங்கும் உலாத்துகிறார்.

"...குஞ்சா... சின்னா..., என்ன கண்ணா வேணும் சொல்லுடா.." என்று கெஞ்சுறார்.

"... எனக்கு ...எனக்கு ...என்ட" சொல்ல மாட்டாம பிறகும் அழுகிறான். திரும்பிப் பார்த்து வீட்டுப் பக்கமா கையைக் காட்டி அழுகிறான். அவன் வீட்ட கூட்டிப் போகும்படி அழுகிறான் தன்ர பொம்மையைக் கேட்கிறான்.

அப்பா வீடு கட்டக் கல்லரிஞ்ச போது அந்தச் செம்பாட்டுக் கழியில இருந்து நான் என்ர சின்னக் கையால, மணி குழைச்சு மண் குழைச்சு செய்த பொம்மை.... இனி எப்படி வரும். அந்த மண்ண இனி எப்படித் தொடுவம். எங்கட மண்ணை நினைக்கும் போது மனசு பொங்குது அது சின்னவன்ர கண்கள் வழியா வழியுது...

வெயில் உச்சத்தில நிற்குது. நான் புத்தகப் பையைச் சுமந்தவாறு நடக்கிறன்.

தையல் கடை தைபு மாமா மெஷின் ரொப்பை வலது தோளிலிருந்து இடதுதோளுக்கு மாத்துறார். தோள் மூட்டு நொந்திருக்க வேணும். பாவம் மனிசன். சோறு போடுறதுக்கு அதுவாவது உதவுமென்டு நினைச்சிருப்பார் போல....

மீரா மொய்தீன் சாச்சாவின் தோளில் வீச்சு வலையொன்டு கிடக்குது. "... இது பழசு தான் மோன..... ஆனா, நந்திக் கடலில றால் வீசி காசு காசா உழைச்சுத் தந்த தங்க வலை..." என்டு சொல்லுறார்.

கதிசம்புக் கிழவி ஊன்று தடியில் உடம்பைத் தாங்கியபடி சற்று நின்று ஆறுகிறா..." என்ர வயசுக்கும் இப்படித் துன்பப்படயில... என்ர ஆண்டவா, இது என்ன சோதனையோ... நாரிய நிமித்திறா. சில நேரம் அழுதபடி நடக்கிறா. அவ தன்னோட எடுத்து வந்தது இந்தக் கம்பு மட்டும் தான்.

எனக்கு மனசில இன்னும் கலக்கம் கூடுது.

புத்தகக் கட்டிலிருந்த தமிழ்ப் புத்தகத்தை விரிச்சு வாசிச்சபடி நடக்கிறன். வாசிக்கிறதென்பது எனக்கு நல்லாய்ச் சுவாசிக்கிற மாதிரி. சுத்தியிருக்கிற சோகங்களை மறந்து கொஞ்சத் தூரம் நிம்மதியாய்ப் போகலாம்.

சின்னதிலயிருந்து நான் நல்லா வாசிப்பன். உரத்துச் சத்தம் போட்டு வாசிப்பன். தேத்தண்ணிக் கடை காசீனர் பேப்பர் வாசிக்கிற மாதிரியென்டு வாப்பா அடிக்கடி சொல்லுவார்.

வாப்பாட்ட நான் விளையாட்டுச் சாமான் வாங்கிக் கேக்கிறதில்ல. கதைப் புத்தகம், பாடப்புத்தகம் தான் வாங்கித் தரச் சொல்லுவன்.

வாப்பா வாங்கித் தந்த புத்தங்கள் எனக்குப் பாரமாத் தெரியல்ல் வாப்பாவையே தூக்கிக் கொண்டு போற மாதிரி லேசாக் கிடக்கு.

இப்பத் தான் எங்கட வகுப்புச் சேரச் சந்திக்கிறன். அவரும் புத்தகக் கட்டையும், அவருட புள்ளயையும் சுமந்து கொண்டு நடக்கிறார்.

இந்த முறை ஸ்கொலசிப்ல நான் பாஸ் பண்ணுவனென்டு உறுதியாய் நம்பினவர். வீட்டில கூப்பிட்டு நல்லாப் பாடஞ் சொல்லித் தந்தார். அவற்ற பாரத்தையும் வாங்கிச் சுமக்க வேணும் போலயிருக்கு. இப்பத்



தான் அவர் என்னைக் காணுறார். எனக்குக் கிட்ட வாறார். எனக்கு அவரப் பார்க்கச் சங்கடமா இருந்தாலும், அவரோட கதைக்க வேணும் போலயிருக்கு.

என் நெஞ்சுக்குள்ள அடஞ்சிருக்கிற கேள்விகளைக் கேட்க வேணும் என்டு உந்தலாயிருக்கு.

சேர், சிரிக்கிறார். இது வழமையான வகுப்பறைச் சிரிப்பு இல்ல் அது அகதிச் சிரிப்பு நானும் பதிலுக்குப் பல்லக் காட்டுறன்.

நல்லாக் கிட்ட வந்து என்ர தலையைத் தடவுறாரு. முதுகில தட்டி விடுறாரு. வகுப்பில கணக்குச் சரியாச் செய்து காட்டினா பாராட்டுவாரே அது போல. அப்படியென்டா நான் அகதியாப் போறதும் சரியென்டு அர்த்தமா?

".....:அழியாத சொத்துக் கல்வியொன்றுதான் என்பதைப் புரிஞ்சு கொண்டாய்..." என் யூரியா பேக்கினுள் இருப்பது புத்தகக் கட்டு என்பதை அவர் புரிஞ்சு கொண்டார்.

"..... சேர் நீங்க சொன்னீங்க. கல்விய எந்தத் துன்பத்திலயும் கைவிடக் கூடாதென்டு. ஆனா.. இனிமே என்னால படிக்க முடியுமா சேர், எந்த ஸ்கூலில படிக்கிறது சேர்... ஸ்கொலசிப் பாஸ் பண்ணுவேனா சேர்...."

அவர் சங்கடப்பட்டிருக்க வேணும். முகபாவம் பேசியது. ".... ஆண்டவன் கைவிட மாட்டான். பயப்படாதே, நானிருக்கிறன். உதவி செய்ய..." எனக்கு கொஞ்சம் நம்பிக்கை பிறந்தது.

"இப்ப எங்க போறம்.., எப்படி இனி வாழுவோம், இருக்க வீடு கிடைக்குமா.. நாங்க திரும்பி வாரதுக்கு இந்த றோட்டு இருக்குமா...?"

என் நெஞ்ச வில்லிருந்து பிறந்த கேள்வி அம்புகள் சேரின் செவிகளைக் கொன்றன.

சேருக்குப் பதில் தெரியுமா?

எங்கட பள்ளிக்கூட ஞாபகம் வந்தது. கரும்பலகைகளில எல்லாம் புத்தகங்கள் காய்த்துத் தொங்குது. புத்தகத்தைப் பறிச்சுப் பறிச்சு தின்னுறம், தின்டு தின்டு கொட்டை போடுறம். மீண்டும் மீண்டும் புத்தகங்கள் காய்த்துக் கனியுது.. தின்டு திணறுகிறோம். திடீரென்று பேனாவெல்லாம் துப்பாக்கியா மாறிச்சு. .. நெடுங்கேணி நெடும் வீதி, துரத்தத் தொடங்கிற்று.. ஓடுறம்.. ஓடுறம்...

பள்ளிவாசல் நினைவு வந்தது. கடைசியாய் அப்பாவோட சுபஹுக்குப் போனேன். தொழுதேன். அழுதேன்.

இனியாரு தான் பாங்கு சொல்லுறது. யூசுப் அப்பாவும் எங்களோட தானே வாராரு.

சீலனும், சிவனும், சக நண்பர்களும் இப்ப என்னை நினைச்சு கவலைப்படுவார்கள். சாப்பிட மாட்டார்கள். பள்ளிக்கூடம் போகவும் மாட்டார்கள். எனக்கு இனி எப்படிக் கடிதம் போடுவார்கள். என் அட்ரஸ் தான் என்ன? அகதியூரா?

ஏன் தான் அந்த வரிச் சேட்டுப் போட்ட அண்ணமார் இப்படிச் செய்தவியள். எனக்குள் குடைந்து கொண்டிருந்தது. மனம் குமுறிக் கொண்டிருந்தது.

நேற்றுக் கூட நான் பள்ளிக்கூடம் விட்டு வரும்போது அஞ்சாறு அண்ணமார் நைனா மாமாட வீட்டில நின்டவியள்.

குரூஸ் அண்ணர எனக்குத் தெரியும். எங்கட அப்பாட கடையை எடுத்து ஒப்பீஸ் வச்சிருந்தவியள். அடிக்கடி நான் காணுறனான். ஆனா இரண்டு நாளா ஆரையும் காணயில்ல. எங்க போயிருப்பினம்.

எனக்குக் கவலை என்னென்டா...

ஆமி ரோந்து வார நாளையில எல்லாம் இராசையா அண்ணர் குடும்பம், சிவபாலன் அங்கிள் வீட்டார், கனகம் பாட்டி, அடுத்த தெரு தவத்தார் எல்லாம் எங்கட வீட்ட தான் வருவினம். இப்ப பாவம் அவையள் எங்க தான் போவப் போகினம்.

இனி அவங்கள எல்லாம் ஆமி என்ன செய்யுமோ. இத நினைக்கும்போதுதான் எனக்குக் கண்ணீர் வெளியில தள்ளிவிடும் போல கிடக்கு.

அதோ அந்த இடத்தில எல்லோரும் கூடி நிக்கினம். என்ன விசயமென்டு தெரியாது. அறிய வேணுமென்ட ஆதங்கத்தோட ஓடுறன். அழுகைச் சத்தம் கேட்குது. ஆளையாள் ஏதேதோ கதைச்சுக் கொண்டு நிற்கினம். ஒரு சின்னப் பிள்ளையிட அழுகைச் சத்தம் தெளிவா என்ட காதில விழுது. சின்னவன் பிறந்தபோது கேட்டுதே அது போல.

கூட்டத்த விலக்கிக் கொண்டு உள்ளே நுழையுறன். பொங்கல் கடையில காவடியாட்டம் பார்க்க நுழைஞ்ச மாதிரி.

எனக்குத் தலை சுற்றிக் கொண்டு வருது ஒன்டும் தெளிவாய் விளங்கயில்ல. ஒரு வடிவான சின்னக் குழந்தை கிடக்குது. அது என்னப் பார்த்து சிரிக்கிற மாதிரி எனக்குத் தெரியுது.

பக்கத்தில உம்மர் என்ர உம்மா தான் நீட்டி நிமிர்ந்து கிடக்கிறா. அப்பா தன்ர வெள்ளச் சால்வாயை எடுத்து உம்மாவைப் போத்துராரு.

சின்னவன் அழுது கொண்டு நிலத்தில கிடக்கிறான். அவன் பிறக்கும் போது வீட்ட வந்து வேலை செய்த ஆசியத்து வாப்பிச்சி சோகத்தோட நிக்கிறா. உம்மம்மா, இப்ப பெரிசாச் சத்தம் போட்டு அழுறா. அப்பா தலையில் கைய வச்ச மாதிரி இருக்கிறார். இந்த இடத்தில ஆட்கள் கூடுது.

எனக்கு விசயம் விளங்குது.

"உம்மா ஆஆஆஆ..." வானமுட்ட அழுறன். உம்மா ஏனென்டு கேட்கயில்ல. அப்படியே கிடக்கிறா. பக்கத்தில கிடத்தியிருந்த புள்ள அழுது, நான் ஓடிப்போய் அதத் தூக்கிறன்.

முன்னுக்குப் பாதை: முள்ளு நிறைஞ்ச பெரும் அடராய் விரியுது.... பின்னுக்குத் திரும்புறன் ஒரே இருட்டு: கும்மென இருட்டு அந்த கருமிருட்டிலும் என் மண்ணின் முகம் தெரியுது: உம்மாவின் வெள்ளை மனம் போல.

நன்றி - நூலகத்திட்டம்

# ஆணாதிக்கத்தை நிலை நிறுத்துவதில் வெற்றிகாணும் தமிழ், சிங்கள (குடும்ப) மஞ்சட் பத்திரிகைகள் !




சந்தையில் ஏகப்பட்ட சஞ்சிகைகள் முளைத்து விட்டுள்ளன. தமிழில் மாத்திரமல்ல சிங்களத்திலும் கூட. சிங்களத்தில் எண்ணிலடங்கா சஞ்சிகைகள் வெளிவருகின்றன. இது எந்தளவுக்கு சந்தையில் இவற்றுக்கான கேள்வி இருக்கின்றது என்பதை தெளிவு படுத்துகின்றது. கலர் கலரான இந்தச் சஞ்சிகைகளை பெருமளவு வாசிப்பவர்கள் பெண்கள் என்பது சில பத்திரிகைகள் செய்திருக்கின்ற ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆக பெண் நுகர்வோரை இலக்காகக் கொண்டு இவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

1977 ஜே.ஆர் ஆட்சியில் அமர்ந்ததோடு திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகமானது. அந்நிய பல்தேசியக் கம்பனிகள் இலங்கையில் கடைவிரிக்கத் தொடங்கின. அந்நியருக்கு நாட்டின் சொத்துக்களை தாரை வார்க்க தாக்குப்பிடிக்கக்கூடிய அரசாங்கம் தேவைப்பட்டது. தனக்குக் கிடைத்த 6இல் 5 பெரும்பான்மை பாராளுமன்றப் பலத்தைக் கொண்டு மாற்ற கடினமான அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. பல்தேசியக் கம்பனிகள் தமது சந்தையை நிறுவவும், நிலைநிறுத்தவும் தமது பொருட்கள் பற்றிய விளம்பரங்களை ஊதிப்பெருப்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. புதிய நுகர்பொருட்களை அறிமுகப்படுத்தி புதிய நுகர்பொருள் கலாசாரத்தை ஏற்படுத்துவதன் அவசியத்தை அவை உணர்ந்தன. இதன் விளைவாக மலினக் கலாசாரத்தை பரப்புகின்ற தந்திரோபாயங்களைக் கையாண்டன. இவற்றின் விளைவாக இலங்கையில் பாலியல் திரைப்படங்கள் தொடக்கம், மேற்கத்தேய கலாசார மோகத்தை ஏற்படுத்துகின்ற, போதைக்குள்ளாக்குகின்ற சஞ்சிகைகள் எல்லாம் கணக்கு வழக்கில்லாமல் வந்து குவிந்து கொண்டிருந்தன. திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக ஏற்பட்டு வந்த உற்பத்தி, உழைப்பு, வளங்கள் மீதான சுரண்டலையும் நாட்டின் நெருக்கடிகளையும் கண்டு இளம் சந்ததியினர் மத்தியில் எழுச்சிகர சிந்தனைகள் உருவாகாமல் அவை திசைதிருப்பப்படவும் இந்த நுகர்பொருள் கலாசார மோகம் திணிக்கப்பட்டன. போதைப் பொருட்கள் வகைவகையாக வந்து குவிந்தன. ரேஸ் புக்கிகள் வீதியெங்கும் முளைத்தன. பாலியல் தொழிலுக்குகுறிப்பாக சிறுவர் பாலியலுக்குப் -பேர் போன நாடாக உலக வரைபடத்தில் இலங்கைக்கு இடம் கிடைத்தது.

இவ்வாறான பின்னணியுடன் தான் தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகளுக்கு உள்ள மவுசை விளங்கிக் கொள்ள முடியும். இன்று இலங்கையில் தமிழ் பேசுவோர் பலர் வாசிக்கும் வாராந்தப் பத்திரிகையாக இருக்கும் தினமுரசு மற்றும் தமிழில் தற்போது ப்ரியா (இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை), ஜனனி (வாரப் பத்திரிகை), ரோஜா (வாரப்பத்திரிகை) போன்ற மலினப் (popular) பத்திரிகைகளைப் போலவே சிங்களத்திலும், சுவந்த, அரலிய, தருணி, சிரிகத்த, பிரியாதரி, எ, நவலிய, ரெஜின, ஏ, நேத்ரா, யுவதிபத்தி, மனாலிய போன்றவை முக்கியமாக வெளிவருகின்றன.

இந்த பத்திரிகைகளின் குவிதலுக்கு இன்னுமொரு முக்கிய காரணம் அச்சுத்தொழில் மற்றும் கணிணிச் செயற்பாடு அச்சுத்துறைக்குள் பெரும் பாத்திரம் செலுத்தத் தொடங்கியமை என்பன முக்கிய கவனத்துக்குரிய காரணங்கள்.

கலர், கலரில் வெளிவரும் இவற்றில் சினிமா "கசமுசாக்கள்", பாலியல் கதைகள், கிளுகிளுப்பூட்டும் காதல் கதைகள், வீட்டுச் சமையல் குறிப்புகள், அழகுக் குறிப்புகள், கேள்வி பதில், வைத்திய ஆலோசனைகள், என்பன பொதுவாக முக்கிய இடம் வகிக்கின்றன. கதைகளில் வீரசாகசங்கள், காதல், காமம், திகில், அந்தரங்கம் என்பன முக்கிய இடம் பிடித்தன.

ஆமர் வீதியில் உள்ள ஒரு பாதையோரக் கடையில் விசாரித்த போது அங்கு ப்ரியா-10, ஜனனி, 25, ரோஜா-15, தருணி-75, ரெஜின-35, சிரிகத்த-85, நவலிய-35, பிரிந்த,-40, பிரியாதரி-15, நேத்திரா-10, மனாலிய-25, யுவத்திபத்தி 15, ஏ 15 என்கிற ரீதியில் விற்பனையாவதாக அறிய முடிந்தது.

புறக்கோட்டையில் ஒரு நடைபாதை கடையில் விசாரித்த போது அங்கு சராசரியாக ப்ரியா-15, ஜனனி, 30, ரோஜா-20, தருணி-80, ரெஜின-60, சிரிகத்த-105, நவலிய-75, பிரிந்த,-450, பிரியாதரி-300, மனாலிய-25, யுவத்திபத்தி 15, ஏ 600 என்கிற ரீதியில் விற்பனையாவதாக அறிய முடிந்தது.

வாழ்க்கையில் அடைய நினைக்கும் பல விடயங்களை/கற்பனைகளை இவற்றை வாசிக்கையில் அந்தக் கணங்களில் உள்ளூர ரசித்து ஆனந்தம் கொள்கின்றனர். இதுவே அவர்களை அதிகமாக இவற்றைக் கவரப் பண்ணுகிற உளவியல். அந்த வகையில் ஏற்கெனவே சமூகத்தில் நிறுவப்பட்ட பழமைவாத புனைவுகளுக்குத் தீனி போடும் வகையில் இவை அமைகின்றன. அந்த ஐதீகங்களை மறுஉற்பத்தி செய்யும் வேலையையே இவை செய்து வருகின்றன. ஏலவே நிலை பெற்றுவிட்டுள்ள ஆணாதிக்க சமூக அமைப்பானது திட்டமிட்டு இந்த ஆதிக்க சித்தாந்தத்தை தொடர்ந்து நிறுவத் தேவையில்லை. ஏலவே நிறுவனமயப்பட்ட அது, இருக்கின்ற வாய்ப்புகளை வைத்துக் கொண்டு தன்னை தகவமைத்துக் கொண்டு தொடர்ச்சியாக நிறுவுகின்றது. அதற்கு தோதான வாய்ப்புகள் அனைத்தும் இந்த சமூக அமைப்பில் இருக்கின்றன. அப்படித்தான் இந்த சஞ்சிகைளைப் பார்க்க வேண்டியிருக்கிறது.



ஏற்கெனவே சமூகத்தில் நிறுவப்பட்ட பழமைவாத புனைவுகளுக்குத் தீனி போடும் வகையில் இவை அமைகின்றன. அந்த ஐதீகங்களை மறுஉற்பத்தி செய்யும் வேலையைய இவை செய்து வருகின்றன. ஏலவே நிலை பெற்றுவிட்டுள்ள ஆணாதிக்க சமூக அமைப்பானது திட்டமிட்டு இந்த ஆதிக்க சித்தாந்தத்தை தொடர்ந்து நிறுவத் தேவையில்லை. ஏலவே நிறுவனமயப்பட்ட அது. இருக்கின்ற வாய்ப்புகளை வைத்துக் கொண்டு தன்னை தகவமைத்துக் கொண்டு தொடர்ச்சியாக நிறுவுகின்றது.

இவ்வகையான சிங்கள சஞ்சிகைகளைப் பற்றி ஆராய்ந்த சிலர், இது போய் சேரும் தரப்பினர் யார் என்பதை இனங்கண்டபோது

பாடசாலை மாணவிகள், பாடசாலை கல்வி முடித்துவிட்டு தொழிலின்றி இருக்கும் இளைஞர் /யுவதிகள், படையினர், சுதந்திர வர்த்தக வலையப் பெண் தொழிலாளர்கள், மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கும் பணிப்பெண்கள் என்போரையே இவை அதிகமாக சென்றடைகிறது எனக் கண்டறிந்துள்ளனர்.

இப்பத்திரிகைகளில் பொதுவாக பேனா நண்பர்கள் பக்கம், வாசகர் கடிதங்கள் பக்கம், துணுக்குகள் என்பவற்றோடு "வைத்தியரின் பதில்கள்" எனும் பக்கமும் இருப்பது வழக்கம். இவை தமிழ், சிங்கள பத்திரிகைகளுக்கு பொதுவான பண்பாக உள்ளது. அவற்றில் கேட்கப்படும் கேள்விகட்கு மித்திரன் யோகா பாலச்சந்திரனைவிட மோசமான பதில்கள் கிடைக்கும். ஆதிக்க சமூக அமைப்பின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகின்ற ஆலோசனைகள், கருத்துக்கள் அவற்றில் வழங்கப்படுவது வழக்கம். முக்கியமாக இவற்றில் பாலியல் விடயங்கள் அடங்குவது பொதுவான பண்பாகக் காணப்படுகிறது. பாலியல் கேள்விகள் தான் அதிகம் கேட்கப்படுகிறதா அல்லது அவ்வாறான கேள்விகள் தான் வைத்தியரால்/பத்திரிகை ஆசிரியர்களால் தெரிவு செய்யப்படுகிறதா என்பது தெரியவில்லை. ஆனால் வழங்கப்படும் பதிலைப் பார்க்கையில் இவை கிளுகிளுப்பூட்டி ஆவலைத் தூண்டுகின்ற வகையிலேயே கேள்வியும் பதில்களும் அமைக்கப்படுகின்றன என்பது மட்டும் தெரிகிறது. பாலியல் பற்றிய கேள்விகள் இருப்பது ஆரோக்கியமான ஒன்று தான் ஆனால் இவ்வகைப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை வெறும் வியாபார உத்திக்காக மோசமான கருத்துக்களைப் பரப்புவதும், பிற்போக்கான ஆலோசனைகளை வழங்குவதும் முக்கிய கவனத்துக்குரியது. இவ்வாறான பாலியல் கேள்விகள் பற்றி உதாரணத்திற்கு தலா ஒவ்வொரு பத்திரிகையை எடுத்து அட்டவணை இட்ட போது இப்படி இருந்தது. பார்க்க அட்டவணை.

| பத்திரிகை | திகதி | மொத்த கேள்விகள் | பாலியல் கேள்விகள் |
|---|---|---|---|
| ரோஜா | 15 ஒக்டோபர் | 8 | 1 |
| ப்ரியா | 18 ஒக்டோபர் | 0 | 0 |
| ஜனனி | 24 ஒக்டோபர் | 6 | 5 |
| தருனி | 11 ஒகஸ்ட் | 5 | 3 |
| பிரிந்த | 23 ஒகஸ்ட் | 5 | 4 |
| நவலிய | 23 ஒகஸ்ட் | 5 | 2 |
| நேத்திரா | 30 ஒகஸ்ட் | 12 | 6 |
| சிரிகத்த | 30 ஒகஸ்ட் | 7 | 5 |

பெண்ணின் உடலை அங்கம் அங்கமாக காட்டி கவரப்பண்ணுவது வியாபார உலகின் முக்கிய உத்தியாக கைக்கொள்ளப்படுகிறது. இவ்வாறான ரசனைகளுக்கு பழக்கப்படுத்துவதன் மூலம் அதில் வாசகர்களைப் பெற்றுக் கொள்வதும், அதன் மீது அடிமை கொள்ளச் செய்வதும், அவ்வாறு திட்டமிட்டு உருவாக்கிய வாய்ப்பை பயன்படுத்தி தமது சந்தையை நிறுவுவதும் மூலதனத்தின் சாமர்த்தியமான உத்தி அல்லவா?

உதாரணத்திற்கு ஜனனியில் வெளிவந்த ஒரு கேள்வி பதில்

அன்பின் அண்ணா, நான் 17 வயது மங்கை. 15வது வயதில் நான் பருவமடைந்தேன். நான் எனது பக்கத்து வீட்டு உறவினர் ஒருவரால் கற்பழிக்கப்பட்டேன். ஒருமுறை மட்டுமல்ல பலமுறையும் என்னை அவன் கற்பழித்தான். அவன் (ஆணுறை) பாவித்தே உறவு கொண்டான். அவன் எங்கள் வீட்டிற்கு மிக நம்பிக்கையானவன். நான் சற்று அழகாகவும் கட்டுடல் கொண்டவளாகவும் இருப்பதனால் எனது கிராமத்து ஆண்கள் சிலர் என்னை விரும்பிக் கடிதம் தந்தனர். அக்கடிதத்தில் ஒன்று அவனிடம் எப்படியோ கிடைத்ததால் என்னை மிரட்டி வீட்டில் கடிதத்தைக் கொடுக்கப் போவதாகக் கூறியே கூறுவதாக சொல்லியே என்னை உறவு கொள்ள வைத்தான். தற்போ து இளைஞர் ஒருவர் என்னை விரும்புவதாகக் கூறி இரண்டு மாதமாக எனக்கு அவருடன் பழக்கம் உண்டு. இந்நிலையில் என்னைக் கற்பழித்த இளைஞன் தொந்தரவு தந்து கொண்டேயிருக்கிறான். வீட்டில் இதனைச் சொன்னால் காதலனைக் கொல்வேன் என்கிறான் இவன். எனக்குப் பயமாக இருக்கிறது. மேலும் எனது முதலிரவு நாளன்று உண்மை தெரிந்து விட்டால் நான் உயிரோடு வாழவே மாட்டேன்... தற்கொலைக்குக் கூட முயற்சித்தேன். இதற்கு நல்ல முடிவொன்றைத் தருமாறும், தனியார் வைத்தியரிடம் சென்று ஆலோசனை பெற்று எனது கன்னித்தன்மையின் நிலையை அறியலாமா எனவும் பதில் தாருங்கள்.

அன்பின் வாசகிக்கு, உடனடியாக அந்தக் கயவனிடமிருந்து விலகுங்கள். அவன் ஒரு காமவெறியன். இது போன்ற காமப் பேய்கள் விரைவிலேயே இதற்கு தண்டனை அனுபவிப்பார்கள். அவன் பயமுறுத்தியிருக்கிறான் மற்றும்படி ஒன்றும் செய்யமாட்டான். மிரட்டலுக்கு அஞ்சவேண்டாம். பெற்றோரிடம் ஏதேனும் கூறினால் அதனை சமாளிக்கலாம். கெட்ட கனவாக எண்ணி இனி வாழுங்கள். <u>இனி கற்பைக் காப்பாற்றிக்கொள்ள எதையும் செய்யத் தயங்க வேண்டாம். பணம்/புகழையும் விட கற்பு பெறுமதி மிக்கது மறந்து விட வேண்டாம்.</u>

இந்த வகையான பதில்கள் ஏற்படுத்தப் போகும் விளைவுகளும், கருத்தியல் நிலைநிறுத்தல்களும் கவனிக்கத்தக்கவை. கற்பு குறித்தும், புனிதம், தூய்மை என்பன குறித்த ஆணாதிக்க எதிர்பார்ப்புகளும், நிறுவல்களும் மீள உறுதி செய்யப்படுவது இப்படித்தான். அதுவும் குறிப்பாக பெண்களை இலக்காகக் கொண்டு விற்பனைக்காகத் தயாரிக்கப்படும் இந்தப் பத்திரிகைகள் ஏற்படுத்திவரும் விளைவுகள் நீண்டகாலத்தில் ஆபத்தானவை. இவ்வகையான பத்திரிகைகள் நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களையே அதிகம் போய் சேர்வதாக இப்பத்திரிகைகளுக்கு கிடைக்கின்ற கடிதங்கள் மற்றும் பிரதிபலிப்புகளைக் கொண்டு அறிய முடிகிறது.

மேற்படி மூன்று தமிழ் பத்திரிகைகளிலும் ஜனனியில் தான் இந்த வகையான கேள்விகள் அதிகம் இருக்கின்றன. ஜனனியில் அளிக்கப்படும் பதில்களும் ஆண் ஒருவரால் அளிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் வாசகர்களின் கேள்விகளாக தாங்களே தயாரித்து பிரசுரிக்கும் வேலையும் நடக்குதாம்.

பிற்போக்கு ஆதிக்க சித்தாந்தங்களுக்கு பலியாக்கப்பட்டிருக்கும் ஒரு சமூக அமைப்பு அதனை தொடர்ச்சியாக தக்கவைக்க இவ்வகை தொடர்பூடகங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இந்த நிலைமையை "பாலியல் கசாப்புக் கடைக்காரர்கள்" நன்றாகவே பயன்படுத்தி தங்களின் சந்தையை நிறுவி லாபங்களைக் குவிக்கின்றனர். இது ஒரு மோசமான சமூக அமைப்பு தொடர்ந்தும் நிலவ வழிவகுக்கிறது. திரும்பத் திரும்ப புனைவுகளுக்கும், பிற்போக்கு ஐதீகங்களுக்கும் பயன்படுத்துவதில் முக்கிய பங்காற்றுவதும் இவை தான்.

-என்.சரவணன்

நன்றி - நூலகத்திட்டம்



# தோழர் சாருமதியின் மறைவு காலத்தின் பாரிய இழப்பு!

-துரைரட்ணம்

சாருமதியின் குடும்பத்திற்கு வருமானம் தேடிக்கொடுத்தவர் தகப்பனார் (சாரதி). எட்டுப் பேர்களான குடும்பம். நிலைமை அடிப்படையில் வறுமை. எனக்கு அறிமுகமான காலத்தில் நான் வசிக்கும் பகுதியிலேயே (வெட்டுக்காடு) குடியிருந்தார்கள். இளமைப் பருவத்தில் துடியாட்டத்துடன் கூடிய துடிப்பான இளைஞன் வறுமையும் வெறுமையும் தீயது. ஆனால், யதார்த்தத்தில் நல்லது. ஏனெனில், மாற்றத்திற்கான உணர்வைத் தூண்டுகிறது" என்று மா ஓ கூறினார். இதற்கமைய யோகநாதனிடத்தில் வறுமை இருந்ததினால் ஆவேசம் இருந்தது. வெறுமையாக இருந்த இடத்தில் மார்க்சிய சிந்தனை இடங்கொண்டது. தோழர் சுபத்திரன் தான் தங்களோடு யோகநாதனையும் அரசியலுக்கு இழுத்தெடுத்தவராவர்.

அக்காலத்தில் தோழர் கிருஷ்ணக்குட்டியுடன் இணைந்து கொண்டிருந்த இளம் இரத்தங்களான தோழர்களுடன் சேர்ந்து புதிய வார்ப்புக்குள்ளானார். அதாவது மார்க்சிசத்திற்கு அடிப்படைத் தத்துவமாக இருக்கின்ற விஞ்ஞானம் தழுவிய இயங்கியல் பொருள் முதல் வாதம் என்னும் தத்துவத்தைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்ததோடு பாட்டாளி வர்க்க சிந்தனைகளான மார்க்சிசம், லெனினிசம், மாஓசேதுங் சிந்தனை ஆகியவைகளையும் கற்றுக் கொள்ளத் தொடங்கினார். "கருத்துக்கள் வானத்தில் இருந்து வருபவையல்ல. சமூகத்திலிருந்தே வருகின்றன" என்று மாஓ கற்பித்ததிற்கமைய யோகநாதன் நடைமுறை வேலைகளிலும் இறங்கினார். புத்தகங்களிலிருந்து கற்பது, நடைமுறை வேலைகளிலிருந்து கற்பது, அரசியல் வகுப்புக்களிலிருந்து கற்பது, கலந்துரையாடல்களிலிருந்து கற்பது, விவாதங்களின் மூலமாக கற்பது, கற்றவைகளை கற்பித்தும் அசைபோட்டும் தன்னை உறுதிப்படுத்திக் கொள்வது என்று அவருடைய செயற்பாடுகள் தொடர்ந்தன. காலங்கள் உருண்டோடின. புடம்போடலுக்குள்ளானார். யோகநாதன் சாருமதியானார்.

(மேற்குவங்க டார்ஜியின் தோழர், இந்திய ஆயுதப் போராளிகளின் தலைவரின் பெயர் தோழர் சாருமஜூம்தார். அவரினால் ஆகர்ஸிக்கப்பட்ட யோகநாதன் தனது பெயரை சாருமதியாகக்கிக் கொண்டார்.

காலப்போக்கில் பல தோழர்களின் வாழ்க்கையில் எற்பட்ட மாற்றங்களோடு முக்கியமாக தோழர் சுபத்திரனின் மறைவு, நாட்டில் வடக்கு கிழக்கில் உருவாகிய அரசியல், ஆயுதப்புயல் ஆகிய காரணங்களினூடாக தான் தனிமையாக செயல்பட ஆரம்பித்தார். இந்த இடத்தில் தான் ஒரு முக்கியமான விடயத்தை நாம் கவனிக்க வேண்டும். நான் மேற்காட்டிய அந்த சுற்றுச், சூழல் அமைப்புகளுடன் இருந்து இயங்கிய ஒருவர் தனது முன்னைய சூழலை இழந்தும் மேலும் ஒரு ஒவ்வாத அரசியல் காற்று, ஆயுத அச்சுறுத்தல் போன்ற அழுத்தங்கள் இருந்தும் தனக்குக் கிடைத்த அரசின் சம்பளம் மற்றும் தான் சம்பாதித்த டியூட்டரி வருமானம் இவைகளுடன் "அப்பாடா" என்று ஓய்ந்திருக்கலாம். ஆனால், அவ்வாறு ஒதுங்கியிருக்க விரும்பவில்லை யோகநாதன். யோகநாதன் ஆற்றிய பணிகளில் (கட்சி அரசியல் காலத்திற்குப் பின்) மிக முக்கியமானவைகளை இங்கு குறிப்பிடலாம்.

1. மறைந்த தோழர் கிருஷ்ணக்குட்டி (விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டவர்) அவர்களை நினைவுபடுத்தி, கௌரவிக்குமுகமாக "வயல் என்னும் (யோகநாதனின்) சஞ்சிகையில் தோழருக்கு நினைவு வெளியிட்டது.
2. மறைந்த தோழர் சுபத்திரன் அவர்களின் கவிதைகளைத் தொகுத்து அவரின் சொந்தச் செலவில் நூலுருவில் வெளியிட்டமை.
3. "வயல்" என்னும் சஞ்சிகை ஒன்றை அவரின் சொந்த முயற்சியாலும் சொந்தச் செலவாலும் தான் முன்னின்று வெளியிட்டுக் கொண்டிருந்தது.
4. "பூவரசு" என்னும் இலக்கிய அமைப்பிற்கு முக்கிய பங்காளியாக இருந்து வழி நடத்தியது.
5. கலை இலக்கிய முற்போக்கு நிகழ்வுகளில் முன்னோடிப் பங்காளியாக செயல்பட்டமை.
6. கவிஞராகச் செயல்பட்டமை.
7. பெருந்தொகையான மாணவ மாணவிகளுக்கு முற்போக்கு சிந்தனைகளை விதைத்து அவர்களை கல்வியாளர்களாக்கியமை.



தோழர் கிருஷ்ணக்குட்டியுடன் சம்பந்தப்பட்ட அத்தனை தோழர்களினும் தோழரின் மறைவுக்குப் பின் அவருக்கென்று உருப்படியாக முதன் முதல் ஏதாவது ஒன்று செய்த ஒருவரென்றால் அது யோகநாதன் தான். அந்தப் பெருமை யோகநாதனையே சாரும். தோழர் "குட்டி" இறந்தபின் அவரின் நினைவாக ஏதேதோ செய்ய வேண்டும் என்று பலரும் கூறித்தானிருந்தனரேயன்றி எவரும் எதையும் செய்யவில்லை. ஆனால், யோகநாதன் தான் அவர் அனைவர்களுடைய எண்ணங்களையும் நிறைவேற்றினார். அவர் அத்துடன் நிற்கவில்லை. தோழர் கிருஷ்ணக் குட்டிக்கு ஒரு சிலை வைப்பதற்கும் ஆயத்தங்களையும் செய்திருந்தார். ஒரு சிற்பி (சிங்கள நண்பர்) மூலமாக நடவடிக்கையும் எடுத்திருந்தார். ஆனால் அது நிறைவெய்தவில்லை.

சோழர் சுபத்திரன், யோகநாதனின் அரசியல் வாழ்விற்கு மிக முக்கியமானவர். கட்சிக்கு மட்டக்களப்புப் பிரதேசத்தில் சிறந்த பங்காற்றியவர். அவருடைய மறைவிற்குப் பின் அவருடைய கவிதைகளை முழுமையாக வெளியிட்ட - முழுமையாக என்று கூறும் பொழுது - ஒரு சில கவிதைகள் ஏற்கெனவே தோழர் கந்தசாமி (சி.டபிள்யூ.ஈ) அவர்களினால் "இரத்தக்கடன்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டமை இங்கு நினைவு கூரப்பட வேண்டியது. ஒரு சிலர் முயற்சி பண்ணியிருந்தும் அது நடைமுறைக்கு சாத்தியக் குறைவாகவேயிருந்தது. அப்பணியை யோகநாதனே பொறுப்பெடுத்துக் கொண்டார். பின் அவற்றைத் தொகுத்து வெளியிட்டார். அதற்கான செலவினங்களையும் அவரே பொறுப்பெடுத்தார். கவிதைத் தொகுப்பு வெளியீட்டுக்கும் அவரே முக்கிய பங்காற்றினார். இதை யோகநாதன் அவர்கள் முற்போக்கு இலக்கியத்திற்குச் செய்த பெரும் பங்களிப்பாகக் கொள்ளலாம்.

"வயல் என்னும் சஞ்சிகையைப் பொறுத்தவரை அது ஒரு இலக்கிய வெளியீடு. மேலும் ஒரு குழுவால் ஆரம்பித்து நண்பர் ஆறுமுகம் அவர்களின் முக்கிய பங்களிப்புடன் வெளிவந்து கொண்டிருந்தது. காலப்போக்கில் அது ஸ்தம்பிதம் அடைந்த போது யோகநாதன் தனது சொந்த முயற்சியாலும் தனது சொந்த செலவாலும் இரு வெளியீடுகள் செய்தார். "வயல்" இல் கவிதை, கதை, கட்டுரைகள் இடம் பெற்றன. இப்பிரதேசத்தைச் சேர்ந்த பலருக்கு எழுத வாய்ப்புக்கள் கிடைத்தன. அந்த முயற்சி பாராட்டத்தக்கது.

"பூவரசு" என்னும் இலக்கிய அமைப்பிற்கு நண்பர் வாசுதேவன் (கவிஞர்) அவர்களின் ஒத்துழைப்புடனும் யோகநாதனின் கூட்டுழைப்பாலும் பல கலைஞர்கட்கு நல்லறிவு பெறும் வாய்ப்புக்களும், வழிநடத்தலைப் பெறும் சந்தர்ப்பங்களும் கிடைக்கப் பெற்றன.

மேலும், மட்டக்களப்பு கலை இலக்கிய முற்போக்கு நிகழ்வுகளில் முன்னோடிப் பங்காளியாக செயல்பட்டுக்கொண்டிருந்தார். தயவு தாட்சண்யமில்லாத கர்ணகடூரமான ஒரு விமர்சகர் யோகநாதன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தோழர் யோகநாதன் கணேசலிங்கன் அவர்களின் "குமரன்" சஞ்சிகை காலத்தில் இருந்து தொடர்ச்சியாக கவிதைகள் எழுத ஆரம்பித்தார். அவரின் கவிதைகள் "வயல்" இலும் இன்னும் சில பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கின்றன. ஆனால், வெளிவந்த கவிதைகளுடன் வெளிவராமல் வீட்டில் முடங்கிக் கிடக்கும் கவிதைகளுமுண்டு என்பது அறியத் தகுந்தது. கவிஞர் சாருமதி தனது கவிதைகள் மூலமாக பாட்டாளி வர்க்க உணர்வுகளை வெளிப்படுத்தினார் என்பது வெளிப்படை. அடக்கியொடுக்கப்படுகின்ற, சுரண்டப்படுகின்ற நாதியற்று கதிகலங்கி நிற்கின்ற மக்களின் சார்பாக நின்று "பாடியதோடு" இன்று இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கூட மதிக்கப்படாத தமிழ் மக்களின் குரலாகவும் பாடியுள்ளார். உதாரணமாக பின்வரும் கவிதையைக் குறிப்பிடலாம்.

றுகுணு சீமேந்து
தேசியச் சொத்து
வடக்கும் கிழக்கும்
சிங்களவர் சொத்து
இலங்கைத் தமிழர்
இந்து சமுத்திரத்தின் சொத்து
இறுதியில் மனித மரணங்களே
இலங்கையின் சொத்து
அப்பொழுது
மிஞ்சப் போகும்
எலும்புகளில்
இனத்துவம் இருக்குமா?
பூசாரியின் மண்டையோட்டிற்கும்
தேரரின் மண்டையோட்டிற்கும்
பேதங்கள் புரியுமா?
அதனால்
ஒரு இலங்கையன்
என்ற வகையில்
இந்த மண்ணில்
ஆளுங்கட்சிக்கும்
எதிர்க்கட்சிக்கும்
என்னால் அளிக்கக் கூடிய
சொத்து
இந்தக் கவிதை மட்டுமே.

*சாருமதி*

எதிர்காலத்தில் சாருமதி அவர்களின் கவிதைகள் மற்றும் இலக்கிய ஆக்கங்கள் எல்லாம் ஆய்வுக்குட்பட்டு தொகுக்கப்பட்டு நூலுருவில் வெளிவர வேண்டும்.

கவிஞர் சாருமதி, ஒரு கவிஞர் மட்டுமல்ல, தீவிர சமூக செயற்பாட்டாளர். கம்யூனிஸ்ட் இயக்கத் தோழர், தீவிர இலக்கிய விமர்சகர், ஒரு நல்ல ஆசிரியர். இத்தகைய பன்முக ஆற்றல் மிக்க சாருமதியின் இழப்பு நம் காலத்தின் பாரிய இழப்புகளில் ஒன்றாகும்.

## வேட்டுக்களை...

பூனை போல் நடிக்கப் போகிறார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் எவருக்கு வாக்களித்தாலும் கிடைக்கப் போகின்ற பலன் எதுவுமேயில்லை. சந்திரிகாவாக இருந்தாலென்ன ரணிலாக இருந்தாலென்ன இடதுசாரிகளின் வேட்பாளராக இருந்தால் என்ன எவரும் சிங்கள மக்களின் அபிலாஷைகள் என்ற வெற்றுத் தடுப்பைக் கடந்து வெளியே வரப் போவதில்லை. தேர்தல் முடியும் வரை தமிழ் மக்களின் பிரச்சினைகளில் உண்மையான கரிசனை கொண்டவர்கள் போல இவர்கள் நடிப்பதைத் தவிர வேறெதுவும் நடக்கப் போவதில்லை.

இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன தமிழ் மக்கள் குறிப்பாக வடகிழக்கு மக்களுக்கு தங்கள் சொந்தக் கால்களில் நிற்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதன்றி வேறு மார்க்கங்கள் இல்லை என்பது தான் நிதர்சனம்.

## சந்திரிகா...

ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் தான் கொடுத்த வாக்குறுதிகள் எவற்றையும் நிறைவேற்றாத பட்சத்தில் ஒரு பொது அபேட்சகரை ஆதரிப்பதே உகந்தது என கருத்துத் தெரிவித்துள்ளன.

ஜே.வி.பி.யின் சார்பில் நந்தனகுணதிலக போட்டியிடுகிறார். ஜே.வி.பி தனது இனவாத நோக்கை மறைத்துக் கொண்டு தற்போது ஏனைய இடதுசாரி சக்திகளைத் தனக்குச் சார்பாக அணிதிரட்ட முயன்றுள்ளது. இனவாதக் கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) மாதுளுவாவே சோபித்த தேரரை அல்லது முன்னை நாள் சுப்பிரிம் கோர்ட் நீதிபதி ராஜா வனசுந்தராவை நிறுத்தவுள்ளனர். இவை முடியாத பட்சத்தில் தினேஷ் குணவர்தனாவே போட்டிக்கு நிற்கலாம்.

நவீன தொழில் நுட்பம் பயன்படுத்தப்படும் தேர்தல் பிரச்சாரம்

எதிர்வரும் தேர்தலுக்கான பிரச்சாரங்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்த உள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகங்கள் சம்பந்தப்பட்ட பேச்சாளர் எஸ்.சிறிபதி தேர்தல் பிரச்சாரத்திற்கு தாம் பாவிக்கவுள்ள செய்மதி தொடர்பு கருவிகள் பற்றி எடுத்துக் கூறினார். இதன் மூலம் மூன்று மணித்தியாலத்திற்குள் 3இலட்சம் மக்களோடு தொடர்பு கொள்ள முடியும் எனவும் கூறினார். ஐ.தே.கவும் இதே வகையில் தமது வேட்பாளருக்கான பிரச்சார வேலைகளை முடுக்கி விட்டுள்ளது.

தேர்தல் எப்போது?

வீக் என்ட் எக்ஸ்பிரஸ் பத்திரிகை டிசம்பர் மாதம் 15ம் திகதிக்குள் தேர்தல் என்று கூறுகிறது. சண்டே டைம்ஸ் டிசம்பர் 11ம் திகதிக்குள்ளும் 25ம் திகதிக்குள்ளும் நடைபெறலாம் என்று கூறுகின்றது. சண்டே லீடர் டிசம்பர் 27ம் திகதியை குறிப்பிடுகின்றது.

டிசம்பர் மாதம் 10ம் திகதியிலிருந்து க.பொ.த (சாதாரண) பரீட்சை இடம் பெறவுள்ளது. அதனால் வாக்களிக்கும் நிலையங்களாக பாடசாலைகளைப் பாவிக்க முடியாத நிலை ஏற்படும். இன்னும் இம்மாதத்தில் முஸ்லிம்களின் ரம்ஸான் நோன்பும் ஆரம்பமாகவிருப்பதால், முஸ்லிம் அமைச்சர்கள் இக்காலத்தை தவிர்க்குமாறு கேட்டுள்ளனர். இதற்கிடையில் டிசம்பர் 25 கிறிஸ்மஸ் பண்டிகை காலமாகையால் தேர்தலை இக்காலத்தில் நடத்துவது உசிதமல்ல. ஆகவே தேர்தல் அடுத்த ஆண்டு ஜனவரி வரை தள்ளிப் போடலாம் எனவும் கூறப்படுகின்றது.

# 1990-1999



## காத்திருப்பு





என்னைத் துரத்தாதே
தயவு செய்து துரத்தாதே
உன் இதயத்தில் கூடு கட்ட வந்தேன்
என் சமாதான முட்டையை
அடைகாக்க வந்தேன்
தயவு செய்து துரத்தாதே
உன் இதயத்தில் இல்லையாயினும்
உன் இல்லத்தின் ஒரு மூலையில்
அல்லது உன் கூரை இடுக்கில்
அல்லது உன் கொல்லைப் புறத்தில்
அதுவும் இல்லையேல்
உன் சாக்கடை ஒதுக்கத்திலாவது
என்னை ஒதுங்கவிடேன்.
ஒரு சிறு கூடு
அதில் ஒரே ஒரு முட்டை
அது ஆயிரம் குஞ்சுகள் பொரிக்கும்.
உன் இதயத்தில் சமாதானப் பறவை
சிறகடித்துப்பறக்கட்டுமே
அதன் சடசடப்பில்
உன் இதயம் சிலிர்க்கட்டுமே
அது உன் இதயத்தைக்
குண்டுகள் போல் சல்லடையாய்த் துளைக்காது
என் நரம்புகளின் குருதியைப்
பீறி அடிக்காது
உன் இல்லத்தைக் குருதியில் நனைக்காது.
என்னை அனுமதியேன்
உன் இயத்தில் ஒரு சிறு கூடு கட்ட
அல்லது உன் சாக்கடை ஒதுக்கத்திலாவது.
பல்லாயிரம் ஆண்டுகளாக
நான் பறந்து திரிகிறேன்
வானில் இருந்து மண்ணுக்கும்
மண்ணில் இருந்து வானுக்குமாக
கடல்களையும் சமுத்திரங்களையும் தாண்டி
மலைகளையும் வனங்களையும் தாண்டி
மனிதனின் இதயத்தில் ஒரு சிறு இடம் தேடி.
நீ என்னைத் துரத்தி அடிக்கிறாய்
என் இறக்கைகளைத் துண்டித்து
கழுத்தில் சுருக்கிட்டு
பாதாளச் சிறையில் வீசி எறிகிறாய்.
எனக்கு மீண்டும் மீண்டும்
இறக்கைகள் முளைக்குமே
மீண்டும் மீண்டும் உன் சிறைகளைவிட்டு
சுதந்திர வானில் பறந்திடுவேனே.
இனியும் என்னைத் துரத்தாதே
என் இறக்கைகளைத் தறிக்காதே
உன் இதயத்தில் கூடுகட்ட வந்தேன்
என் சமாதான முட்டையை
அடைகாக்க வந்தேன்.
உன் இதயத்தில் அன்பு கசியட்டும்
அதன் இளஞ் சூட்டில்
நான் குஞ்சு பொரிக்கட்டும்
அதுவரை
இந்த மயானத்தில்
குருதியில் மிதக்கும் இப்பிணங்களின் நடுவில்
காத்திருப்பேன்
இன்னும் ஓர் ஊழியாயினும் காத்தே இருப்பேன்.

**நுஃமான் 20.09.1986**

## ஓர் அகதிக் கவிஞன் நிலவைப் பார்த்து.



நிலவே! இன்று நான்
பாடல் எழுதமாட்டேன்
ஒரு தற்காலிக வீட்டில்
சொந்தமாய் வாசலில்லை.
உரிமையோடு பூப்பறித்து முகர
ஒரு மரமில்லை.
நீ கூட எனக்கு ஓர் அந்நிய நிலவுதான்.
எனது வாசலில் விழுகின்ற உன்னுடைய வெளிச்சமும்
இந்த அந்நிய வாசல் ஒளியும்
எனக்குள்ளே பேதத்தைக் கிளப்பி மனநிலையைக்
கெடுக்கிறது.
நான் மூன்று தினங்களாய் அகதி.
இந்த உயிரையும் அதற்குள்ளே ஊறுகின்ற கவிதையையும்
காப்பாற்றி வெற்றிகண்ட ஒருவன்.
என் வீட்டைப் பார்த்தவர்கள் கூறுகிறார்கள்
அது மூக்குடைந்து விட்டதாய்
நான் நேசித்து வளர்த்த பூமரங்கள் எல்லாம்
மாட்டின் மலக் குடலில்
தங்கிப் பின்னர் வெளியேறி விட்டதென்றும்
அறிகிறேன்.
இங்கே —
சொந்த வானமில்லை.
நான் சுவாசிக்கின்ற காற்றுக்கூட
இன்னொரு வீட்டாரின் உடைமைபோல இருக்கிறது.
எப்படிப் பாடல் எழுதுவேன் நிலவே.
தொண்ணூறாயிரம் வெள்ளிகளையும், உன்னையும்
வானத்தையும்
தொலைத்த நிலையில்,
என் வண்ணத்துப் பூச்சியையும்
கட்டிலின் இடவில் வாழ்ந்த பல்லியையும்
இழந்த நிலையில்?
நீ மேகத்தை எடுத்து முகத்தை மூடிக் கொள்
கவிஞன் பெருமூச்சு விட்டால் குளிர் தென்றலும் கருகும்.

சோலைக்கிளி. (தொகுப்பு காகம் கலைந்த
கனவு.

## இன்னும் தமிழர் எல்லோரும் நித்திரையா?



இன்னும் தமிழர் எல்லோரும் நித்திரையா...
தலைபணிந்தேன் சகோதரரே...

1

அண்ணர்கள் நாங்கள் கொடுமை இழைத்தோம்.
உங்கள் மண்ணைப் பறித்தோம்
மாபாதகர்களாய் தொப்பூழ் கொடி அறுத்து
அன்னை மண் வயிற்றிருந்தும்மை எடுத்தெறிந்தோம்.
அதன் பின்னும் ஐந்து வருடங்கள்
வடக்கில்
கொழும்பில்
உலகத்து நாடுகளில்
"நானென்ன தம்பிக்கு காவலா"" எனக் கேட்கும்
ஆதாமின் காயினைப்போல்
அருளற்றுப் பேசி வந்தோம்.
இதன் பின்னும் கூட நீங்கள் எம்மை வெறுக்கவில்லை
எதிர்நிலை எடுக்கவில்லை
இன்னமும் எம்மை அண்ணா என நினைக்கின்றீர்.
என்ன கொடுமை இழைத்தோம் தமிழர்களே
என்ன கொடுமை நாங்கள் இழைத்து விட்டோம்.
என்னுடைய வாழ்நாளில்
வடபுலத்து முஸ்லிம் மனிதர்களேஉம்போல்
இன்னுமோர் மகத்தான இனத்தவரைக் கண்டதில்லை
இதுபோல மாண்புடைய உறவுகளை அறிந்ததில்லை.
இத்தனைக்குப் பின்னும் ஈழத்தின் குயிலான
என்னை அழைத்து ஒரு பாடல் பாடென்றீர்
எதைப்பாடத் தோழர்களே எவண் பாடதோழியரே
என் கண்ணீரை என் வெட்கத்தை
என் இனத்தின் வரலாற்றுத் தலைகுனிவை
கையாலாகாத
என் போன்ற தமிழ்க் கலைஞர்களின் பேடிமையை
எதைப்பாட தோழர்களே எவண் பாட தோழியரே
தவறிழைத்தோம் திருந்துவோம் என்றுலக எதிர்ப்பின் முன்
தலைவர்களே வந்து தலைசாய்த்துச் சொன்ன பின்பும்
இன்னும் சில அறிஞர்
ஏதேதோ நியாயங்கள்
எடுத்துரைக்கும் கயமைதனை
எதைப்பாட தோழர்களே எவண்பாட தோழியரே.

2

இந்துக்கடலாடி எழுந்து வரும் இளவாடை —
நீர் சிந்துகின்ற கூந்தல் துவட்டும் வடகரைகளிலே
நீங்கள் தொந்து வடித்த கண்ணீர்
இதுவரைக்கும் காயவில்லை.
அன்றே அகலிகை கல்லான எங்களது மண்ணுக்கு
மீண்டும் நீங்கள் வந்து
மிதிக்கும் வரை விடியவில்லை.
உங்களிடம் பறித்தெடுத்த நெஞ்சக் கனவுகளை
நினைவுப் புதையல்களை
உங்களது பிள்ளைகளின் எதிர்கால வரலாற்றை
மண்ணின்மேல் உங்களது மதலைத் தமிழ்
ஏன் மறைந்த தென்று அறியாத அங்கலாய்ப்பில்
உங்களது முன்னோரின்
எலும்புச் செல்வங்கள் உறங்குகிற
ஈமப் புதைகுழிகளை
அவர்கள் உதிரத்தில் செழித்த பழத்தோட்டங்களை
அந்த தோட்டங்கள் மத்தியிலே
வாழையடி வாழையென உங்கள் தலைமுறைகள்
"அல்லாகு அக்பர்"" என ஆர்ப்பரித்த பள்ளிவாசல்கள்
எல்லாம் முன் வைத்து
உங்கள் காலடியைத் தொட்டு
மன்னிப்பீர் என்றும் வாய் விட்டலறாமல்
என்னினத்தின் கை விலங்கு
ஒரு போதும் ஒடிவதில்லை.

3

பாதகத்துக்கு
வருடங்கள் ஐந்தாச்சு
தவறு, வருத்தம் திருத்துவோம் என்றபடி
தலைவர்கள் வாக்களித்து
வருடம் இரண்டாச்சு
என்ன தமிழர்களே எல்லோரும் நித்திரையா...
எல்லாம் அபகரித்து
நட்பில்லாச் சூரியனின் கீழே
உப்புக்களர் வழியே
ஓடென்று விரட்டி விட்ட
குற்றமெதுவும் அறியா இக்
குணக் குன்று மானிடங்கள்
ஐந்து வருடங்கள்
கண்ணீரும் சோறும் கலந்தே புசிக்கின்றார்...
இன்னும் தமிழர் எல்லோரும் நித்திரையா
இது தானும் தலைவர்களின் வாக்குறுதி முத்திரையா
ஆறாம் வருடமும் இவர்கள்
அழுவதே விதியென்றால்
அழியட்டும் இந்நாடு
அழியட்டும் எனது இனம்
அழியட்டும் என் கவிதை
அழியட்டும் எனது தமிழ்

**வ.ஐ.ச.ஜெயபாலன்**

## இல்லாமலாகுமா இந்த மண்



இந்த மண் எங்களின் சொந்த மண் இதன்
எல்லை யார் தாண்டெனச் சொன்னவன்
இந்த மண் எங்களை ஈன்ற மண் எமக்
கிடமில்லை என்றெவன் சொன்னவன்
தந்தையர் தோளெமைச் சுமந்த மண் அருந்
தாயாரின் நெஞ்சில் நாம் சாய்ந்த மண்
பந்தடித் தோடி நாம் ஒய்ந்த மண் தமிழ்
பாடியும் பேசியும் சுவைத்த மண்
வான் புகழ் நபிகளின் பாதையிற் பள்ளி
வாசலிற் தொழுகையிற் சேர்ந்த மண்
நோன்பினில் நல்லறஞ் செய்த மண் நாம்
நாள்தொறும் ஐம்முறை தொழுத மண்
காதலின் நினைவினில் மிதந்த மண் பல
கனவிடை ஆழ்ந்து மகிழ்ந்த மண்
வேதனை வெந்துய ருணர்ந்த மண் மனம்
தேறவும் ஆறவுஞ் செய்த மண்
அடிமையில் வாழ்ந்திட மறுத்த மண் தன்
உரிமையைக் காத்திடத் துணிந்த மண்
விடுதலை போரினில் எழுந்த மண் பகை
வியந்திட விந்தைகள் செய்த மண்
நாமெல்லாம் ஓரினம் என்ற சொல் தனை
மாற்றினோர் எங்களைத் தூற்றினோர்
போமென எங்களை ஓட்டினோர் செயல்
பார்த்தால் நெஞ்சம் உடைந்த மண்
வீடு நற் தொழில் போயினும் வெறுங்
கையராய் அகதிகள் முகாம்களில்
வாடினும் பன்முறை சொல்கிறோம் நாளை
வருகுவோம் எங்களின் சொந்த மண்.

–சிவசேகரம்

நன்றி - நூலகத்திட்டம்






## கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறியலாமா?

ஆசிரியர்கள் தேவகௌரி, சூரியகுமாரி, சரவணன் மூவரும் இணைந்து எழுதிய பெண் தன்னினச் சேர்க்கை (ஒரு பால் உறவல்ல அது. இரு இனத்தைச் சேர்ந்த இரு ஆண் / பெண்ணின் சேர்க்கை). அதில் ஒரு தவறான செய்தி வந்துள்ளது. "இதுவரை பெண் இயக்கங்கள் எதுவும் கருத்தாக்கத்திற்காக செயற்பட்டது கிடையாது. எம் மத்தியில் இருக்கும் பெண்ணியலாளர்கள் என்று கூறிக்கொள்வோர் பலர் லெஸ்பியன் உறவுக்கோ செயற்பாட்டாளர்களுக்கோ ஆதரவாகக் குரல் கொடுத்தது இல்லை. இதில் காட்டும் தயக்கங்களுக்கு முக்கிய காரணம் இலங்கையில் சகல பெண்கள் இயக்கங்களும் என்.ஜி.ஓ. வலையில் சிக்கியிருப்பதும், செயற்பாட்டுத் தளத்தில் தொலைநோக்குடனான பெண் இயக்கங்கள் இல்லாததும், பெண்ணியலாளர்கள் என அழைத்துக் கொள்வோர் இதனைப் பற்றிப் பேசிச் சமூக ஐதீகங்களுடனும் வைதீக சக்திகளுக்கும் முகம்கொடுக்கத் தயாரில்லாமையே என்றால் அது மிகையில்லை. ஆண்மைய சமூக கட்டமைப்புக்கே இது வெற்றியைத் தந்துள்ளது!

இக்கருத்துக்களில் பல போதாமைகள் உள்ளன. இவற்றிக்காக பெண்கள் என்.ஜி.ஓ. கூட்டமைப்பு விடுத்த அறிக்கையொன்றில் பெண் இயக்கங்கள் ஒருமித்துக் கையெழுத்திட்டும் அது ஆங்கிலத் தினசரியான த ஐலண்டில் வெளிவந்தது. இதைப்பற்றி இன்னுமொரு அறிக்கையில் அது மேலும் பல விடயங்களை அடக்கியது) பெண் இயக்கங்களால் வெளியிடப்பட்டது. இதன் பிரதிகளை கட்டுரை ஆசிரியர்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு விடயத்தைப் பகிரங்கமாக எழுதும் போது சற்றுக் கவனமாக இருக்க வேண்டும் என்பது இங்கு ஒரு முக்கியமான விடயம்.

இதைவிட முக்கியமானது: தன்னினச் சேர்க்கை என்பது பெண்களை மட்டும் உள்ளடக்கியதல்ல. ஆண்கள் ஆண்களைச் சேர்வதும் கூடச் சட்டத்தாலும் சமயத்தாலும் சமூகத்தாலும் மறுக்கப்பட்ட ஒரு உரிமை. ஆகவே நாம் அதற்கும் சேர்த்தே குரல் கொடுக்க வேண்டும். இது தனித்துப் பெண் இயக்கங்களின் செயலாக இருக்கக் கூடாது. சமூக மட்டத்தில் செயல்பட வேண்டிய விடயம் இது.

நாம் எழுதும் பல அறிக்கைகள் பல பத்திரிகைகளில் வெளிவருவதில்லை. தேவகௌரியும் சூரியகுமாரியும் இணைந்திருக்கும் நிறுவனங்களில் இவற்றைப் பிரசுரிப்பார்களா? அல்லாவிடில் ஏதும் வலையில் அவர்களும் சிக்கியுள்ளார்களா? கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறிவதை விடுத்து பெண் இயக்கங்கள் தங்களது சக்திக்கேற்பச் செய்யும் விடயங்களை வரவேற்று அதற்கு ஆதரவு நல்குவது பெண் இயக்கங்களுக்கு ஆரோக்கியமான ஒரு எதிர்காலத்தையும், நம்பிக்கைகளையும் முன்னேற்றத்தையும் கொடுக்கும் என்று நம்புகின்றேன். நாம் கூறும் கருத்துக்கள் அறிக்கைகள் ஆண் / பெண் இருபாலாரதும் பாலுணர்வுத் தேவையை அங்கீகரிக்கக் கூடியதாக இருப்பது முக்கியமான விடயம். ஆகவே இது பெண்ணிலைவாதிகளின் கருத்தோ அல்லது பெண் இயக்கங்களின் செயற்பாடாகவோ மாத்திரம் இருக்கக் கூடாது.

இன்னுமொரு முக்கியமான கேள்வி. சூரியகுமாரி தேவகௌரி பெண்ணிலைவாதிகளில்லையா? அவர்கள் ஏன் இதுவரை வீரகேசரியிலும், தினக்குரலிலும் குரல் கொடுக்கவில்லை? அவர்களுக்குப் பெண் இயக்கங்கள் மத்தியில் அங்கம் வகிக்க இன்னும் பக்குவம் வரவில்லையா? சரவணனும் இது நாள் வரை ஏன் எழுதவில்லை என்று நாம் கேட்கலாமா?

***செல்வி திருச்சந்திரன்***
***கொழும்பு -6***

## சமாதான...

தலைவராகக் கொண்டு ஆணைக்குழு அமைத்து செயற்பட்ட வேளையிலே பேரினவாத நெருக்குதலுக்குப் பணிந்து திருச்செல்வத்திற்கும் தெரியப்படுத்தாதுடட்லி எதேச்சதிகாரமாக வர்த்தமானிப் பிரகடனம் மூலம் அக்குழுவைக் கலைத்தார்.

அநீதியான இச்செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து முருகேசு திருச்செல்வம் தனது பதவியை இராஜினாமாச் செய்தார். எனினும், தனது இராஜினாமா உரையில் "புனித நகர்" விடயம் தொடர்பாக சிறப்பாகக் குறிப்பிட முடியாமல் போனதற்குக் காரணம் இது தொடர்பான கோவைகள் கே. சி. நித்தியானந்தனிடமிருந்து தக்க தருணத்தில் இவருக்குக் கிடைக்காமை ஆகும்.

பிரித்தானிய மற்றும் அமெரிக்கக் கலைக்களஞ்சியங்களின்படி "தமிழர் முதலில் குடியேறிய பகுதி" (First settlements of Tamils) திருகோணமலை" என்றுவரும் குறிப்பு, கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் அவர்களது பதிகத்தில் "குடிதனை நெருக்கிப் பெருக்கமாய் வாழ்ந்த" எனும் குறிப்பு தமிழ் மக்களின் இருப்பின் தொன்மையைச் சுட்டி நிற்கிறது. இந்நிலையில் கொழும்பின் பிரபல தனியார் தொலைக்காட்சி தனது செய்தியறிக்கையில் திருமலை தொடர்பான செய்திகள் வருமிடத்து மணிக்கூட்டு கோபுரத்தைக் காட்டுவது திருமலை நகர வரலாற்றை சரிவரப் புரிந்தவர்களுக்கு நெருடலாக அமைவதுடன் பேரினவாதக் குறியீடான "கொடி பறக்கும்" அக்கோபுரம் மனதை நோகடிக்கவும் செய்கிறதல்லவா? இதைவிடுத்து "திருக்கோணேஸ்வரம்" திருமலையின் அடையாளமாகக் காட்டப்பட பொறுப்பான ஊடகத்துறை என்ற வகையில் அவர்கள் ஆவன செய்வது வரவேற்கத்தக்கது.

"விடுதலைப் பயணத்தில் தங்குமடம் கிடையாது" என்று உரைத்த "சிந்தனைச்சிற்பி" சி. கதிரவேற்பிள்ளை அவர்களின் "அபிவிருத்தியும் தமிழீழ விடுதலைப் போராட்டமும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போக முடியாதவை. அடிமைத்தனத்தைத் துடைத்தெறியாமல் அபிவிருத்தி பேசுவது தமிழீழத்தின் அழிவிலேயே போய் முடியும்" என்ற வாக்கை இத்தருணத்திலே பாராளுமன்ற தமிழ்ப் பிரதிநிதிகள் மனத்திலிருத்த விழைய வேண்டும்.

"திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவர்கட்கான தோதல் தொகுதி ஒன்று நிறுவப்படும்: அங்கு சிங்களவர் ஒருவர் நிச்சயமாக வெற்றிபெறும் வாய்ப்பைப் பெறுவார்" என்று 1976ல் "சேருவில" தேர்தல் தொகுதி நிறுவப்பட முன்னரே - தீர்க்கதரிசனப் பார்வையுடன் செல்வநாயகம் அவர்கள் கூறியதை உள்வாங்கிச் செயற்பட மறந்ததன் விளைவு தான் திருமலை எரிமலையாகிக் கனன்று கொண்டிருப்பதன் காரணம் என்பதைப் புரிந்து கொண்டு திருமலை சமாதான நகராகப் பிரகனப்படுத்தப்பட்டு ஒன்றரை மாதமாகியுள்ள வேளையிலே "என்றும் விழிப்புணர்ச்சியோடு இருப்பது தான் விடுதலைக்கு நாம் கொடுக்கும் விலை" என்ற ஆங்கில அறிஞரொருவரின் வாக்கை உரத்துச் சிந்திக்க விழைவது காலத்தின் கட்டளையாகிறது.

## கொழும்பு வலயம் களனி வலயமானது எப்படி?

கொழும்பு வலயக் கல்விக் காரியாலயத்தினால் 1999ஆம் ஆண்டு கொழும்பு வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்களில் " கொழும்பு வலயப் பாடசாலை விளையாட்டுப் போட்டி " என்பதற்குப் பதிலாகக் "களனி வலய பாடசாலை விளையாட்டுப் போட்டி " எனப் பிழையாக அச்சிடப்பட்டுள்ளது. இலங்கையின் அரச கரும மொழிகள் மூன்றினுள் தமிழ் மொழியும் ஒன்று என ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பல வருடங்கள் ஆகிவிட்ட போதிலும், கொழும்பு வலயக் கல்விக் காரியாலயத்தின் இந்தத் தவறுக்கு யார் பொறுப்பு?

*- எஸ். எஸ். -*
*கொழும்பு*

## அவர்கள் அப்படியில்லை!

ஈ.பி.டி.பியினரால் தான் அவசரகாலச்சட்டம் நிறைவேறுகிறது எனும் பொய்த்தோற்றம் ஈ.பி.டி.பியினரின் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பின் மூலம் தகர்ந்து போய்விட்டது. தமிழ் முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு எதிர்த்தால் மட்டுமே அவசரகாலச்சட்ட நிறைவேற்றத்தைத் தடுக்க முடியும் என்று வழமைக்கு மாறாக சில விமர்சகர்களும் எழுதத் தொடங்கிவிட்டார்கள். இது விமர்சகரான வினோத்துக்கு மட்டும் விளங்காமல் போனது ஏன்? ஈ.பி.டி.பியினர் எதிர்த்தாலும் நிறைவேறக் கூடிய சட்டமொன்றிற்கு மேலதிக ஆதரவை ஈ.பி.டி.பியினர் கொடுத்ததென்பதை கட்சியின் வேலைத்திட்டங்களில் ஒன்றாகவே ஈ.பி.டி.பியினர் கருதியிருந்தனர்.

ஆனாலும் நாளாந்தப் பிரச்சினைகளின் அவஸ்தைகளினால் நாம் நலிந்து போய்விடக் கூடாது என்பதிலும் ஈ.பி.டி.பி. கவனமாகவே இருந்து வருகிறது. அவசரகாலச்சட்ட ஆதரவு மூலந்தான் மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளில் கணிசமான அளவேனும் ஈ.பி.டி.பியால் தீர்த்துவைக்க முடிந்திருக்கிறது.

சாத்தியப்படாத ஒன்றுக்காக கோரிக்கை வைத்துக் கொடியுயர்த்துவது தான் விளம்பரப் போராட்டம். நாமும் எதிர்க்கின்றோம் என்று மக்களை ஏமாற்றும் நடவடிக்கையும் அதுவே. ஆனால், இது மக்களின் தேவையையொட்டிய சூழலுக்குச் சாத்தியப்படக் கூடிய போராட்டம் என்பதை முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். ஈ.பி.டி.பியினரைப் பொறுத்த வரையில் அரசுக்கு ஆதரவோ, எதிர்ப்போ எதிலும் ஒரே முகம் மட்டும் தான் காட்டுகின்றனர்.

பாராளுமன்றத்தில் உரிமைகளுக்காக உரக்கப் பேசிவிட்டு பின்பு பேரம் பேசுவதற்காக அரசின் பின் கதவுகளைத் தட்டிக் கொண்டிருப்பவர்களல்லர் ஈ.பி.டி.பியினர். சாதிக்காத ஒன்றுக்காக உரிமை கோருவதும், சாதித்தவற்றின் வகைகளைச் சொல்லி விளம்பரம் தேடுவதும் ஈ.பி.டி.பியின் நோக்கமுமல்ல. அரசியல் பிழைப்புக்காக அறிக்கை விட்டுக் காலந்தள்ளும் கட்சியாக ஈ.பி.டி.பி இருந்திருந்தால் சாதித்தவற்றைச் சொல்லி நாளுக்கொரு அறிக்கையாவது விட்டுக் கொண்டிருப்பார்கள்.

***ஆர். சிவமூர்த்தி,***
***யாழ்ப்பாணம்***

## மீண்டும் பிரசுரிப்பீர்களா?

தங்களுடைய அரசியல் விமர்சனங்கள் மிகவும் அருமை. சகல அடக்கு முறைக்குட்படுத்தப்பட்டிருக்கும் தமிழ் மக்களுக்கு சரியான கண்ணோட்டத்தை வழங்குகிறது. இந்த நேரத்தில் என்னால் மறக்க முடியாததொன்று அது.

1994ம் ஆண்டு தேர்தல் சமயம், மே - ஜூலை மாதத்திற்கு இடைப்பட்ட காலத்தில் தாங்கள் எழுதிய தலையங்கம் "விடிவெள்ளியல்ல வால் நட்சத்திரம்" என்ற தலைப்பில் எழுதப்பட்டது.

அப்போது சந்திரிகாவை சமாதான தேவதையாக தமிழ் மக்கள் கருதிய காலம். மிகவும் தீர்க்கதரிசனமான தலையங்கம். பலராலும் போற்றப்பட்டது. பாராட்டி விமர்சிக்கப்பட்டது. எக்காலத்துக்கும் பொருத்தமுடையது. அதை மீண்டும் ஒரு முறை பிரசுரிப்பீர்களா? ஒரு முறை பிரசுரிக்கவும். தடுமாறும் தமிழினத்திற்கு ஒரு தலையாய மாமருந்து. தயவு செய்து பிரசுரிக்கவும்.

***வி.எஸ்.மூர்த்தி,***
*கொழும்பு 04*

## ஆனந் பட்வர்த்தனின் திரைப்பட வாரம்

**2:5 நவம்பர் 1999 பி.ப. 5.00 : 8.00 மணி வரை**

**பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டப**
**திரைப்பட அரங்கம்**

சர்வதேச புகழ்பெற்ற இந்திய விவரணப்' படத் தயாரிப்பாளரான **ஆனந் பட்வர்த்தனின்** திரைப்பட வார விழாவிற்கு தங்களை அழைப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். திரைப்படத் தயாரிப்பாளர் என்ற வகையிலும், அணுவாயுதங்களுக்கெதிரான சமாதானப் போராளி என்ற வகையிலும், சுற்றுச் சூழல் பாதுகாப்பாளர் என்ற வகையிலும் பட்வர்த்தன் தயாரித்தளித்துள்ள திரைப்படங்கள் இனவாதம் முதல் ஆணாதிக்ககம் வரையும், சுற்றுச்சூழல் பாதிப்பு முதல் ஒடுக்கப்பட்ட சமூகங்களைப் பாதிக்கும் வன்முறைகள் •வரையுமான பல விடயங்களை உள்ளடக்குபவையாக அமைகின்றன.

பின்வரும் திரைப்படங்கள் இவ்விழாவில் திரையிடப்படவுள்ளன.

**கடவுளின் பெயரால்** (In the name of God):
அயோத்யாவில் நடைபெற்ற கோவில் பள்ளிவாசல் முரண்பாட்டில் எதிரொலிக்கும் இந்து தீவிரவாத எழுச்சியும் இவ்வெழுச்சிக்கெதிரான நகர, கிராம ஏழை மக்களின் எதிர்ப்பையும் இத்திரைப்படம் விளக்குகின்றது.

**நண்பர்களின் நினைவாக** (In memory of friends):
இன்றைய முரண்பாட்டு நிலையில் இருக்கும் பஞ்சாப்பின் பின்னணியில் விடுதலை வீரர் பகவத் சிங்கின் சோஷலிசத்தின் அனுகூலங்களை விளக்குகின்றது.

**தந்தை, மகன் மற்றும் புனிதப்போர்** (Father, Son and Holy war) :
இந்தியாவில் மத வன்செயல்களின் ஆணாதிக்க அடிப்படையையும், ஆண்களின் பாதுகாப்பின்மைக்கும் இனவெறிக்குமிடையிலான தொடர்புகளையும் விளக்குகின்றது இத்திரைப்படம்.

**நர்மதா தினக்குறிப்பேடு** (Narmada Diary):
மேற்கு இந்தியாவில் நடைபெறும் நர்மதா பாதுகாப்பு இயக்கத்தின் அகிம்சைப் போராட்டத்தை விளக்குகின்றது.

**பம்பாய் எமது நகரம்** (Bombay our City):
உயிர்வாழ்வதற்காக பம்பாய் நகர சேரிவாழ் மக்கள் அன்றாடம் நடத்தும் போராட்டத்தை விளக்குகின்றது.

நன்றி - நூலகத்திட்டம்




# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே' - பாரதி

இல. 19,04, 01,01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.


## யுத்தம் நடாத்த அங்கீகாரம்?

ஜனாதிபதித் தேர்தலை பதவிக்காலம் முடிவதற்கு ஓராண்டுக்கு முன்பாகவே நடாத்தப் போவதாக அறிவித்தாயிற்று. தேர்தலுக்கான பிரச்சாரமும் ஜனாதிபதியால் தொடக்கி வைக்கப்பட்டு விட்டது. மீண்டும் ஒருமுறை தான் ஜனாதிபதியாக வருவதற்கு ஆதரவு தருமாறு மக்களிடம் வாக்குக் கேட்கப் புறப்பட்டு விட்டார் ஜனாதிபதி.

1994இல் அவர் 62வீத வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது, ஓராண்டு காலத்துள் ஜனாதிபதிப் பதவியை ஒழித்துவிடப் போவதாக அறிவித்தார். ஆனால் ஆண்டுகள் ஐந்து ஓடிய பின் இப்போது தான் ஒழிப்பதாகச் சொன்ன அதே பதவிக்காக இன்னும் ஒரு ஆறாண்டு காலம் ஆட்சியில் இருப்பதற்கான ஆதரவை மக்களிடம் கோரிக் கையேந்தி நிற்கிறார்.

அன்று அவர் ஜனாதிபதித் தேர்தலில் குதித்த போது 17வருட கால காட்டாட்சியை ஒழித்து, ஜனநாயகத்தை மீளமைக்கப் போவதாகவும் அதற்கு முதற்கட்டமாக ஜனாதிபதி முறைமையை மாற்றியமைக்கப் போவதாகவும் தெரிவித்திருந்தார்.

பாராளுமன்றத் தேர்தலில் ஒரேயொரு பெரும்பான்மை வாக்குப் பலத்துடன் ஆட்சிக்கு வந்த அவருக்கு, தனது பிரதம மந்திரிப் பதவியை ராஜிநாமாச் செய்து விட்டு ஜனாதிபதித் தேர்தலில் குதிக்கும் போது, தனக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்கு இல்லை எனபது பற்றி தெரியாமல் இருந்திருக்க நியாயம் இல்லை. ஆனாலும் அவர் ஜனாதிபதி பதவியை ஒழிக்கவும், புதிய அரசியலமைப்புச் சட்டத்தைக் கொண்டு வரவும், தனக்கு முடியும் என்று பலத்த ஆரவாரத்தின் மத்தியில் தெரிவித்தார்.

ஆனால் இன்று ஐந்து ஆண்டுகளுக்குப் பின் தனக்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்கு இல்லாததால் அதனைச் செய்ய முடியவில்லை என்றும், ஐ.தே.க. 16வாக்குகளைத் தந்து அதை மாற்றியமைக்கத் தனக்கு உதவவில்லை என்றும், ஐ.தே.கவைச் சாடுகிறார். எனவே தனக்கு ஒரு உறுதியான வெற்றியைத் தருமாறு கேட்டே தான் இப்போது ஜனாதிபதித் தேர்தலில் நிற்பதாக அறிவித்திருக்கிறார்.

தனக்கு ஜனாதிபதித் தேர்தலிலும்,பாராளுமன்றத் தேர்தலிலும் ஒரு தீர்மானகரமான வெற்றியைத் தந்தால் தான் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றியமைக்கவும் முடியும் என்று அறிவித்திருக்கிறார். அப்படிக் கிடைத்ததும் தான் இனத்துவ யுத்தத்திற்கு இரண்டாயிரமாம் ஆண்டு முடிவிற்குள் ஒரு தீர்வைக் காண முடியாவிட்டால் தான் அப்பதவியிலிருந்து விலகிவிடப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

வாக்குறுதிகளை வாரி வீசுவதில் அம்மையாருக்கு சமீபகால அரசியல் தலைவர்களுள் நிகர் அவரே தான். வீசிய வாக்குறுதிகளையும் அடிக்கடி 'திருத்தம்' செய்து புதிய வாக்குறுதிகளாக அறிவிப்பதிலும் அவரை யாரும் மிஞ்சிவிட முடியாது.

இந்த ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்கு இல்லை என்றால், அதைப் பெற முதலில் பாராளுமன்றத் தேர்தலையல்லவா வைக்க வேண்டும்? மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கும் என்ன சம்பந்தம்?

இன்னும் ஒரு ஆறாண்டு காலம் அதே அதிகாரம் மிக்க ஜனாதிபதிப பதவியில் இருக்கத் தான் இந்தப் பசப்பல் கதைகள் எல்லாம் கதைக்கப்படுகின்றன் என்பதைப் புரிந்து கொள்ள அதிக அரசியல் அனுபவம் தேவையில்லை. மிகக் குறைந்த பட்ச ஞாபக சக்தி இருந்தாலே போதுமானது.

ஆனால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும் அரசியல் யாப்பைத திருத்துவதும் பற்றி அம்மையார் கூறியவற்றையெல்லாம் வாக்காளர்கள் ஞாபகத்தில் வைத்திருக்கப் போவதில்லை என்பதுவும் சந்திரிகா அம்மையாருக்கு நன்றாகத் தெரியும். எனவே வாக்குறுதிக்கு மேல் வாக்குறுதி வழங்குவதற்கு அவர் எந்தத் தயக்கமும் காட்டுவதில்லை.

இப்போது புதிய ஒரு கோரிக்கையுடன் புதிய ஒரு வாக்குறுதிக்கட்டுகளுடன் நம்முன்வந்து நிற்கிறார்.

இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்கப் போகிறவர்கள் யார் என்பதுவும் அவர் எத்தனை வீத வாக்குகளைப் பெறப்போகிறார் என்பதுவும் எவ்வளவு தூரம் இந்நாட்டில் வாழும் தமிழ்,முஸ்லிம் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளைப் பெற்றுக் கொள்ள உதவ முடிந்திருக்கிறது?

ஜே.ஆர்.முதல் சந்திரிகா வரை எல்லாவிதமான ஜனாதிபதிகளையும் நாம் பார்த்து விட்டோம். எல்லா ஜனாதிபதிகளும் ஒத்துப் போகிற ஒரு விடயம் உண்டென்றால், அது வடக்குக கிழக்கில் வாழும் மக்கள் மீது தொடர்ந்து யுத்தத்தை நடாத்துவது தான்.

ஆக,இன்னொரு ஆறாண்டு காலம் தனது தலைமையில் நம்மீது யுத்தத்தை நடாத்த அங்கீகாரம் கோரி நம்முன் நிற்கிறார் அம்மையார்.

என்ன செய்யலாம்?

நீங்களே சொல்லுங்கள்,

மட்டக்களப்பு:"

# தேடாத இடமெல்லாம் தேடி ...

கடந்த மூன்று மாதங்களாக மட்டுநகருக்குள் நடைபெறும் தாக்குதல்களும் இதனால் ஏற்பட்ட இராணுவ இழப்புக்களும் இராணுவ மூலோபாய யுத்ததந்திரத்தை சிதறடிக்கச் செய்துள்ளது.

மட்டக்களப்பு நகருக்குள் புலிகள் எந்த வகையிலும் நுழைய முடியாது என்று நம்பிக் கொண்டு சாணுக்கும், முழத்துக்குமாக சோதனைச்சாவடிகளை அமைத்து காவல் காத்துக் கொண்டிருக்க புலிகள் ஆயுதத்துடன் நினைத்த மாத்திரத்தில் நினைத்த இடத்துக்கு வந்து தங்களின் 'அலுவல்களை' முடித்துக் கொண்டு போகக் கூடியளவுக்கு நிலைமை உள்ளது. படையினரின் பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாகச் சொல்லப்பட்ட மட்டுநகரை உளவியல் ரீதியாகவும், இராணுவரீதியாகவும் இராணுவம் தற்போது இழந்துள்ளது என்று தான் கூறமுடியும். இதற்கு அண்மைக் காலமாகப் புலிகள் நகருக்குள் நடத்திவரும் செயற்பாடுகள் சான்று பகர்கின்றன.

உதாரணமாக மட்டக்களப்பு மாவட்ட பொ.ஐ. முன்னணி அமைப்பாளரைப் புலிகள் தாக்க வந்த வேளை அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசாரை ஒரு அறையில் பூட்டி வைத்துவிட்டே புலிகள் தங்களது வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவ்வாறான புலிகளின் செயற்பாடுகள் இராணுவத்தினரில் ஒரு வகையிலான உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மட்டுநகரையும் அதனை அண்டியுள்ள கிராமங்களையும் தங்களின் கெரில்லாத் தளமாக புலிகள் மாற்றியுள்ளதாக இராணுவத்தினருடையே ஒரு அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் மீதான இராணுவ அடக்குமுறைகள் அதிகரித்துள்ளன. மக்களின் சுதந்திரமான நடமாட்டம் முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மாலை நேர ரோந்துகள் அதிகரித்துள்ளன. பொலிஸ் காவலரண்களில் பதிவு செய்யாதவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகின்றனர். மீண்டும் பழைய பாணியிலான கறுப்புச் சீருடையினர் அதிகரித்துள்ளனர். கண்டகண்ட இடங்களில் திடீரென தீவிர பரிசோதனை செய்யப்படுகின்றனர். இரவு பகல் என்று பாராது திடீர் சுற்றிவளைப்புக்கள் இவை எல்லாம் புலிகள் மீதான அச்ச உணர்வையும் இராணுவத்தினருடைய தற்காப்பு யுத்த நிலைமைகளையும் வெளிப்படுத்துகின்றன. இதனால் மக்களின் இயல்பு நிலைமை மிக மோசமாக மாறியுள்ளது.

புலிகளின் எழுச்சி நாட்களும், மட்டுநகரை மிகவிரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவோம் என்ற புலிகளின் அறிவிப்பும் இராணுவத்தை உசார் நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. இந்நிலைமைகள் மக்களின் இயல்பு வாழ்க்கையை இன்னமும் இறுக்கமாக்கிக் கொண்டே வருகின்றன. இதனால் இரண்டு விடயங்கள் நடக்கலாம். ஒன்று, மக்கள் புலிகளை வெறுப்பது, என்ன தான் நடந்தாலும் இன்றைக்குத் தமிழ் மக்களை ஒடுக்குகின்ற சிங்கள அரசுக்கும், அதன் இராணுவத்துக்கும் சவாலாக இருக்கும் புலிகளை மக்கள் நிராகரிக்கத் தயாராகவில்லை.

இந்த மனோநிலை புலிகளிடமிருந்து மக்களைப் பிரித்து வைக்கும் முயற்சிக்கு எதிராகவே எப்போதும் இருக்கும்.

இந்த நிலையில் இராணுவத்தினரின் உளவியல் ரீதியாக மக்களை பலவீனப்படுத்த முயற்சிக்கும் உத்தி தங்களின் மனதைத் தேற்றுவதாகவே வந்துமுடியும்.

இராணுவத்தினரின் இவ்வாறான செயற்பாடுகள் மட்டக்களப்பு நகரையும் அதனை அண்டிய பகுதிகளில் மட்டுமல்லாமல் மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெறுகின்றன.

வாழைச்சேனை கறுவாக்கேணியைச் சேர்ந்த கமலநாதன்(33) இராணுவத்தினரால் வக்கிரமாகக் கொலை செய்யப்பட்டதும் மண்டூரைச் சேர்ந்த தேவரசு (40) என்ற பெண் பொலிசாரினால் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு தாக்கப்பட்டதும்.

சித்தாண்டியைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை கருணனுக்குக் கழுத்தில் சயனட்டையும், கையில் குண்டையும் கொடுத்து சுடுவதற்கு முனைந்ததும் இராணுவத்தினரின் இவ்வாறான மனோநிலையின் வெளிப்பாடுகளாகும்.

ஒக்18 அன்று கதிர்காமத்தம்பி கமலநாதன் (33) வாழைச்சேனை, கறுவாக்கேணியில் உள்ள தனது தாய் வீட்டில் இருந்து 6.30 மணியளவில் புறப்பட்டு வினாயகபுரத்தில் உள்ள தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கும்போது வினாயகபுரம் குறிஞ்சிநகர் என்ற இடத்தில் 6.45க்குக் கல்குடா இராணுவத்தினரால் மறிக்கப்பட்டிருக்கின்றார். மறிக்கப்பட்ட இடத்தில் இருந்து 10 யார் தூரத்தில் இருந்த நாகலிங்கம் என்பவருடைய கடையடிவரையும் வந்தபின் இந்த கடைக்காரர்களைத் தெரியுமா என்று கமலநாதனிடம் இராணுவத்தினர், கேட்க



கொல்லப்பட்ட கமலநாதன்

தெரியும் என்று சொல்லவும் சரி இந்தக் கடையில் உன்னுடைய சைக்கிளை வைத்துவிட்டு வா என்று சொல்லி சைக்கிளை வைத்து விட்ட கமலநாதனை அந்த இடத்தில் இருந்து மாரை 7.00 மணியளவில் கூட்டிச் சென்றிருக்கின்றனர். தனது கணவனை இராணுவத்தினர் கைது செய்து விட்டனர் என்று கேள்விப்பட்ட மனைவி சுமதி (26) இரவு நேரத்தில் ஒன்றும் செய்ய முடியாததால் மறுநாள் காலை வாழைச்சேனை பொலீசுக்கு சென்றிருக்கின்றார். இங்கு நாங்கள் எவரையும் கொண்டுவரவில்லை என்று சொல்லியிருக்கின்றனர் பொலிஸார். அதன்பின் துறைமுக இராணுவம் முகாம் சென்றிருக்கின்றார். அங்கும் அதே பதில். அதன்பின் காகிதஆலை முகாம் அங்கும் அதே பதில். அதன்பின் மீண்டும் பொலீசுக்கு வந்து எனது கணவரைக் காணவில்லை என்று முறைப்பாடு செய்யப் போகின்றேன் என்ற போது கணவனைக் காணவில்லை என்று முறைப்பாடு போட இயலாது என்று பொலீசார் மறுத்து விட்டனர். இதைக் கேட்டுக்கொண்டு கல்குடா பொலீசுக்குப் போக முயற்சிக்கையிலேயே அவருடைய கணவனின் பிரேதம் வைத்தியசாலையில் இருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு சென்ற போது கமலநாதனின் பிரேதம் கல்மடு பட்டியடிச்சோலை என்ற இடத்தில் இருந்தே கல்குடா பொலீசாரினால் வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டிருக்கின்றது. கமலநாதனின் நெஞ்சு கத்தியால் ஒரு சாண்வரைக்கும் கீறி கிழிக்கப்பட்டிருந்தது. தொடை, கை என்பனவும் கத்தியால் வெட்டப்பட்டிருந்தன. நெஞ்சில் ஒரு வெடி. முழங்கால் அடித்து நொறுக்கப்பட்டு மேலுக்கு ஏறியிருந்தது. எவ்வளவு தூரம் வக்கிரமனப்பான்மையுடனும், வெறித்தனத்துடனும் படையினர் நடந்து கொண்டுள்ளனர் என்பது கமலநாதனின் கொலையில் இருந்து தெரிகின்றது. இத்தனைக்கும் கமலநாதன் சாதாரணமாக தச்சுவேலைக்குச் செல்லும் ஒரு கூலி .

இதுபோன்றே ஒக்.24 அன்று மண்டூரைச் சேர்ந்த சின்னத்தம்பி தேவரசு (40) என்ற பெண்மணி வெல்லாவெளிப் பொலீசாரினால் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு தாக்கப்பட்டிருக்கிறார். சப்பாத்துக் காலினால் நெஞ்சிலும் கன்னத்திலும் ஏறி மிதித்துள்ளனர். இத்தனைக்கும் சம்பவம் நடந்த நாவலடியில் எந்தப் பெண் பொலீசாரும் கடமையில் இருந்ததாகத் தெரியவில்லை. சம்பவதினம் மண்டூரில் இராணுவத்தினருடன் சேர்ந்து செயற்பட்டுவரும் இளைஞர் ஒருவரைப் புலிகளின் பிஸ்டல் குழுவினர் தாக்கிவிட்டுவரும் போது பொலீசார் துரத்தியதனால் பொன்னாங்காணி விற்றுக்கொண்டிருந்த தேவரசின் பக்கத்தில் வந்த இளைஞர் அதிலே தனது துப்பாக்கியைப் புதைத்து விட்டு சயனைட் அருந்தி இறந்திருக்கின்றார். இதற்காகவே பொலீசார் தேவரசுவை இவ்வாறு தாக்கியுள்ளனர். தற்போது தேவரசு சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

ஒக்.23 அன்று வயலுக்குச் சென்று வந்த கிருண்டிப்பிள்ளை கருணேசனை சித்தாண்டி சந்தியில் வைத்து மாலை 3.00 மணியளவில் பிடித்த தேசியத்துணைப்படை (ராசிக்குழு) கருணேசனின் கழுத்தில் சயனைட்டையும் கட்டிவிட்டு கையில் குண்டையும் கொடுத்துவிட்டு இவர் புலி. எங்களிடம் சரணடைய வந்திருக்கின்றார் என்று கூறிக்கொண்டு அதே இடத்தில் வைத்திருந்தனர். கருணேசனின் தாய் என்னையும் என்னுடைய மகனோடு கூட்டிப் போங்கள் என்று அழுதபிறகே இரவு 8.00 மணியளவில் விடுதலை செய்யப்பட்டார். கடந்த ஒரு வார காலமாக சித்தாண்டி பகுதியில் துணைப்படையினர் இரவுநேரத்தில் வீடுவீடாகச் சென்று கதவைத்தட்டி வீட்டை சோதனை இடுவதுவும் விசாரணை செய்வதுவும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

ஒக்.25ம் திகதி நடந்த சம்பவம் படையினரும் பொலிஸாரும் எவ்வளவு பீதியுடனிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

அன்று மதியம் பன்னிரண்டரை அளவில் கருவேப்பங்கேணி என்ற இடத்தில் சிவில் உடையில் இரண்டு பொலிஸார் நின்றிருக்கிறார்கள். அதேபோல் சிவில் உடையில் அவ்விடத்துக்கு மூன்று இளைஞர்கள் வர அங்கு நின்ற பொலிஸார் ஓடத் தொடங்கியிருக்கிறார்கள். தங்களைக் கண்டதும் ஓடிய இருவரையும் வந்தவர்கள் கலைத்துக் கலைத்துச் சுட்டிருக்கிறார்கள். ஜெயந்திபுரம் பொலிஸ் நிலையத்துக்குள் ஓடிய பிறகு தான் இவர்களுக்கு நிலைமை புரிந்தது. ஓடியவர்கள் பொலிஸாரென்று. முழுமையாக விசாரித்த பின்னர் தான் பொலிஸாருக்குத் தெரிந்தது புலிகள் என்றெண்ணிக் கலைத்துக் கலைத்துத் தங்களைச் சுட்டது துணைப்படையான ராசிக்குழுவினர் என்று.

மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய். மிரண்டு போயுள்ள படையினருக்கோ பேயாகத் தெரிவது அப்பாவிப் பொது மக்களல்லவா?

மட்டக்களப்பிலிருந்து ஜகன்

வெளியிடுபவர்: ச.பாலகிருஷ்ணன், இல.18/02, அலோசாலை, கொழும்பு 03, அச்சப்பதிவு:பிறின்ற்இன், இல.07,கெட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை. 26.10.1999